www.onlineuthayan.com

பக்கங்கள் : 36

# உதயன்

சுடர் 27
கதிர் 179

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 10 புதன்கிழமை (23/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### ஆஸி. சிறையில் வாடும் தமிழரை விடுவிக்கப் போராட்டம்

கான்பரா, மே 23
ஆஸ்திரேலியச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர் களை விடுவிக்கும் நடவடிக்கைகளில் 04

# தமிழ்க் கைதிகளை விடுவிக்கக் கோரி வவுனியாவில் பெரும் சத்தியாக்கிரகம்

## நகரசபை மைதானத்தில் நாளை ஆயிரக்கணக்கில் மக்கள் அணிதிரள்வர்

வவுனியா, மே 23
அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி நாளை வவுனியாவில் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெறவுள்ளது. சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மைதானத்தில் இந்தக் கவனயீர்ப்புச் சத்தியாக்கிரகம் காலை 7 மணி முதல் நடத்தப்பட உள்ளது.

தம்மை விடுவிக்குமாறு கேட்டு தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் பட்டினிப் போராட்டம் நடத்தி வருகையில், அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் நிபந்தனையற்று அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் இந்தச் சத்தியாக்கிரகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மகசீன் சிறைச்சாலை, கொழும்பு தடுப்புக் காவல் சிறைச்சாலை, அனுராதபுரம், களுத்துறை, வவுனியா, கண்டி சிறைச்சாலைகள் ஆகியன உட்பட நாட்டிலுள்ள பல்வேறு சிறைகளிலும் 800க்கும் 04

## தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவியுங்கள்

### நாடாளுமன்றில் சம்பந்தன் கோரிக்கை



கொழும்பு, மே 23
உடனடி நடவடிக்கைகளை முன்னெடுத்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

உண்ணாவிரதமிருந்து வரும் தமிழ்க்கைதிகளுக்கு அரசு உறுதியான உறுதிப்பாடொன்றை வழங்க வேண்டும் என்றும் சம்பந்தன் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் தாக்கப்பட்டுள்ள சம்பவத்தை வன்மையாகக் கண்டித்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் வடக்கு, கிழக்கில் மிதமிஞ்சிய இராணுவத்தின் பிரசன்னத்தை அரசு குறைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் 04

### மட்டக்களப்பு விபத்தில் இருவர் சாவு

மட்டக்களப்பு, மே 23
மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் ஏறாவூரில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இருவரை மட்டக்களப்பில் இருந்து ஓட்டமாவடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த கார் சத்துருக் கொண்டான் வளைவிலே 04

## போர்க்குற்ற விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

### அரசிடம் கோருகிறார் பொன்சேகா



கொழும்பு, மே 23
போர்க்குற்றங்கள் தொடர்பான எத்தகைய சர்வதேச விசாரணைக்கும் இலங்கை ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் - என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட இரண்டாம் நாளில் பி.பி.ஸிக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

போர் முன்னெடுப்புகளில் தாம் குற்றவாளிகளைப் போல சில இலங்கைத் தலைவர்கள் தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் அதில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009ஆம் ஆண்டு போரை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தை வழிநடத்தி வந்த பொன்சேகா, போரின் போது பல்லாயிரக்கணக்கான சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்ற கூற்றை அடியோடு மறுதலித்திருக்கின்றார்.

இந்தப் போர் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென அடிக்கடி 04



நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் கடை எரிந்து நாசமாகியது.

(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## மன்னார் ஆயரிடம் ரிஷாத் மன்னிப்புக் கோரவேண்டும்

### சபையில் கூட்டமைப்பு வலியுறுத்தல்

கொழும்பு, மே 23
மன்னார் ஆயரை தம்புள்ள பிக்குவுடன் ஒப்பிட்டு தரக்குறைவாகப் பேசிய அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்தச் சபையில் பகிரங்கமாகப் பொதுமன்னிப்புக்கோர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்த நாடு தன்னிறைவடைய வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். 04

## பொன்சேகாவை ஜெனரல் என்று அழைக்கலாமா?

### திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி

கொழும்பு, மே 23
முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் அவரை நேற்று முதல் ஜெனரல் சரத் பொன்சேகா என அழைக்க முடியுமா என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அரசிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த விடுதலையின் மூலம் சரத் பொன்சேகாவின் ஜெனரல் பதவி, ஓய்வூதியம், இராணுவத் தளபதியாக பதவி வகித்தமைக்கான அனைத்து வரப்பிரசாதங்களும் வழங்கப்படுமா என்பது குறித்து அரசு உடனடியாக நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இது குறித்த வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிடவேண்டும்.

சரத் பொன்சேகாவுக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்துத் தண்டனைகளையும் இரத்துச் செய்யுமாறு கோரி தனி நபர் 04

## கூட்டமைப்புடன் மு.கா. ஒருபோதும் இணையாது

கொழும்பு, மே 23
கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடும் திட்டம் ஏதும் கிடையாது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆராயவுள்ளதாகத் தகவல்கள் வெளியான நிலையிலேயே அந்தக் கட்சியின் பொதுச்செயலர் ஹசன் அலி அதனை மறுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவது தொடர்பான 04

## அரசைக் கவிழ்க்க ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்குவார் பொன்சேகா

### அடித்துக் கூறுகிறார் ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, மே 23
விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவாரா என பல்வேறு கோணங்களில் கேள்விகள் எழுப்பப்படும் இவ்வேளையில், அரசைக் கவிழ்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சரத் பொன்சேகா தனது ஆதரவை வழங்குவார் என ஐ.தே.க. எம்.பி. ஹர்ஷ டி சில்வா நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற இறக்குமதிகள், ஏற்றுமதிகள் சட்டத்தின் கீழான 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வகையிலான சுதந்திரம் என்பது எனக்குத் தெரியாது

## சரத் பொன்சேகா கூறுகிறார்



எந்தத் தடை வந்தாலும் எவ்வித பின்னடைவுமின்றி முன்னெடுத்துச் செல்வேன்.

கொழும்பு,மே 23


தனக்கு எந்த வகையிலான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை தான் இன்னும் அறியவில்லை என ஜனாதிபதியின் மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ள சரத் பொன்சேகா தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து வெளியேறி ஆதரவாளர்கள் மத்தியில் பேசிவிட்டு, தலவத்து கொடவில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று, குடும்பத்தினரைச் சந்தித்துப் பேசிய பின்னர் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

எனக்கு எவ்வகையிலான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியாது. மக்களுக்காக அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. எனினும், எந்தத் தடைகள் வந்தாலும், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான அரசியல் போராட்டத்தை எவ்வித பின்னடைவுமின்றி முன்னெடுத்துச் செல்வேன்.

நாட்டு மக்களின் செய்நன்றியை மறக்கமாட்டேன். அரசியல்வாதிகளின் பிடியிலுள்ள மக்களை மகிழ்ச்சியாக வாழவைக்க எனது வாழ்க்கையை அர்ப்பணிப்பேன். இதனை நான் உறுதியாகக் கூறுகிறேன் என்றார். (த)



முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டமையையிட்டு நேற்று நீர்கொழும்பு நகரில் பாற்சோறு வழங்கப்பட்டு கொண்டாடப்பட்டது.நீர்கொழும்பு - தளுபத்தை தேவாலயம் முன்பாக இடம்பெற்ற இந்த நிகழ்வை தளுபத்தை இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. மேல் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சட்டத்தரணி ரோஸ் பெர்னாண்டோ, நீர்கொழும்பு மாநகர சபையின் எதிர்கட்சித் தலைவர் ரொயிஸ் விஜித்த பெர்னாண்டோ ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு மக்களுக்கு பாற்சோறு வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தனர். (த)

# 600 ஆபிரிக்க யானைத் தந்தங்கள் கொழும்பில் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, மே 23

பல மில்லியன் ரூபா பெறுமதியான 600 ஆபிரிக்க யானைத் தந்தங்களை கொழும்பில் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். கென்யாவிலிருந்து டுபாய்க்கு அனுப்பப்படுவதற்கான இரு கொள்கலன்களில் இந்த யானைத் தந்தங்கள் அடைக்கப்பட்டிருந்ததாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கென்யாவின் மும்பாஸா துறைமுகத்திலிருந்து சில வாரங்களுக்கு முன்னர் இந்தக் கொள்கலன்கள் கப்பலேற்றப்பட்டிருந்தன. மண் நிரப்பப்பட்ட சாக்குப் பைகளில் இந்த யானைத் தந்தங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. யானைத் தந்தங்களின் உள்ளூர் விலை தெரியாததால் இவற்றின் உண்மையான பெறுமதியை மதிப்பிட முடியவில்லை எனச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படிகொள்கலன்களில் ஒன்றை மாத்திரமே தாம் திறந்து பார்த்ததாகவும் அவற்றில் 600 தந்தங்கள் இருந்தாகவும் சுங்க அதிகாரியொருவர் கூறினார். மற்றைய கொள்கலனிலும் இதேயளவான யானைத் தந்தங்கள் இருக்கும் என தாம் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இதில் இலங்கையர்கள் எவரும் சம்பந்தப்பட்டமைக்கான தகவல் இல்லையெனவும் அவர் கூறினார். (த)

# தமிழினிக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

கொழும்பு, மே 23

விடுதலைப் புலிக்ளின் மகளிர் அணித் தலைவியாகப் பணியாற்றிய தமிழினி என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் சிவகாமியை எதிர்வரும் யூன் மாதம் 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி நேற்று உத்தரவிட்டார்.

சந்தேக' நபரிடம் விசாரணை நடத்தப்பட்டு அதற்கான அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, பல முறை சட்டமா அதிபரை நினைவூட்டிய போதிலும் அது குறித்த எந்த வித ஆலோசனையும் இது வரை வழங்கப்படவில்லையென நீதிமன்றில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

தமிழினி தற்போது 44 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி உதயநகரை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் சிவகாமி (தமிழினி) சந்தேகத்தின் பேரில் 2009 மே மாதம் 20 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் கட்டளைகளை ஏற்றுச் சந்தேக நபர் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்து அங்கு வாழும் இலங்கைத் தமிழ்ப் பெண்களிடம் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்ததாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதற்கு முன்னர் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர். (த)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதற்குப் புதிய திட்டம்

கொழும்பு,மே 23

சமூகத்தில் இடம்பெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கான புதிய செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

ஐ.நா.சிறுவர் அபிவிருத்தி நிதியம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு ஆகியன ஒன்றிணைந்து, இந்தப் புதிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

இது தொடர்பான அடிப்படைப் பேச்சு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் எஸ்.பி. கரலியத்த தலைமையில் மேற்படி அமைச்சில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம் சிறுவர்கள், சிறுமிகள் மற்றும் வயது வந்தோருக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிறார்களின் பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள செயற்பாடுகள் குறித்து, வயது வந்தோரைக் கவனம் செலுத்த வைப்பது இந்தச் செயற்திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாகும்.

பிரதியமைச்சர் ஏ.எம்.எல்.ஹிஸ்புல்லா, ஐ.நா. அமைப்பின் சிறார்கள் நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதி ரேசா வொட்சன் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்தப் பேச்சில் பங்கேற்றிருந்தனர். (த-22)

# சரத் பொன்சேகாவுடன் இணைவார்? ஹிருணிகா

கொழும்பு,மே 23

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சோகாவின் அரசியல் நடவடிக்கைகளில் இணைவீர்களா? என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகா பிரேமச்சந்திரவிடம் கேட்டபோது இது தொடர்பாக தான் பின்னர் கருத்திற் கொள்ளவுள்ளதாக அவர் பதிலளித்துள்ளார்.

முல்லேரியா சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்காக கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு வந்திருந்த ஹிருணிகாவிடம் இது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். 'இது குறித்துப் பின்னர் பார்க்கலாம். இப்போது எதுவும் தெரியாது' என அவர் பதிலளித்தார்.

அதேவேளை துமிந்த சில்வாவின் வழக்குரைஞர்கள் தனக்கெதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடுத்தால் அல்லது துமிந்த சில்வாவைக் கைது செய்வதற்கான நீதிமன்ற உத்தரவைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நடைமுறைப்படுத்த தவறினால் தான் சர்வதேச ரீதியாக இந்த விடயத்தைக் கையாள வேண்டியிருக்கும் எனவும் ஹிருணிகா கூறினார். (த)




# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு பிளஸ் 2 தேர்வில் அதிக புள்ளிகள்

சென்னை,மே 23

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் மற்றும் முருகன் ஆகியோர் பிளஸ் 2 (தரம் 12) பரீட்சையில் அதிக மதிப்பெண்களை எடுத்துச் சாதனை படைத்துள்ளனர்.

ராஜீவ் காந்தி கொலையாளிகளான பேரறிவாளன், முருகன் ஆகியோர் பிளஸ் 2 பரீட்சைக்குச் சிறைச்சாலையிலேயே தோற்றியிருந்தனர்.

இந்த நிலையில், பேரறிவாளன் 1096 மதிப்பெண்களையும் முருகன் 983 மதிப்பெண்களையும் பெற்றுள்ளனர். முருகன் வணிகவியல் பரீட்சையில் மாத்திரம் 200க்கு 200 மதிப்பெண்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# பொன்சேகாவுக்கு எதிராக சுவரொட்டிகள்

கொழும்பு,மே 23

ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக கொழும்பு நகரின் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

செய்நன்றி மறந்த பாம்பு விடுதலை! மக்கள் எச்சரிக்கையாக இருங்கள்!! என்ற வாசகத்துடன் அந்தச் சுவரொட்டிகள்ஒட்டப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரெனப் பற்றி எரிந்தது கடை
# 1/2 மணியில் அனைத்தும் சாம்பல்

## நெல்லியடியில் நேற்றுப் பகல் அழிவு

*வடமராட்சி, மே 23*
*நெல்லியடி நகரப் பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீவிபத்தினால் இருவர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்து நாசமாகின.*

*நேற்றுக்காலை 9.45மணியளவில்யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கட்டில்கள், மெத்தைகள் உள்ளிட்ட தளபாட விற்பனை நிலையத்தில் திடீரென ஏற்பட்ட மின் ஒழுங்கினால் தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பற்றிய தீ கோரமாக எழுந்து பெரும் சுவாலையைக் கக்கிக் கொண்டிருந்தது.*

இந்த நிலையில் அங்கு திரண்ட மக்களும், பொலிஸ், இராணுவத்தினரும் தீயை அணைக்கப் படாதபாடு பட்டனர். ஒரு பகுதியினர் சொற்ப தளபாடங்களை இழுத்து வெளியே எடுக்க, ஏனையோர் வாளிகளால் தண்ணீரை எடுத்துவந்து ஊற்றிக்கொண்டிருந்தனர். இருப்பினும் பற்றிய தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அருகில் உள்ள நகைக்கடையும் தீப்பற்றிக் கொண்டது.

இதேவேளை இராணுவத்தினரின் பவுசர், பருத்தித்துறை நகரசபை, கரவெட்டி பிரதேச சபைகளின் பவுசர்களில் தண்ணீர் கொண்டுவரப்பட்டு குழாய்கள் மூலம் தண்ணீர் விசிறப்பட்டன. பொது மக்களும் தொடர்ந்து தண்ணீரை ஊற்றிக் கொண்டிருந்தனர். கடையின் பின் பக்கத்தில் உள்ள மதிற்சுவர் உடைக்கப்பட்டு பின் பகுதியாலும் தண்ணீர் விசிறப்பட்டு முற்பகல் 11.15 மணியளவில் பற்றி எரிந்த தீமுற்றாக அணைக்கப்பட்டது.

சுமார் ¾ மணிநேரம் கடும் புகையுடன் எழுந்த தீச்சுவாலையை அடுத்து அந்த வீதிஊடான போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டு மாற்றுப்பாதை ஊடாக போக்குவரத்துக்கள் இடம்பெற்றன.

இந்த தீ விபத்தினால் குறித்த தளபாடக் கடை முற்றாக எரிந்து சேதமடைந்தது. அருகில் உள்ள நகைக் கடையின் பெரும் பகுதியும் இதே சேதத்துக்குள்ளானது. தளபாடக் கடை முற்றாக எரிந்ததினால் பல இலட்சம் ரூபா பெறுமதியான கட்டில்கள், மெத்தைகள் மற்றும் பிளாஸ்ரிக் தளபாடங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீயை அணைக்கும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது கரவெட்டிப் பிரதேசசபைத்தலைவர் பொ.வியாகேசுவும் அங்கு வந்திருந்தார். முற்பகல் 11.15 மணியளவில் தீ அணைக்கப்பட்டதும் பிரதான வீதியான யாழ்ப்பாண வீதி ஊடான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

தீயினால் ஏற்பட்ட சேத விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை. எனினும் அதன் மதிப்பு பல லட்சம் ரூபாவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

**கடைகள் மூடப்பட்டன**

இதேவேளை, கடைகள் எரிந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணி முதல் நெல்லியடிக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. கடைகளை மூடுமாறு வர்த்தக சங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

(த-8-15-253)

## இரு வீதிகள் புனரமைப்பு

தென்மராட்சி, மே 23
சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர் இந்த வருடம் சபை நிதியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட வீதிகளில் மேலும் இரு வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

எட்டாம் வட்டாரத்திலுள்ள புனித சவேரியார் தேவாலய வீதி மற்றும் சேமக்காலை வீதி புனரமைப்பு வேலையும் ஐந்தாம் வட்டாரத்தில் நுணாவில் தாளையடி அம்மன் கோயில் இரண்டாம் ஒழுங்கை புனரமைப்பு வேலையும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு அருகில் பிலிசறு திட்டத்தின் கீழான திண்மக்கழிவு பறிப்பு நிலையமும் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான நிதி சூழல் பாதுகாப்பு அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி மன்ற சபை நிதியிலிருந்து ஏற்கனவே இரு வீதிகள் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)

## அனுமதியின்றி பழம் விற்றவருக்கு எதிராக வழக்கு

பல்பொருள் அங்காடி ஒன்றில் அனுமதிப்பத்திரமின்றி பழங்கள் விற்றார் என்று கூறி அதன் உரிமையாளருக்கு எதிராக நல்லூர் பிரதேச சபையினால் யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ். நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர் இந்த வருடத்துக்கான வரி அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளார். அங்கு பழங்கள் விற்க முடியாது என்று நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். உரிமையாளர் தொடர்ந்து பழ வியாபாரத்தில் ஈடுபட்டபோது அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர் என அவரது சட்டத்தரணி மன்றில் தெரிவித்து, இது தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதனைப் பரிசீலித்த நீதிவான் சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்து வழக்கை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (த-14)

## நிகழ்வுகள் இன்று

**அன்னையர் தினம்**

நவாலி வை எம் சி ஏ ஆல் நடத்தப்படும் அன்னையர்தின நிகழ்வு இன்று 3.30 மணிக்கு நவாலி வை எம் சி ஏ மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா கலந்து கொள்வார். (த-100)

**அபிவிருத்திக்கூட்டம்**

'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தின் மே மாதத்துக்கான அபிவிருத்திக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உதவி ஆணையாளர் பிரணவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த அபிவிருத்திக் கூட்டத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், செயலாளர்கள், ஒப்பந்தகாரர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-13)

# மீளக்குடியமர்ந்த எங்களுக்கு மேலும் உதவிகள் தேவை

## நோர்வே தூதுவரிடம் வசந்தபுரம் மக்கள்

யாழ்ப்பாணம், மே 23
மீளக்குடியமர்ந்துள்ள எங்களுக்கு தொடர்ச்சியாக உதவிகள் வழங்க வேண்டும். அத்துடன் வீடுகள் இல்லாதவர்களுக்கு மேலும் வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும்.

இவ்வாறு வலி.வடக்கு பகுதியில் அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட வசந்தபுரம் பகுதி மக்கள் தம்மைச் சந்தித்த நோர்வேத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தனர்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த நோர்வேத் தூதுவர் றொபின்சன் கிறிஸ்ரைய்ன், வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வசந்தபுரம் பகுதிக்குச் சென்ற நோர்வேத் தூதுவர், ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் கையளிக்கப்பட்ட 50 வீடுகளையும் சென்று பார்வையிட்டார். அத்துடன் மக்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், விவசாயக்கிணறுகள் என்பவற்றையும் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். எமக்கு மேலதிகமாக உதவிகள் வழங்கப்பட வேண்டும், வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்று நோர்வேத் தூதுவரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன் பின்னர் அந்தப் பகுதி பெண்களை மாத்திரம் அவர் தனியாகச் சந்தித்து கலந்துரையாடியமையும் குறிப்பிடத்தக்கது.

(த-5)

# மருத்துவக் கண்காட்சிக்கு நேற்று மட்டும் 6000 பேர்

யாழ்ப்பாணம், மே 23
யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடம் பெற்று வரும் மருத்துவக் கண்காட்சியின் இரண்டாம் நாளான நேற்று செவ்வாய்க் கிழமை மட்டும் அதனை சுமார் 6 ஆயிரம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

வட பகுதியிலுள்ள பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் உள்ளடங்கலாக நேற்று சுமார் 10 பாடசாலைகளின் மாணவர்கள் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டுள்ளனர். யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து மட்டும் சுமார் ஆயிரம் மாணவிகள் பார்வையிட்டுள்ளனர் எனக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் பொது மக்களும் அதிகளவில் கலந்து கொண்டு கண்காட்சியை ஆர்வத்துடன் பார்வையிட்டதனைக் காணமுடிந்தது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்காட்சியைப் பார்வையிடுவதற்காகத் தென்னிலங்கையிலிருந்து சுமார் 30 பாடசாலைகளின் மாணவர்கள் வருகை தரவுள்ளதாக அந்தப் பாடசாலைகளின் நிர்வாகங்கள் [illegible] ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும் யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து, 'சுகவாழ்வை நோக்கி' என்ற தொனிப் பொருளில் நடத்தி வரும் இந்த மருத்துவக் கண்காட்சி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

மருத்துவ ரீதியாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பத்துக்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்களைக் கொண்டு இந்தக் கண்காட்சி இடம்பெற்று வருகிறது.

கடந்த இரண்டு தினங்களில் சுமார் [illegible] ஆயிரம் பேர் கண்காட்சியைப் பார்வையிட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-3)

# குடிதண்ணீரை நிறுத்தியது காரைநகர் பிரதேச சபை

காரைநகர், மே 23
காரைநகர் பிரதேச சபையினால் விநியோகிக்கப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டமையால் காரைநகர் பிரதேச மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்த குடிதண்ணீர் விநியோகத்தை உடன் ஆரம்பிக்குமாறு பிரதேச சபையிடம் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் காரைநகர் பிரதேச மக்களின் குடிநீர் விநியோகத்துக்கென புதிய பவுஸர் ஒன்று வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒரு பவுஸரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பவுஸர் மூலம் சுன்னாகப் பகுதியில் இருந்து தினமும் குடிதண்ணீர் எடுத்து வரப்பட்டு காரைநகர்ப் பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தது. இதனால் காரைநகர் மக்கள் தனியாகவும் பலர் இணைந்தும் பல ஆயிரம் ரூபா செலவில் 500 மற்றும் ஆயிரம் லீற்றர்கள் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தாங்கிகளை வீடுகளிலும், பொது இடங்களிலும் நிறுவி குடிதண்ணீரைப்பெற்று வந்தனர். இவர்களுக்காக விநியோகிக்கப்பட்டு வந்த குடிதண்ணீரை பிரதேச சபைத் தலைவர் திடீரென இடைநிறுத்தியமை இப்பகுதி மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையில் காரைநகர் அபிவிருத்தி சபையினால் இரண்டு பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. அதில் ஒரு பவுஸர் பழுதடைந்தமையால் அவர்களின் குடிதண்ணீர் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் சிறிய ஒரு பவுஸர் மட்டுமே தற்போது குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றது. சுமார் 12 ஆயிரம் மக்கள் வாழும் காரைநகர்ப் பகுதியில் உள்ள நீர் நிலைகள் வற்றி வறண்டு வருவதுடன் பெரும்பாலானவை உவர் நீராகவே காணப்படுகின்றன. இந்த நிலையில் சிறிய பவுஸர் மூலமான குடிதண்ணீர் விநியோகம் போதுமானதாக இல்லை. எனவே குடிதண்ணீர் விநியோகத்தை உடன் ஆரம்பிக்குமாறு மக்கள் காரைநகர் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

வருமானக் குறைவு காரணமாகவே குடிதண்ணீர் விநியோகத்தை இடைநிறுத்தியதாகவும், நாளாந்தம் 4 ஆயிரம் ரூபா வரையிலான வருமானமே விநியோகப் பணியில் ஈடுபடும் ஊழியர்களால் காட்டப்படுகிறது. எங்கள் கணிப்பின் படி 6 ஆயிரம் ரூபா வருமானம் தினமும் கிடைக்க வேண்டும். இதற்கான காரணம் ஆராயப்பட்டு சீர் செய்யப்பட்டதும் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

குடிதண்ணீர் விநியோகம் திடீரென இடைநிறுத்தியமையை பிரதேச சபை உறுப்பினர்கள் கண்டித்துள்ளதுடன் உடனடியாக விநியோகத்தை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி உள்ளனர். (த-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸி. சிறையில் வாடும் .....

அந்த நாட்டின் கிறீன் கட்சி இறங்கியுள்ளதுடன், இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தொடர்வதற்கும் அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஆஸ்திரேலியச் சிறையில் உள்ள புலனாய்வுத் துறையின் விசாரணைகளுக்கு உட்பட்ட இலங்கைத் தமிழர் உள்ளிட்ட அகதி களை அந்த நாடு அடைத்து வைத்துள்ளது. அகதி அந்தஸ்து வழங்கப்பட்டும் கூட ஆஸ்திரேலியாவின் பல பாகங்களிலும் நாட்டுக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் குறித்த அகதிகள், ஏன்? தமக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக மேன்முறையீடு செய்யக்கூடாது என்பதற்கான காரணத்தையும் ஆஸ்திரேலியப் புலனாய்வுச் சேவை மறுத்து வருகிறது.இதனையடுத்தே ஆஸ்திரேலியப் புலனாய்வுச் சேவையினருக்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்ய கிறீன் கட்சி தீர்மானித்துள்ளது. இதுவரை சிறுவர்கள் உட்பட்ட 51 பேர் மேன்முறையீடு செய்யமுடியாதப்படி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இதில், அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவரும் அடங்குகிறார்.

தாமோ தமது குடும்பமோ தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எந்த்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை.

## தமிழ்க் கைதிகளை .....

அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் விசாரணைகள் ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறுகின்றது.

இவர்களின் பலர் குற்றச்சாட்டுக்கள் ஏதுமின்றியே ஐந்து, பத்து, பதினைந்து வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

''அரசியல் கைதிகள் தொடர்பில் நாம் பலமுறை நாடாளுமன்றத்தின் ஊடாகவும் வேறு முறைகளிலும் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம். அரசியல் கைதிகளும் பல முறை தமது விடுதலையை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வந்திருக்கின்றனர். இவர்கள் விடயத்தில் ஜனாதிபதி, அமைச்சர்கள் வழங்கிய உறுதி மொழிகள்கூட இதுவரை நிறைவேற்றப்படவில்லை'' என்று கூட்டமைப்பு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தமிழ் அரசியல் கைதிகள் பலர் அங்கவீனமுற்றவர்களாக உள்ளனர். பல பெண்கள் திருமணம் முடித்து குழந்தை உள்ளவர்களாகச் சிறையில் வாடுகின்றனர். குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டிய பல இளைஞர்களும் சிறைகளிலேயே அடைபட்டுக் கிடக்கின்றனர். அதனால் அவர்களின் குடும்பங்கள் வாழவழியின்றி வாடுகின்றன.

எந்தவித விசாரணைகளும் இன்றி தமிழ் அரசியல் கைதிகளை சிறைகளில் அடைத்து வைத்திருப்பதனால் அவர்களது முழு வாழ்க்கையுமே அழிந்து சின்னாபின்னமாகி உள்ளது. போர் முடிந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இந்தக் கைதிகளின் விடுதலை பற்றி இலங்கை அரசு சிந்திக்காமல் இருப்பதானது வேதனைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமாகும்'' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு விபத்தில் .....

மோதியுள்ளது.

இதன்போது மோட்டார்சைக்கிளில் வந்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர். கார்ச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## கூட்டமைப்புடன் மு.கா....

எந்த திட்டமும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடையாது என்று அவர் கூறியுள்ளார்.

அதேவேளை கிழக்கு மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் கண்டியில் வரும் 27 ஆம் திகதி நடத்தவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும், கிராமிய குழு உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர். (த)

## அரசைக் கவிழ்க்க ஐ.தே.கவுக்கு....

ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க ஐ.தே.க. தொடர்ந்தும் போராடும். அதற்காக சரத் பொன்சேகா எமக்கு ஒத்துழைப்பு வழங்குவார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசைக் கவிழ்ப்பதே தனது முதல் இலக்கு என்றும், தான் எப்பொழுதும் மண்டியிடமாட்டேன் என்றும், தனது கட்சியை விட்டுச்செல்லமாட்டேன் என்றும் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்ட தருணத்தில் சரத் பொன்சேகா சூளுரைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# சிறை உத்தியோகத்தர் தாக்கியதாக நீதிமன்றில் சந்தேகநபர் முறையீடு

## விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், மே 23

யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கொள்ளைச் சந்தேகநபர் ஒருவர் தன்னைச் சிறைச்சாலை உத்தியோகத்தர் கீழ்த்தரமாகப் பேசித் தாக்கியதாக யாழ். நீதிமன்றில் நேற்று வழக்குக்கு விசாரணைக்காக வந்திருந்த வேளை தெரிவித்தார்.

அதனையடுத்து அது தொடர்பான விசாரணை மேற்கொண்டு மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிமன்றம் யாழ். பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் வழக்கு ஒன்றுக்காக நேற்று யாழ். நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டார். நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட போது சந்தேகநபர் சிறைச்சாலைக்குள் வைத்து சிறைச்சாலை உத்தியோகத்தர் தன்னைத் தாக்குகிறார் எனக் கூறினார். குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றபோது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக மன்றில் சந்தேகநபர் தெரிவித்தார்.

அதனையடுத்து அது தொடர்பான விசாரணை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. (ஒ-4)

## போர்க்குற்ற விசாரணைக்கு....

கோரிக்கைகள் விடுக்கப்பட்டுவருகின்றன.

போர் வெற்றிக்கு காரணகர்த்தாவாக இருந்த பொன்சேகா பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவை இழந்தவரானார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட இவர் 2010 ஆம் ஆண்டு ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டார்.

யுத்தத்தின் இறுதி மாதங்களில் 40 ஆயிரம் சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என மனித உரிமை குழுக்கள் மதிப்பீடு செய்துள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் பொன்சேகா மேலும் கூறுகையில், சில இலங்கைத் தலைவர்களின் போக்கு அவர்களை உலக அரங்கில் குற்றவாளிகளைப்போல காட்டுகின்றது. இராணுவம் மேற்கொண்ட பதில் நடவடிக்கைகள் தொடர்பான யுத்தக் குற்றங்கள் சம்பந்தமாக எழுப்பப்படும் எந்த குற்றச்சாட்டுகளுக்கும் பதிலிறுக்க தாம் தயாராக இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மனித உரிமை மீறல்கள் குறித்தும், நல்லிணக்கப்பாடு குறித்தும் ஐ.நா. விடுத்துள்ள வலியுறுத்தல் அதிமுக்கியமானதொன்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரின் இறுதிக் காலத்தில் தானே இராணுவத்துக்கு பொறுப்பாளராக இருந்தார் என்றும் இந்நாட்டின் தலைவர்கள் பொறுப்பாளர்களாக இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள அவர், இக்காலகட்டம் சம்பந்தமான கேள்விகளுக்கு பதிலளிக்க தான் தயாராக இருக்கின்றார் என்றும் இதற்கு தான் அஞ்சவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தின் பெயரையும், தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்களையும் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தவர்களையும் பாதுகாக்க எச்சமயத்திலும் நான் முன்வருவேன். அதுபோல எவரை எதிர்கொள்ளவும் நான் அஞ்சப்போவ தில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவிலியன்களுக்கு ஆயுதங்கள் கொடுத்து அவர்களை போர்முனையில் தீவிரவாதிகள் நிறுத்தியுள்ளார்கள் என தாம் கருதுகிறார் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கையின்போது ஆயிரக்கணக்காக சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டுகளையும் அடியோடு நிராகரித்துள்ளார்.

முப்பதாயிரம், நாற்பதாயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என சொல்லப்படுகிறது. இதற்கான சாத்தியப்பாடு கிடையாது. நாங்கள் போரை முன்னெடுத்த முறைமை, நாங்கள் கைக்கொண்ட ஆயுத முறைமைகள், கடைப்பிடித்த நடைமுறை ஆகியவை சிவிலியன்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டே மேற்கொள்ளப்பட்டவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

என்னிடம் ஓர் அரசியல் நெறித்திட்டம் உண்டு. அதன்படி இந்த நாட்டின் ஊழல் அரசியல் கலாசாரத்தை நான் அடியோடு மாற்றிய மைப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் அரசியல் கைதிகளை ....

நேற்று விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும்போதே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

237 தமிழ் அரசியல் கைதிகள் இன்று (நேற்று) 6ஆவது நாளாக உண்ணாவிரதமிருந்து வருகின்றனர். கொழும்புச் சிறைச்சாலையில் 179 தமிழ்க்கைதிகளும், வவுனியாவில் 33 பேரும், களுத்துறையில் 22 பேரும் இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உண்ணாவிரதமிருந்து வருபவர்களின் உடல் நிலைமை மோசமடைந்து வருகின்றது. எமது கட்சியின் இரு உறுப்பினர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலைக்குச் சென்று உண்ணாவிரதத்தைக் கை விடுமாறு கேட்டனர்.

தங்களுக்கு அரசு கடந்த காலங்களில் வழங்கிய உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாதமையால் உண்ணாவிரதத்தைக் கை விடுவதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர். இந்த விடயம் அவசரமான விடயமாகவுள்ளது. தங்களுக்கு உறுதியான பதில் கிடைக்கும்வரை உண்ணாவிரதத்தைத் தொடர்வோம் எனக் கைதிகள் கூறுகின்றனர்.

2009ஆம் ஆண்டு படையினரிடம் சரணடைந்தவர்களில் ஊனமுற்றோரும் இருக்கின்றனர். சரணடைந்தவர்களுள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளது என அரசு தெரிவிக்கின்றது. இதனை நாம் வரவேற்கின்றோம்; பாராட்டுகின்றோம்.

எந்த விதமான குற்றச்சாட்டுகளுமின்றி இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் தளபதிகள் அரசுடன் ஒத்து இயங்கத் தயாரானதில் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அவர்களின் குடும்பங்கள் பட்டினியின் விளிம்பில் இருக்கின்றன. உண்ணாவிரதமிருந்துவரும் கைதிகளுக்கு அரசு உரிய வகையில் உறுதிப்பாட்டை வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். பட்டப்பகலிலேயே அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாணவ சங்கத்தின் தலைவர் மீதும் இதற்கு முன்னர் தாக்குதல் நடத்தப்பட்டது. மாணவன் மீதான தாக்குதல் தமிழர்களை அந்நியப்படுத்துவதற்கான முயற்சியாக இருக்கின்றது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் அரசின் கைகள் இல்லையென்றால் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்து அரசு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

வடக்கிலிருந்து மிதமிஞ்சிய இராணுவப் பிரசன்னத்தை அரசு குறைக்க வேண்டும் என்றார் அவர்.

**நாளை அரசு பதில்**

இதேவேளை, சம்பந்தன் எம்.பி. எழுப்பிய கேள்வி மூன்று அமைச்சுகளுடன் சம்பந்தப்பட்டது. எனவே, அதற்கு நாளை (இன்று) பதிலளிக்கப்படும் என்று சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

உண்ணாவிரதமிருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நேற்று நாடாளுமன்றில் விசேட கூற்று ஒன்றை விடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றினார்.

அதன்பின்னர் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் மூன்று அமைச்சுகளுடன் சம்பந்தப்பட்டது. எனவே, அதற்கு நாளை (இன்று) பதிலளிப்போம் - என்றார். (த)

## மன்னார் ஆயரிடம்....

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி - இறக்குமதி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டை வளப்படுத்த வேண்டுமானால் பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்பட வேண்டும். எமது நாட்டில் ஏற்றுமதி செய்யக்கூடிய வளங்கள் இருக்கின்றன. இருப்பினும், இனப்பிரச்சினை தீர்க்கப்படாதமையால் பல சிக்கல்களும் உள்ளன. இந்த நாட்டில் தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைகள்தீர்க்கப்படவேண்டும்.

எமது நாட்டில் விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், விவசாயிகள் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதேபோல் கடற்றொழிலை எடுத்துக்கொண்டால், அந்நிய நாடுகள் எமது வளங்களைச் சூறையாடும் நிலையே உள்ளது.

பாஸ் நடைமுறை அமுலில் இருக்கின்றது. வேறு இடங்களில் இருந்து எமது பகுதிக்குள் வந்து மீன் பிடிக்கின்றனர். இந்த நிலைமையால் தான் நாம் ஏற்றுமதி - இறக்குமதிபற்றிப் பேசுகிறோம். பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் வாயளவில் மட்டும் இவற்றைப்பற்றிப் பேசிப் பயனில்லை.

நாட்டின் பொருளாதாரம் இன்று வீழ்ச்சி கண்டுள்ளது. இறக்குமதியை அண்டியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையிலும் இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது.

வேறெந்த நாட்டிலும் இல்லாதவாறு [illegible] நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரம் வளப்படுவதற்குத் தடையாக இருக்கின்ற இனப்பிரச்சினைக்கு அரசு தீர்வைக் காணவேண்டும்.

அவ்வாறு தீர்வைக்காணுமானால் இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதி குறைவடையும்.

**ரிஷாத்தின் கூற்றுக்கு கண்டனம்**

தம்புள்ளையில் பள்ளிவாசல் தாக்கப்பட்டுள்ள சம்பவங்களை நாம் கண்டிக்கின்றோம். ஆனால், அந்த விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட பிக்கு ஒருவருடன் மன்னார் ஆயரைத் தொடர்புபடுத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தரக்குறைவாகப் பேசியுள்ளார்.

மன்னார் ஆயர், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுத்தவர். மக்களின் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியவர். நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் அவர் பிரச்சினைகளை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டியதால் நான்காம் மாடியில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். எனவே, மன்னார் ஆயரை தம்புள்ளை பிக்குவுடன் ஒப்பிட்டுத் தரக்குறைவாகப் பேசியதால் இந்த அவையில் அமைச்சர் ரிஷாத் பொது மன்னிப்புக் கோரவேண்டும். - என்றார்.

## பொன்சேகாவை ஜெனரல் ...

சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என நேற்றுக்கூடிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டதில் ஐக்கிய தேசியக் கட்சி மகிழ்ச்சியடைகிறது.எனினும், அவருக்கு முழுமையான விடுதலை வழங்கப்பட்டுள்ளதா என்பது யாருக்கும் தெரியாது. அவ்வாறு முழுமையான சுதந்திரம் வழக்கப்பட்டுள்ளது என்றால் அவரை ஜெனரல் சரத் பொன்சேகா என்று அழைக்க முடியுமா? என்று அரசிடம் கேள்வி யெழுப்புகிறோம்.

அத்துடன், அவருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படுமா? இராணுவத் தளபதியாக பதவி வகித்த ஒருவருக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் வழங்கப்படுமா? என நாங்கள் கேள்வியெழுப்புகிறோம். அத்துடன் சரத் பொன்சேகா கைதுசெய்யப்பட்ட பின்னர் அவருடன் தொடர்பிருப்பதாகக் கூறி 210 இராணுவ வீரர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இராணுவச் சட்டத்திற்கமைய பணி நீக்கம் செய்யப்பட்ட இவர்களின் நிலை என்ன? அவர்களுக்கும் இந்த மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதிகளின் விடுதலை கோரி

# நாளை

# மாபெரும் சத்தியாக்கிரகம்

உங்கள்
அண்ணா, அக்கா, தம்பி, தங்கையின்
விடுவிப்பை விரைவுபடுத்த
கைகோர்த்து வாருங்கள்.



செந்நீரும் கண்ணீரும்
சாதிக்காததை
எங்கள் ஒற்றுமை
சாதிக்கட்டும்.

இன்னும் ஒரே ஒரு தடவை
எமக்காகக் குரல் கொடுப்போம் வாரீர்!



*திகதி:* 24.05.2012 வியாழக்கிழமை
*இடம்:* வவுனியா நகரசபை
விளையாட்டு மைதானம்
*ஆரம்பம்:* காலை 7 மணி

*ஒருங்கிணைப்பு:*
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(சி/323)

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது மன்ற உறுப்பினரும் மன்றத்தின் சேமிப்புத்திட்ட உறுப்பினருமான பரமசாமி பாலேந்திரா (உரிமையாளர் மிட்லண்ட் வீடியோ - சாவகச்சேரி) அவர்களின் அன்புத்தாய்

### திருமதி திரவியம் பரமசாமி

21.05.2012 அன்று காலமானார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/9305)(6-7-8)

**சாவச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**



காரைநகர் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தலைவரும் யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தலைவருமான ப.ஐங்கரன் அவர்களின் அன்புத்தந்தையார்

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*காரைநகர் பிரதேச செயலக*
*சமுர்த்தி அபிவிருத்திஉத்தியோகத்தர்கள்*

(C/328)(6-14-15)



எமது சங்கத்தின் பணியாளரும் அன்புக்குரிய சக ஊழியரும் சங்க விளையாட்டுக் கழகத் தலைவருமாகிய

### செல்லத்துரை டேமியன் (கனி)

அவர்களின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாப அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

**யாழ்ப்பாணம் பலநோ.கூ.சங்க**
**தலைவர்,பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்.**

(18458)(6-7-8)

## மரண அறிவித்தல்

## செல்லத்துரை டேமியன்

*(யாழ். பல நோ.கூ.ச. முகாமையாளர்)*



*இல.26/1, ஆனந்தன் வடலி வீதியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய், அந்திரானை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை டேமியன் நேற்று (22.05.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.*

*அன்னார் செல்லத்துரை காலஞ்சென்ற பூமணி தம்பதியரின் பாசமிகு மகனும், மரியநாயகம் - சற்குணம் தம்பதியரின் அன்பு மருமகனும், அனுஷியாவின் அன்புக் கணவரும் துஷாராவின் அன்புத் தந்தை யும், சேகர், விக்னா, வரன், காலஞ்சென்ற ஜாக்ஷன் (சண்), நிக்ஷன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், மரியமலர் (இராசாத்தி) அவர்களின் பெறாமகனும், ஜோர்ஜ் (தாய்மாமன்) அவர்களின் மருமகனும், ராஜன், றகு, றவி, வவி அன்ரன் (மதி), பௌஸ்ரின் (பிரான்ஸ்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், சீலன் (கனடா), ஜெகதீசன் (லண்டன்), பகீர்தரன், சின்னாம்பி (பிரான்ஸ்), ராகவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.05.2012) புதன்கிழமை புனித அந்திரான் வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் உடுவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

*தகவல்:*

அந்திரானை, சண்டிலிப்பாய். **நிக்ஷன் (சகோதரன்)**

(18459) (45-6-7)

WWW. Uthayan online. com.

## ஆசிரியர்களுக்கு இனி ஞாயிறுகளில் நிம்மதி

யாழ்ப்பாணம், மே 23

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வகுப்புக்களோ, கருத்தரங்குகளோ நடத்துவதைத் தவிர்க்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆசிரியர்களுக்கு கருத்தமர்வுகள் மற்றும் வினாத்தாள் திருத்தும் பணிகளுக்காக அழைக்கப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியது. இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சின் வடமாகாண செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும்தெரிவித்தவை வருமாறு:

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆசிரியர்கள் ஓய்வெடுப்பதற்கும் வீட்டு வேலைகளை நிறைவேற்றுவதற்கும் இடமளிக்கவேண்டும். கருத்தமர்வுகளை வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடத்தும்படி ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்துவதை தவிர்க்கும்படியும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளோம் - என்றார்.

ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு செயலமர்வுகளை சனி, ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாள்களில் நடத்தும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில் கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளர் இதனை அறிவித்துள்ளார்.

(உ-3)

## குப்பை கொட்டிய 6 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 23

யாழ். நகரில் நுளம்பு பெருகும் வகையில் வீதியில் குப்பை கொட்டிய 6பேருக்கு யாழ். நீதிமன்றம் நேற்று 6ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ். நகரைச் சேர்ந்த இந்த 6 பேருக்கும் எதிராக யாழ். பொலிஸார் வழக்குப் பதிவு செய்து அவர்களை நேற்று நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தினர்.

விசாரணையின் போது குறித்த அறுவரும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டதை அடுத்து தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

(ஒ-4)

## தவறிவிட்டது

CP TR 9370 இல மோட்டார் வாகன இலக்கத்தகடு உடுவிலில் இருந்து நாச்சிமார் கோயில் சந்தி ஊடாக நல்லூர் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

T.P : 077 2266994

(18465)(14-8)

## தவறிவிட்டது

தெல்லிப்பழை கிழக்கு, மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சண்முகராசா திலகரஞ்சன் என்பவரது தேசிய அடையாள அட்டை (820562186V), மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
R.K. Motors 17, StanlyRoad,Jaffna.
077 6341574

(18461)(6-7-8)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவக்கொழுந்து ஐயம்பிள்ளை



காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கசூரினா பீச்சில் வசித்தவரும், தற்போது இலகடி, வலந்தலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து ஐயம்பிள்ளை நேற்று (22.05.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான டில்லிறாணி, சிவராசா மற்றும் சிறீஸ்கந்தராஜா (வவுனியா), புஸ்பராணி (அதிபர், யா/ மெய் கண்டான், வித்தியாலயம், காரைநகர்), சிவராணி (காரைநகர்), கிருபானந்தராஜா (கொழும்பு), ஜெயராணி (காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவமணி (ஓய்வுபெற்ற அதிபர் - யா/ காரை மெய்கண்டான் , வித்தியாலயம்), பரமேஸ்வரி, சிவபாக்கியம், திலகவதி, மகேந்திரம், நேசநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கதிரவேலு (வவுனியா), காலஞ்சென்ற சந்திரராசா (பொன்னையா - மரக்காலை - வடலியடைப்பு) மற்றும் வனஜா, ரூபி, தேவராசா (காரைநகர்), குணசிங்கம் (காரைநகர்), நூறிலிதாயா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியும், கோமதி, மதியழகன், குமரதாசன் (வவுனியா), தீபன் (கனடா), றஞ்சித்குமார் (டோகா), செந்தூரன் மயூரி (கலாநிதி/ ஆ.தி.மத்தியமகா வித்தியாலயம் - காரைநகர்), கஸ்தூரி (யா/ யாழ்ற்றன் கல்லூரி), கிருஷ்ணவேணி (யா/யாழ்ற்றன் கல்லூரி), அனுஷா (யா/யாழ்ற்றன் கல்லூரி), யசோதரன் (யா/யாழ்ற்றன் கல்லூரி), பரணிதரன் (யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்), கஜன் (டோகா), மயூரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), சபேசன், நியாஸ்சாறா (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும், கீர்த்திகன், தேனுஜா, பரணிதா, கோபிநாத், அபிஷா, அபிஸ்ணா (வவுனியா), அணாய (கொழும்பு) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.05.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இளைய மகள் ஜெயராணி வீட்டில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

**இலகடி, காரைநகர்.** (சி/327) (2-7-6) **குடும்பத்தினர்.**

## விருப்பம் தெரிவித்தல் (Expression of Interest)

வடமாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி, காணி நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் அவர்களினால் கீழ்வரும் வேலைகளை எதுவித பணப்பெறுமதியும் செலுத்தாது குறிப்பிட்ட காலப்பகுதியில் செய்து முடிக்கக்கூடிய தகுதிவாய்ந்த நிறைவேற்றுனரிடம் இருந்து விருப்பம் தெரிவித்தல் (Expression of Interest) முறையில், கீழ் வரும் முகவரியில் தொடர்புகொண்டு தங்களது விருப்பத்தை 06.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

வேலை விவரம்: அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள வடமாகாண கால்நடை அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான, பிராந்திய பண்ணையிலுள்ள கற்களை அகழ்ந்து அகற்றுதல்.

கல் அகழ வேண்டிய காணியின் விஸ்தீரணம் - 3 ஏக்கர்.
கல் அகழ வேண்டிய ஆழம் - 2அடி
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி - 2012.06.06
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி - பணிப்பாளர்
- திட்டமிடல்
விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி,
நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு,
இல. 04, புருடிலேன் ,
அரியாலை ,யாழ்ப்பாணம்

வேலை நிறைவேற்றி முடிக்கும் காலப்பகுதி - 15.06.2012 15.09.2012

அகழ்ந்து எடுக்கப்படும் கற்கள் உரியவர்களால் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். அத்துடன் அகழப்பட்ட இடத்தை அதே மண்கொண்டு பயிர்ச்செய்கைக்கு ஏற்றவாறு மட்டப்படுத்துதல் அவசியமாகும்.

இவ்வேலையை உடன்பாட்டு அடிப்படையில் மேற்கொள்ள விருப்பமுடையவர்கள் இடத்தை பார்வையிட்டு தங்களின் விருப்பத்தை திட்டத்திற்கான செயற்பாட்டு கால அட்டவணை, (Time Frame) ஆளணி, இயந்திரவசதி என்பவற்றினை உள்ளடக்கி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுனர் குறிப்பிடப்படும் தொகை பணத்தை வைப்பு பணமாக செலுத்திய பின்னரே வேலையை ஆரம்பிப்பதற்குரிய தகுதியைப் பெறுவார்.

செயலாளர்
விவசாய, கால்நடை அபிவிருத்தி,காணி,நீர்ப்பாசன,கடற்றொழில் அமைச்சு
வடமாகாணம்

(சி/326) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பேச்சு மட்டும் போதாது செயலில் காட்டுங்கள்

இலங்கைத் தமிழர்கள் அனுபவித்துவிட்ட கொடுமைகளைக் கேட்டும் அறிந்தும் இந்தியாவில்-குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள நம் உறவுகள் உணர்ச்சி வசப்பட்டுப் போகிறார்கள். பெரும் எடுப்பில் ஊர்வலங்கள், பேரணிகள் பொதுக் கூட்டங்கள் நடத்துகிறார்கள். இந்த நிகழ்வுகளில் உணர்ச்சி பொங்கும் உரைகளை நிகழ்த்துகிறார்கள். ஆவேசமான கோஷங்களை முழக்குகிறார்கள். சர்வதேச நாடுகளுக்கும் ஐ.நா.சபைக்கும் உரத்த குரலில் கோரிக்கைகளும் வைக்கிறார்கள்.

இது எல்லாம் சரிதான். இவைகளினால் எந்த அளவு இங்குள்ள நம்மவர்கள் பயன் பெறுவார்கள் என்பதே கேள்வி. இந்த நிலையில், இலங்கைத் தமிழர் விவகாரம் தமிழ் நாட்டில் அரசியல் பிரசாரக் கருவியாக அமைந்து விடலாகாது என்பதே எமது கவலை.

கடந்த 20 ஆம் திகதி சென்னை மெரினா கடற்கரையில் ஒரு கூட்டம் நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்றுள்ள இனப்படுகொலை குறித்து அனைத்துலகம் விசாரணை நடத்த வேண்டும்; தமிழ் ஈழம் குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து உரைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன், ம.தி.முக. பொதுச் செயலாளர் வைகோ, பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர்மணி ஆகியவர்களுடன் லோக்ஜனசக்தி தலைவர் ராம் விலாஸ் பாஸ்வானும் கலந்து கொண்டுள்ளனர்.

போர்க்குற்றம்-இனப்படுகொலை முதலியவற்றுக்கு எதிரான இளைஞர் இயக்கம் சார்பில் தமிழீழத்தில் வாக்கெடுப்பு நடத்தும்படி கோரி ஒரு கோடி கையெழுத்துக்கள் பெறும் இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக இந்திய அரசின் துரோகத்தை மறக்க மாட்டோம் என்றும் மன்னிக்க மாட்டோம் என்றும் அங்கு திரண்டு வந்திருந்த மக்கள் முழக்கமிட்டுள்ளார்கள்.

இலங்கையில் நடந்து முடிந்த போரில் அரசு கண்ட வெற்றிக்கு சர்வதேச நாடுகள் பலவும் குறிப்பாக அண்டை நாடான இந்தியாவும் சகல விதத்திலும் உதவியிருந்தன. வடக்கு, கிழக்கில் பொதுவாகவும் முள்ளிவாய்க்கால் பகுதியில் குறிப்பாகவும் தமிழ்ப் பொதுமக்கள் ஆயிரக் கணக்கில் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்டமைக்கு இந்தியாவின் பங்களிப்பு தாராளமாகவே இருந்துள்ளது.

இறுதிக்கட்டத்தில் கனரக ஆயுதங்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள் போன்றவற்றைப் பாவிக்க வேண்டாம் என்ற கோரிக்கையை இலங்கை அதிகாரிகள் எவ்விதம் கையாண்டார்கள், இந்திய அரசியல் தலைவர்கள் எவ்விதம் 'கண்ணா மூச்சி' காட்டப்பட்டார்கள் என்பவை எல்லாம் இப்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் பங்களிப்பால் ஐ.நா.நிபுணர் குழு அறிக்கையின் படி 40,000 உறவுகளை இழந்து விட்ட தமிழ் மக்கள், பஞ்சைகளாய், பராரிகளாய் பரிதவித்து நிற்க நேர்ந்தது மட்டுமல்ல, இன்று தமது இருப்பிடங்களிலே ராணுவமும், அவர்கள் ஆதரவில் பெரும்பான்மை இனத்தவர்களும் பௌத்த கோயில்களும் நிலைகொண்டிருப்பதைக் கண்டு கலங்கிப் போய் நிற்கிறார்கள். இவைகளைப் பார்த்தும் பாராமல் கேட்டும் கேளாமல் இந்திய அரசு தொடர்ந்தும் இருப்பது நியாயமாகுமா?

எதுவானாலும் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர் சார்பாக பெரும்பாலும் எல்லாக் கட்சிகளுமே சாதகமானதொரு நிலைப்பாட்டினையே கொண்டிருக்கின்றன. பிரதான கட்சிகளான தி.மு.கழகமும், அ.இ.அ.தி.மு.கழகமும் கூட இலங்கை தமிழர் விடயத்தில் சாதகமான கருத்துக்களையே கொண்டுள்ளன. போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது தி.மு.க.செயல்பட்ட விதமும் அதற்கு முன் அ.இ.அ.தி.மு.கழகம் கொண்டிருந்த கொள்கையும் இலங்கைத் தமிழருக்கு உதவுவதாக இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது பெரும்பாலான கட்சிகள் தங்களுக்குள் மோதிக் கொண்டாலும், இலங்கைத் தமிழர் விடயத்தில் சாதகமான கருத்துக்களையே வெளியிடுகின்றன. என்றாலும் இந்தக் கட்சிகள் எல்லாம் என்னதான் கோஷங்களையும் கோரிக்கைகளையும் முன்வைத்தாலும், அவை இலங்கைத் தமிழருக்கு பயனளிக்கப் போவதில்லை. இந்த விடயத்திலாவது இந்தக்கட்சிகள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். வெறுமனே சர்வதேசத்துக்கு கோரிக்கைகளை விடுத்துக் கொண்டிருப்பதை விட, இந்திய மத்திய அரசுக்கு உறைக்கும்படியாகச் செயற்பாடுகளை நகர்த்த வேண்டும். அதற்காக தமிழ் நாட்டிலுள்ள சகல கட்சிகளும் இணைந்து பொறிமுறையொன்றை அமைத்து அதன் மூலம் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது பயனளிப்பதாக இருக்கும்.

அதை விடுத்து மறக்க மாட்டோம், மன்னிக்க மாட்டோம் என்று முழக்கமிடுவதால் எவருக்கும் பயன் ஏற்படப்போவதில்லை. உண்மையில் இலங்கைத் தமிழர் விடயத்தில் அக்கறை இருக்குமானால் மத்திய அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் தி.மு.க போன்ற கட்சிகள் அதனை விலக்கிக் கொள்ள முன்வருவார்களா? வெறும் பிரசாரத்துக்காக, இன உணர்வை வெளிப்படுத்துவதற்காக, மாரிகாலத்துத் தவளைகள் போல் கத்திக் குரல் எழுப்புவதால், எவருக்கும் பயன் ஏற்படமாட்டாது. ஆக்கபூர்வமாக அவர்கள் இணைந்து எதையாகிலும் செய்து உதவினால் மகிழ்ச்சிதான்.

# வடக்கில் கால்நடை உற்பத்தி விருத்திக்கு ரூ.34 மில்லியன்

## 14 திட்டங்கள் செயற்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்,மே 23

மாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதியில் வடமாகாணத்தில் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துக்கு இந்த ஆண்டு 14 திட்டங்களைச் செயற்படுத்த 34 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என வடமாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி காணி நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். ஹால்டீன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கால்நடை உற்பத்தியில் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேசங்களில் உள்ள பயனாளிகள் 300 பேருக்கு 2மாதக் கோழிக்குஞ்சு வழங்குவதற்கு 3.35 மில்லியன் ரூபாவும், வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள சிறிய அளவிலான கோழிவளர்ப்போருக்கான உதவிகளுக்கு 1.6 மில்லியன் ரூபாவும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள 10 அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் உணவு, மருந்து கொள்வனவுக்கு 2.5 மில்லியன் ரூபாவும், மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச கால்நடை வைத்தியர் விடுதியிலும், பண்ணை அலுவலகத்திலும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 3.2 மில்லியன் ரூபாவும் வவுனியா மாவட்டத்தில் உள்ள விடுதி புனரமைத்தல், உணவு களஞ்சியங்களை வளப்படுத்துவதற்கு 2.5 மில்லியன் ரூபாவும், 5 மாவட்டங்களிலும் உள்ள கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கு தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒரு மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் உதவிப்பணிப்பாளர் பணிமனை நிர்மாணத்துக்கு 3 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 5 மாவட்டங்களிலும் இனவிருத்திக்காக நல்லினக் கடாக்கள் வழங்குவதற்கு 0.7 மில்லியன் ரூபாவும், நல்லினக் காளைகள் வழங்குவதற்கு 1.5 மில்லியன் ரூபாவும், 100 பெரிய பண்ணைகளுக்காக பட்டிகளை அமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாவும், 100 குடும்பங்களுக்கு 2 ஆடுகள் வீதம் விநியோகிப்பதற்கு ஒரு மில்லியன் ரூபாவும், 48 ஆயிரம் கோழிக்குஞ்சுகளை 2ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு வழங்குவதற்கு 6 மில்லியன் ரூபாவும், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு 100 பெரிய பண்ணைகளுக்கான பட்டிகளை அமைப்பதற்கு 3.60 மில்லியன் ரூபாவும், ஆடுகளுக்கான 100 கொட்டகைகள் அமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார்.

(த-13)

# யாழ்ப்பாண நகரப் பிரதேசத்தில் 73 உணவகங்களே தரமானவை

யாழ்ப்பாணம்,மே 23

யாழ்ப்பாணம்,ஊர்காவற்றுறை மற்றும் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட 288 உணவு கையாளும் நிலையங்களில் 73 நிலையங்கள் 'ஏ' தரச் சான்றிதழுடன் இயங்குகின்றன. இந்தப் பிரிவில் 'பி' தரச் சான்றிதழுடனேயே அநேகமான நிலையங்கள் இயங்குகின்றன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைத் தரவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே அதிகளவான உணவு கையாளும் நிலையங்கள் உள்ளன. இங்கு இவ்வாறு 225 நிலையங்கள் உள்ளன.

இங்குள்ள 30 உணவு தயாரிப்பு நிலையங்களில் 10 'ஏ' தரச் சான்றிதழுடனும், 19 'பி' தரச் சான்றிதழுடனும், ஒன்று 'சி' தரச் சான்றிதழுடனும் இயங்குகின்றன.

93 உணவு விடுதிகளில் 36 'ஏ' தரச் சான்றிதழுடனும், 36 'பி' தரச் சான்றிதழுடனும், 21 'சி' தரச் சான்றிதழுடனும் இயங்குகின்றன. 11 வெதுப்பகங்களில் ஒன்று 'ஏ' தரச் சான்றிதழுடனும், 9 'பி' தரச் சான்றிதழுடனும், ஒன்று 'சி' தரச் சான்றிதழுடனும் உள்ளன.

36 தேநீர்ச் சாலைகளில் 15 'ஏ' தரச் சான்றிதழுடனும், 56 'பி' தரச் சான்றிதழுடனும், 15 'சி' தரச் சான்றிதழுடனும் உள்ளன. 5 ஏனைய வகை உணவு கையாளும் நிலையங்களில் 2 'ஏ' தரச் சான்றிதழுடனும், 3 'பி' தரச் சான்றிதழுடனும் உள்ளன.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 25 உணவு கையாளும் நிலையங்கள் உள்ளன. இங்கு உணவு தயாரிப்பு நிலையங்கள் எதுவுமில்லை. 13 உணவு விடுதிகளில் ஒன்று 'ஏ' தரச் சான்றிதழுடனும், 8 'பி' தரச் சான்றிதழுடனும், 4 'சி' தரச் சான்றிதழுடனும் உள்ளன. 4 வெதுப்பகங்களில் 3 'பி' தரத்துடனும், ஒன்று 'சி' தரத்துடனும் உள்ளன. 6 தேநீர்ச் சாலைகளில் 2 'பி' தரத்துடனும், 4 'சி' தரத்துடனும் உள்ளன. ஏனைய வகை உணவு கையாளும் நிலையங்கள் இரண்டும் 'ஏ' தரத்தில் உள்ளன.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 38 உணவு கையாளும் நிலையங்கள் உள்ளன. உணவு தயாரிப்பு நிலையங்கள் இரண்டும் 'பி' தரத்துடனும், 19 உணவு விடுதிகளில் 5 'ஏ' தரத்துடனும், 12 'பி' தரத்துடனும், 2 'சி' தரத்துடனும் உள்ளன. 8 வெதுப்பகங்களும் 'பி' தரத்திலுள்ளன. 9 தேநீர்ச் சாலைகளில் ஒன்று 'ஏ' தரத்துடனும், 8 'பி' தரத்துடனும் உள்ளன என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# பார்வைக் குறைபாட்டை தவிர்ப்பதற்குச் செயற்திட்டம்

## விழிப்புலனற்றோர் சங்கம் முன்னெடுக்கிறது

யாழ்ப்பாணம்,மே 23

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் வடக்கு மாகாணத்தில் மக்கள் மத்தியில் நிலவும் கண்பார்வைக் குறைபாட்டைத் தவிர்க்கும் வகையில், விழிப்புணர்வுச் செயற்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் மத்தியில் தற்போது கண்பார்வைக் குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன.

இந்தக் குறைபாட்டைத் தவிர்ப்பதற்கு மக்கள் மத்தியில் உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை எமது சங்கம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் கண்பார்வைக் குறைபாடு உள்ளவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

இலவச கண்சிகிச்சை முகாம் [illegible] குறைபாட்டினால் பாதிக்கப்பட்டோருக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கண்ணில் 'ஹற்றாக்' நோயால் பாதிக்கப்பட்டோருக்கு சத்திரசிகிச்சை மூலம் 'லென்ஸ்' பொருத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கென 300 லென்ஸ்'கள் எமது சங்கத்தால் தருவிக்கப்பட்டுள்ளன. எமது இந்தச் செயற்திட்டம் எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்படும். இலவச கண்சிகிச்சை முகாமில் கண் சிகிச்சை நிபுணர்கள் கலந்து கொண்டு சிகிச்சைகளை வழங்குவார்கள். பாடசாலை மாணவர்களும் இதில் கலந்து கொண்டு பயன்பெற முடியும்.

இதில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் யாழ்.கோயில் வீதியில் அமைந்துள்ள எமது சங்க அலுவலகத்தில் விவரங்களைப் பதிவு செய்ய முடியும்-என்றார்.

(த-17)

# இலத்திரனியல் நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம்,மே 23

இலத்திரனியல் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு இன்று புதன்கிழமை முத்திரையிடப்படும் பணிகள் நடைபெறும் என்று யாழ்.செயலக நிறுத்தல் அளவைப் பொறுப்பதிகாரி ப.கிருஷ்ணதாசன் தெரிவித்தார்.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரைக்கும் இலத்திரனியல் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு யாழ். செயலக நிறுத்தல், அளத்தல் பிரிவில் வைத்து முத்திரையிடப்படவுள்ளது.

இலத்திரனியல் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடத் தவறியவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கிருஷ்ணதாசன் மேலும் கூறினார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் தற்போது பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் இலத்திரனியல் நிறுத்தல், அளத்தல் கருவிகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி வழங்கலிலும் இராணுவத் தலையீடு

## கிளிநொச்சி மக்களின் அவலம்

கிளிநொச்சி உமையாள்புரம் கிராமத்தில் தொண்டு நிறுவனம் ஒன்றால் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. அவற்றைப் பெற்றுக்கொள்பவர்களைத் தீர்மானிப்பதிலும் ராணுவத்தினரின் தலையீடு அதிகமாக இருந்தது. ராணுவத்தினர் அனுமதித்த உதவி பெறுபவர்களின் பெயர்ப்பட்டியல் கிடைக்காத வரையில் உதவி வழங்க ராணுவம் அனுமதி மறுத்ததால் உதவி வழங்குவது தாமதமானது.

கிளிநொச்சி உமையாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் 51 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உமையாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் முதற்கட்டமாக ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் நிறுவனம் ஒன்றினால் 51 குடும்பங்களுக்கு தலா இந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

உமையாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் தற்போது 235 வரையான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இதில் முதற்கட்டமாக முன்னுரிமை அடிப்படையில் 51 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் உதவியை வழங்கிய போது ஏனைய குடும்பங்கள் பல்வேறு இடையூறுகளை விளைவித்தன. கட்டம் கட்டமாக மேற்படி பொருள்கள் வழங்கப்படுமென கிராம அலுவலர்கள் தெரிவித்த போதிலும் மக்கள் இதனைப் பொருட்படுத்தாது தகராறில் ஈடுபட்டனர்.

மேற்படி பயனாளிகளைத் தெரிவு செய்வதில் கிராம மட்ட அமைப்பு, கிராம அலுவலர்கள், இராணுவத்தினர் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை ராணுவத்தால் உதவி வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் தமக்குக் கிடைக்கவில்லையெனக் கூறிய இராணுவத்தினர் உதவி வழங்குவதைத் தாமதப்படுத்தினார்.

அந்தப் பட்டியல் வழங்கப்பட்டதன் பின்னர் பிற்பகல் 2மணியளவில் உதவிகள் வழங்கப்பட்டன.

(க-6)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு ரூபா ஒரு லட்சம் தண்டம்

கிளிநொச்சி,மே 23

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் 21 போத்தல் கசிப்பைத் தனது உடைமையில் எடுத்துச் சென்ற ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 15 ஆம் திகதி கைது செய்திருந்தனர். இந்த நபர் அடுத்த நாள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இவருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், தண்டத்தைச் செலுத்தத் தவறின் ஆறுமாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை கடந்த புதன்கிழமை கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் 180 மில்லி லீற்றர் கசிப்பைத் தனது உடைமையில் வைத்திருந்த ஒருவருக்குப் 10 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டதுடன் இதனைச் செலுத்தத் தவறின் இரண்டு மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(க-6)

## கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு கிளி. அரச அதிபர் வேண்டுகோள்

கிளிநொச்சி,மே 23

கிளிநொச்சியில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு ஒன்பது குளங்களின் கீழ் 12 ஆயிரத்து 80 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் அதிகளவான இடங்களில் பயிரழிவுகளை ஏற்படுத்தி வரும் கால்நடைகள் கட்டுப்படுத்தப்படவில்லையென பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பயிர்ச் செய்கைக் காலங்களில் கால்நடைகளின் உரிமையாளர்கள் அவற்றைக் கட்டி பாராமரிக்க வேண்டுமெனவும் இந்த விடயத்தில் பிரதேச உபதிட்டக்குழுக்கள் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்தவர்கள், கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவசாயிகள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(க-6)

## கிராம சேவையாளருக்கு சேவை நலன் பாராட்டு

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் பகுதியில் கடந்த 15 வருடங்களாகக் கிராம அலுவலராக கடமையாற்றிய காங்கேசு சொக்கலிங்கம் இரணைப்பாலை கிராம அலுவலகப்பிரிவுக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

இவரின் கடந்த கால சேவையைப் பாராட்டித் தேவி புரம் கிராமமட்ட அமைப்புக் களின் ஏற்பாட்டின் சேவை நலன் பாராட்டு விழா நிகழ்வு ஒன்று கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வள்ளிபுனம் பாடசாலை மண்டபத்தில் ஐ.மாதவராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை இவரின் சேவையைப் பாராட்டி பிரதேச மக்களால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-6)



புனரமைக்கப்பட்ட அக்காராயன் குளத்தின் வான்பகுதி தற்போது இவ்வாறு காட்சியளிக்கின்றது. (18)

## மனைக் கைத்தொழில் கண்காட்சி

கிளிநொச்சி,மே 23

கிளிநொச்சியில் மனைக் கைத்தொழில் கண்காட்சி இடம்பெறவுள்ளதாக அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனைக்கமைவாக வாழ்வெழுச்சி மனைப் பொருளாதார அலகுகள் 25 லட்சம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மனைக் கைத்தொழில் துறையை உயர்த்தும் பொருட்டு இதில் விருப்பமுள்ள பயனாளிகளை அறிவூட்டும் கண்காட்சி நிகழ்வுகள் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு 26 ஆம் திகதி காலை 9 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க)

## தொழிலில் சிரமங்களை எதிர்கொள்ளும் 4 ஆயிரம் முல்லை கடற்றொழிலாளர்கள்

கிளிநொச்சி,மே 23

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சுமார் 4 ஆயிரம் கடற்றொழிலாளர்கள் தமது தொழில்களை மேற்கொள்வதில் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நாயாறு தொடக்கம் நல்லதண்ணித் தொடுவாய் வரை 18 கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரம் கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் இவர்கள் வேறு இனங்களைச் சேர்ந்தவர்களால் தமது தொழில்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

வட்டுவாகல் பகுதியில் தமிழ் மீனவர்கள் கடலட்டை, இறால் ஆகியவற்றைப் பிடிப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஏனைய மீனவர்களுக்குக் கட்டுப்பாடு எதுவுமில்லை.

அளம்பிலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்குக் குறைந்த அளவினருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சிங்கள மீனவர்கள் நூற்றுக் கணக்கில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொக்கிளாயில் பாரம்பரிய முறைப்படியே மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியும். இதற்கான யாப்பு ஒன்றும் 1973 ஆம் ஆண்டு இயற்றப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இயந்திரங்களை உபயோகித்தல், கூட்டுவலையைப் பாவித்தல், வெளிச்சம் பாய்ச்சுதல் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாமே தமிழர்களுக்குத்தான். ஏனையவர்கள் தமது இஷ்டம் போலச் செயற்படுகின்றனர்.

இத்தகைய மீனவர்கள் நீதிமன்றத்தினால் எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இவர்கள் தற்போதும் அதனையே செய்து கொண்டிருக்கிறார்கள்.

28 ஆண்டுகளாக இடம் பெயர்ந்து வாழ்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த கொக்கிளாய், புளியமுனை, கருநாட்டுக்கேணி மக்கள் மேலும், மேலும் துன்பத்தையே அனுபவித்து வருவதாகக் கூறப்படுகின்றது. (க-6-500)

> 28 ஆண்டுகளாக இடம் பெயர்ந்து வாழ்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த கொக்கிளாய், புளியமுனை, கருநாட்டுக்கேணி மக்கள் மேலும் மேலும் துன்பத்தையே அனுபவித்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

## பஸ் ஆசனத்தின் மீது ஏறி நின்று சீட்டுக்களை வழங்கிய நடத்துநர்

### பொதுமக்கள் கொதிப்பு

கிளிநொச்சி,மே 23

பஸ் ஆசனத்தில் ஏறி நின்று பயணச்சீட்டுகளை வழங்கிய தனியார் பஸ் நடத்துநரின் விநோதமான செயலால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு, பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்றின் நடத்துநர் இவ்வாறு முறையற்றவிதத்தில் நடந்து கொண்டதால் தாம் அசௌகரியங்களை எதிர்கொண்டதாகப் பயணிகள் தெரிவித்துள்ளனர்.



கடந்த 15 ஆம் திகதி காலை 7மணியளவில் உடையார்கட்டு பகுதியில் இருந்து கிளிநொச்சியூடாக வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் அதிகமான பயணிகளை ஏற்றியுள்ளனர். அத்துடன் நடத்துநர் பஸ் ஆசனத்தின் மேல் ஏறிநின்று பயணச்சீட்டுகளை வழங்கியுள்ளார். இதனால் ஆசனங்களில் அமர்ந்திருந்து பயணம் செய்த பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இதே வேளை குறித்த பஸ்ஸின் நடத்துநர் பயணிகளுடன் முறையற்ற விதத்தில் நடந்து கொண்டதாகவும் பயணிகள் பலர் முறையிட்டுள்ளனர். "இவன் என்ன விசரனா" என்றும் பயணிகள் முணுமுணுத்தனர்;

அண்மை நாள்களாக கிளிநொச்சி பகுதியில் தனியார் பஸ்களில் பல முறையற்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக பலரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போதும் இது போன்ற சம்பவங்கள் அதிகரித்த வண்ணமே இருப்பதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(க-6)

## தவசிக்குளத்தில் வீடுபுகுந்து ரௌடிகள் பெரும் அட்டகாசம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா தவசிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த இளைஞர் குழு அங்கு இருந்தவர்களைப் பயங்கரமான முறையில் தாக்கியுள்ளது.

வவுனியா தவசிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தின் செயலாளரான செல்லத்துரை என்பவரின் வீட்டில் மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஓட்டோவில் வந்த இளைஞர் குழு ஒன்று 60 வயதான செல்லத்துரையைப் பயங்கரமான முறையில் தாக்கியது. இதனை அவதானித்த அவரின் மருமகனான 45 வயதான இரங்கசாமி சிவசாமி தடுக்க முற்பட்ட போது அவரும் தாக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து இவரின் மனைவியான 39 வயதான சிவசாமி விஜயலதாவும் தாக்கப்பட்டுள்ளார். படுகாயம்அடைந்த இரங்கசாமி சிவசாமி, சிவசாமி விஜயலதா ஆகியோர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவுப் பகுதியில் மீளக்குடியமரத் தடையில்லை

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

அக்கராயன், மே 23

ஆனையிறவுப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு எந்தத் தடையும் இல்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கிளிநொச்சி அரச அதிபரான திருமதி றூபாவதி கேதீஸ்வரன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மீளக்குடியமர்வு நிலவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சில கிராமங்களில் கிளிநொச்சி நகரில் உள்ள பரவிப் பாஞ்சானின் ஒரு பகுதியிலும் மக்கள் குடியமர வேண்டியுள்ளது. பொதுவாக கிளிநொச்சி மாவட்டத்தில் நிறைவான மீளக் குடியமர்வு இடம்பெற்று வருகின்றது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சில கிராமங்களில் கிளிநொச்சி, பரவிப் பாஞ்சானின் ஒரு பகுதியிலும் மக்கள் குடியமர வேண்டி யுள்ளது.

மக்கள் மீளக்குடியமர வேண்டிய சில கிராமங்களில் மிதிவெடி அபாயம் உள்ளது.

ஆனையிறவு போன்ற பகுதிகளில் மீளக்குடியமர எந்தத் தடையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(க-18)

## நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் விபத்தில் படுகாயம்

மன்னார், மே 23

நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் படுகாயமடைந்த நானாட்டான் பிரதேச சபையின் அரச தரப்பு உறுப்பினர் மொகமட் சகாப்தீன் ஆபத்தான நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் நானாட்டான் பிரதேச சபையின் உறுப்பினரான மொகமட் சகாப்தீன் தமது குடும்பத்தினருடன் பயணித்த ஜீப் வண்டியே விபத்துக்குள்ளாகியது.

நானாட்டான் - அரிப்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9.20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் ஜீப் வண்டியில் பயணித்த மொகமட் சகாப்தீன் மற்றும் அவரது மனைவி, மைத்துனி ஆகியோர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

ஜீப் வண்டியில் பயணித்த மொகமட் சகாப்தீன் மற்றும் அவரது மனைவி, மைத்துனி ஆகியோர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

படுகாயமடைந்த மூவரும் உடனடியாக மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

படுகாயமடைந்த பிரதேச சபை உறுப்பினர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-12)

## கொண்டச்சி குடாவுக்கு ஒழுங்கான பஸ் சேவையை ஏற்படுத்துங்கள்

மன்னார்,மே 23

மன்னார் கொண்டச்சிகுடா கிராமத்துக்கான பஸ் சேவையை ஒழுங்காக மேற்கொள்ளுமாறு முசலி பிரதேச பிரஜைகள் குழுவினர் மன்னார் டிப்போ முகாமையாளரைக் கடித மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்தத் தகவலை முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் தலைவரான எம்.சறோ ரூபன்குரூஸ் தெரிவித்தார்.

மன்னாரில் இருந்து அரிப்புக்கு செல்லும் அரச பேருந்து வழமையில் கொக்குப்படையான் கிராமத்திற்குச் சென்று அதன் பின்னரே அரிப்புக்கு செல்வது வழமை.

ஆனால் சில வேளைகளில் சாரதியும்,நடத்துநரும் சேர்ந்து பயணிகளை சிலாவத்துறை சந்தியில் இறக்கி விடுவதுடன் பஸ் கொண்டச்சிகுடாவுக்கு போகாது என கூறுகின்றனர்.

இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இதனால் பல கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே இவர்களால் தமது இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்கள் ஆகியோர் இவ்வாறு பாதிக்கப்படுகின்றனர்.

எனவே இம்மக்களின் நலனை கருத்தில் கொண்டு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் சீரான போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளுமாறு மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)


பிசப் சவுந்தரம் மீடியா சென்ரில்

பாரதியார் பல்கலைக்கழக ஊடக பட்டப்படிப்பு

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்று Certificate in Journalism, Diploma in Jouralism, B.Sc. (Visual Communication) P.G. Diploma (Communicative English) M.A. (Journalism & Mass Communication) ஆகிய கற்கைநெறிகளை யூன் 2012இல் ஆரம்பிக்கவுள்ளது. கல்வி கற்போர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் தொடர்புகொள்ளவும்.·

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்
இல.891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 6085, 021 7200898


## ஒட்டுசுட்டானில் கணினிப் பயிற்சி

முல்லைத்தீவு, மே 23

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கணினி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் கணினிக் கல்வி நிலையம் ஒன்று கனடா வன்னித் தமிழ் சமூக கலாசார மையத்தின் உதவியுடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

கற்சிலை மடு பிரதான சந்தியில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கணினிக் கல்வி நிலையம் எதிர்வரும் 9 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஒட்டுசுட்டான் பிரதேசத்தை நிரந்தரவசிப்பிடமாகக்கொண்ட 28 வயதுக்குட்பட்ட எவரும் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள முடியும்.

இணைந்து கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலரும் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட நற்சான்றுப் பத்திரம் இணைக்கப்பட்ட விண்ணப் படிவத்தை இந்த மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் வன்னித் தமிழ் சமூகச் செயலாளர், சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


உ
சிவமயம்

ப்ரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்,
நிகழும் மங்கலகரமான நந்தன வருடம் வைகாசித்திங்கள் 10ஆம் நாள் (23.05.2012) புதவாரமும் சுக்கில பக்ஷமும் சித்தயோகமும் மிருகசீரிட நட்சத்திரமும் கூடிய இன்று காலை 7.29 மணிமுதல் 9.20 மணிவரையுள்ள மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில்
சிவத்திரு தம்பிப்பிள்ளை ஐயாவின் பேரனும்
சிவஸ்ரீ த.ரவீந்திரராசாக் குருக்களின் ஜேஸ்ட புத்திரனுமாகிய
சிரஞ்சீவி துஜிந்தசர்மா அவர்களுக்கு
ப்ரம்மோபதேச உபநயனம் செய்ய எல்லாம் வல்ல கலியுகவரதனாம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம் நடைபெறும் கிரியாகால நிகழ்வுகளில் யாவரும் கலந்து கொண்டு எமது புத்திரனை ஆசீர்வதிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தீட்ஷா குரு
சிவப்பிரம்மஸ்ரீ சண்.ரவிச்சந்திரக்குருக்கள் (திருநெல்வேலி)

வரவேற்பாளர்கள்:
திரு புலேந்திரன் ஐயா குடும்பத்தினர்,
(நாகபூஷணி அம்மன் ஆலயம் கோண்டாவில்)
அக்காமார்: ர.துளசிகா, பு.சிவறூபா.
அண்ணாமார்: பு.சிவதாஸ், பு.சிவசொறுபன்.

இவ்வண்ணம்
ஸ்கந்த பூஜா துரந்தரர்,
சிவஸ்ரீ த.ரவீந்திரராசாக் குருக்கள்,
மதிதேவி தம்பதியினர்,
(கோண்டாவில் ஸ்ரீ ஞானப்பழனி முருகன்
தேவஸ்தான பிரதம குரு)
(18898)


## கோட்டைகட்டிய குளத்தில் மருத்துவ முகாம்

அக்கராயன் ,மே 23

துணுக்காய் கோட்டைகட்டிய குளத்தில் மருத்துவ முகாமொன்று இடம்பெறவுள்ளது. இந்த மருத்துவ முகாம் நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோட்டைகட்டியகுளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தென்னிந்திய திருச்சபையினர் இந்த மருத்துவ முகாமை நடத்துகின்றனர். இங்கு கண் உட்பட்ட பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. அத்துடன் பரிசோதனைகளும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் இடம் பெறவுள்ளன.

இதில் கோட்டைகட்டியகுளம் கிராம மக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு துணுக்காய்ப் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா விமலச்சந்திரன்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விமலச்சந்திரன் நேற்று (22.05.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசபூபதி தம்பதியரின் அன்பு மகனும் சந்திரசோதி, ஜெயகுலசிங்கம் (ரஞ்சன்), ஜெகசோதி, ஜெயபாலசிங்கம், ஜெயவேல்முருகன், விஜயசோதி, ஜெயச்சந்திரன், ரவிச்சந்திரன், உதயச்சந்திரன், வினோதச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜேந்திரன், ஆனந்தராணி, சண்முகம், யூலியட் அசில் ஜயிறின், விஜயமாலா, ராஜேஸ்வரன், பாமதி, ஸ்ரீவதனி, சுபாஜினி, சிவசுதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2012) புதன்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொந்திலேன்,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சீதேவன் தம்பிப்பிள்ளை



ஊரங்குனை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதேவன் தம்பிப்பிள்ளை நேற்று முன்தினம் (21.05.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் (மெக்கானிக்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குட்டியர் தம்பதியரின் அன்பு மருமகளும் நாகம்மா, கந்தையா மற்றும் காலஞ்சென்றவர்களா பூமணி, செல்லம்மா, தங்கம்மா, நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகசுந்தரம் (பெரியதம்பி - மெக்கானிக்), சண்முகலிங்கம் (சண் - டென்மார்க்), ராசமலர், சண்முகராஜா (சிறி- ஜேர்மனி), சண்முகரட்ணம் (வெள்ளை -கனடா), சண்முகநாதன் (முருகன் - மெக்கானிக்) ஆகியோரின் அன்புத் தாயும் சாரதாதேவி, பராசக்தி, பொன்னம்பலம், புஸ்பராணி, தமயந்தி, சந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி கமலநாயகி பொன்னம்பலம்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலநாயகி பொன்னம்பலம் நேற்று (22.05.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கெற்பேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா பொன்னம்பலத்தின் (முன்னாள் உதவித் தபாலதிபர், கச்சாய்-யாழ்ப்பாணம்) துணைவியும், தொல்புரம் இராசையா-நேசமணி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற தேவமனோகரன் மற்றும் திருமதி லோகநாயகி சந்திரராஜா (குடும்பநல உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை-குருநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசையா (தந்தை)
(அரசினர் வைத்தியசாலை விடுதி, குருநகர்.)

(18474)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாரந்தனை சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம்-2012

| | |
|---|---|
| கொடியேற்றம் | 25.05.2012 வெள்ளி மு.பகல் 10.00 மணி |
| தேர் | 03.06.2012 ஞாயிறு மு.பகல் 10.30 மணி |
| தீர்த்தம் | 04.06.2012 திங்கள் மு.பகல் 10.30 மணி |
| திருக்கல்யாணம் | 05.06.2012 செவ்வாய் இரவு- 8.00 மணி |
| மகோற்சவ குரு - | சிவஸ்ரீ. கா.புவனேஸ்வரக்குருக்கள் |
| தினமும் இரவு | 7.30- 8.30 சமயச்சொற்பொழிவு (திரு.தா.நவறாஜ் அவர்கள்) |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

22.05.2012 ஆலய பரிபாலனசபையினர்

(18466) (14-15)

## 45 ஆம் நாள் நினைவலைகள்



| தாயின் மடியில் | தரணியின் மடியில் |
|---|---|
| 25 | 10 |
| ★ | ★ |
| 03 | 04 |
| ★ | ★ |
| 1981 | 2012 |

### சிவராசசிங்கம் ஜெயராஜ்

உன்னைக் காணும் சிறுபிள்ளை
மாமா என்றழைத்தால்
உள்ளம் மகிழ்வாய்!
உரிமையாய் ஆசை மாமா என்றழைக்க
சொந்தமாய் உறவு வந்த வேளையில்
நீயில்லை இவ்வுலகில்
உன் உருவப்பட விளக்கு
ஒரு கணம் அணைந்து விட்டால்
மருமகனின் மாறும் முகம் தேற்ற
என்ன பதில் நாம் உரைப்போம்.

**உன் நினைவில் வாழும் மருமகன்**
**இராஜரூபன் விதுர்சிகன்**
ஸ்ரார் ஹொட்டல்,உரும்பிராய்ச்சந்தி, யாழ்ப்பாணம் (18464)(8-14)




## பணிப்பெண்களை சிங்கப்பூருக்கு அனுப்புவதை இடைநிறுத்தவும்

### சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வேண்டுகோள்

கொழும்பு, மே 23

இலங்கைப் பெண்களை சிங்கப்பூருக்கு பணிப் பெண்களாக அனுப்புவதை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது விசாரணைப் பிரிவினர் ஊடாக இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கப்பூருக்குப் பணிப் பெண்களாகச் செல்லும் பெண்களில் அதிகமானவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பகின்றமை தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றதையடுத்து இந்த வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் பல சிறுமிகள் சிங்கப்பூரில் பாலியல் தொழிலில் ஈடுப டுத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலான தகவல்கள், இடம்பெற்றமை கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து வெளியாகியுள்ளது.

இதன்படி அந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார்.

இதேவேளை சிங்கப்பூர் நோக்கிப் பயணிக்கும் சிறுமிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, விசாரணைகளை நடத்துமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திடம் வேண்டுகோள்விடுத்துள்ளது. (வ)

## தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா பிரான்ஸில்

உலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவியவரும், உலக தமிழராய்ச்சி மாநாடுகளை நடத்துவதற்கு வித்திட்டவருமான வணபிதா தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி பிரான்ஸில் நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா குழு தலைவர் எம்.ரவீந்திரநாதன் மேற்கொண்டுள்ளார்.

இந்த விழாவில் கருத்தரங்கு, கவியரங்கு, சிறப்பு சொற்பொழிவு, கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற உள்ளது. நூற்றாண்டு விழா சிறப்பு மலருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்கள் அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி



கடந்த (14.05.2012) திங்கட்கிழமை காலமான
திருமதி பரமேஸ்வரி மகேந்திரம்
[கட்டுவன் மேற்கு தெல்லிப்பழை]
அவர்களின் பிரிவால்துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு பேறாமக்கள்
பொ.அமிர்தலிங்கம்
(ஓய்வுநிலை தொலைக்கொ ரு உக்கிரோகத்த் இலங்கை)
பொ.சிறி கணேசலிங்கம் (இந்தியா)
சி.ஜெயசீலன் (கனடா)
மா. கோகிலநாதன் (லண்டன்)

பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம். (18467) (14-15)

## மரண அறிவித்தல்



### திருமதி சந்திரன் சறோஜாதேவி

ஆனைக்கோட்டை ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரன் சறோஜாதேவி நேற்றுமுன்தினம் (21.05.2012) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சந்திரனின் (ஆஷா பான்சி கவுஸ் பரமேஸ்வராச்சந்தி திருநெல்வேலி) அன்பு மனைவியும், சண்முகாநாதன் - பொன்னரியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் ஆஷா, மிதுசனா, ரேவதி, ஆகியோரின் அன்புத்தாயும் தீபனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கணவர்
சந்திரன்(ஆண்டி)

ஆஸ்பத்திரி வீதி,
ஆனைக்கோட்டை. (18471) (14-15)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 | 10 |
| ★ | ★ |
| 03 | 04 |
| ★ | ★ |
| 1981 | 2012 |

### சிவராசசிங்கம் ஜெயராஜ்

எமது குடும்பத்தலைவர் சிவராசசிங்கம் ஜெயராஜ் (10.04.2012) அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு எமது துயரில் பங்கு கொள்ள இல்லம் நாடி வந்தவர்கள், மரணச்சடங்குகளில் கலந்துகொண்டவர்கள் தாயகத்திலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தொடர்பு கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் ஊர்மக்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிரியைகள் (அந்தியேட்டி) இன்று (23.05.2012) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்மாசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு **குடும்பத்தினர்.**
(18463)(8-14)

## யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஆண்டு விழா வாழ்த்து

அங்கமொன்று குறைந்த போதும் - தரணி
எங்கும் எம்மை குறையவிடாது - தாய்போல்
தாங்கும் எம் சங்கம் இன்று
காண்கிறது ஆண்டொன்றின் நிறைவு
ஒளி இழந்த எமக்கின்று ஒளிதந்த எம் சங்கம்
தொடர்ந்து இங்கு ஒளியூட்ட உதவிடும் உள்ளங்கள்
அனைவர்க்கும் நன்றிகளைச் சொல்கின்றோம் இந்நாளிலே
துணைநிற்கும் உங்களுடன் வெல்வோம் நம் நாளையையும்
வித்தகர்கள், விரிவுரையாளர்கள், கற்றவர்கள் என பலரை
பெற்ற எம் சங்கம் இன்று பெருமிதம் கொள்கிறது
எத்தடைகள் வந்த போதும் ஏற்ற இப்பணி இன்னும்
இயங்கட்டும் சிறப்புடனே எம் சங்கம் வாழியவே

வாழ்த்துவோர்:-
யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் யாழ் விழிபுலனற்றோர் சங்க அங்கத்தவர்கள்

(18462) (14-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை ஆராய்ச்சி நிலையம் ஜூலை நடுப்பகுதியில் திறப்பு

## இந்தியப் பிரதிநிதிகளும் பங்கேற்பர்

ஆராய்ச்சி நிலையத்துக்கான ஆளணி வசதியை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நிலையத்தை திறப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளதாகப் பனை அபிவிருத்திச்சபை தெரிவித்தது.

யாழ்ப்பாணம், மே 23

கைதடியில் உள்ள பனை அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சி நிலையத் திறப்பு விழா எதிர்வரும் ஜூலை மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது. இந்தத் திறப்பு விழாவுக்கு இந்திய அரசின் பிரதிநிதிகளையும் அழைப்பதற்குப் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி நிலையம் இந்தியாவின் நிதி உதவியுடனேயே புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஆராய்ச்சி நிலையத்துக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களையும் இந்தியா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் ஜூலையில் ஆராய்ச்சி நிலையத்தைத் திறந்து வைப்பதற்கும், அதற்கு இந்திய அரசின் பிரதிநிதிகளை அழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் ஆராய்ச்சி நிலையத்துக்கான ஆளணி வசதியை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அனைத்து ஏற்பாடுகளும் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# பசுப்பாலின் நுகர்வு திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 23

யாழ். குடாநாட்டில் பசுப்பாலின் நுகர்வு திடீரென அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்தது.

பால்மாவின் விலையை அரசு அதிகரித்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் பசுப்பாலின் நுகர்வில் மக்கள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

இதனால் பால் விற்பனை நிலையங்களில் காலையிலேயே பசுப்பால் விற்றுத் தீர்ந்து விடுவதாகச் சங்க வட்டாரங்கள் மேலும் கூறின.

இதேவேளை - தற்போது கோயில் திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாலும் மக்களில் அதிகமானோர் விரத அனுஷ்டானங்களில் ஈடுபட்டு வருவதாலும் பசுப்பால் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தக் காரணங்களினாலும் பசுப்பாலின் நுகர்வு திடீரென அதிகரித்துள்ளதாக அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் மேலும் கூறின.

பால் விற்பனை நிலையங்களுக்கு வரும் பசுப்பால் காலையிலேயே முற்றாகத் தீர்ந்து விடுவதாகவும் இதனால் பசுப்பாலுக்கு இப்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

# கிளை முகாமையாளருக்கு ஊக்குவிப்பு வழங்கும் திட்டம்



கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதிகூடிய ரொக்க வியாபாரத்தில் ஈடுபடும் பணியாளர்களுக்கான விசேட ஊக்குவிப்பு வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

கடந்த ஆண்டும், இந்த ஆண்டு முற்பகுதியிலும் அதிக விற்பனையை மேற்கொண்ட 10 கிளை முகாமையாளர்களுக்கான ஊக்குவிப்பு அண்மையில் வழங்கப்பட்டது.

இதில் அதிகூடிய வியாபாரத்தை மேற்கொண்ட இராசகிராமம் கிளையின் முகாமையாளர் செல்வி ப.நிரஞ்சனாவுக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் சங்கத் தலைவர் செ.செல்வராசா ஆகியோர் இணைந்து பரிசுப் பொதியை வழங்கி ஊக்குவிப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். (த-17)

# வடமராட்சியில் செயலிழந்த தொலைபேசி சேவை சீரானது

யாழ்ப்பாணம், மே 23

வடமராட்சிப் பிரதேசத்தில் ரெலிகொம் கேபிள் தொலைபேசி இணைப்புகளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்றுமுன்தினம் செயலிழந்த தொலைபேசி இணைப்புகள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளன.

வடமராட்சி மாலு சந்தியில் உள்ள பிராந்திய தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே தொலைபேசி இணைப்புகள் செயலிழந்தன என்று தெரியவருகிறது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் ரெலிகொம் நிலையத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து தொழில்நுட்ப உதவியாளர்கள் திருத்த வேலைகளை மேற்கொண்டனர். இதனையடுத்து சுமார் 7 மணிநேரம் தடைப்பட்டிருந்த தொலைபேசி இணைப்புகள் மீண்டும் செயற்படத் தொடங்கின.

வடமராட்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மின்சாரம் தடைப்பட்டிருந்தமையால் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் சேவையில் ஈடுபட்டிருந்த போதும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-14-8)

# நடுக்கடலில் தத்தளித்த குமுதினி

## விரைந்து வந்த கடற்படை உதவி

காற்று, கடல் கொந்தளிப்பு மிகவும் மோசமாகக் காணப்படும் இந்த நேரத்தில் இயந்திரக் கோளாறினால் குமுதினி நடுக்கடலில் தத்தளித்தது.

யாழ்ப்பாணம், மே 23

பயணிகளுடன் நெடுந்தீவில் இருந்து நேற்றுக் காலை குறிகாட்டுவானுக்குச் சென்றுகொண்டிருந்த 'குமுதினி' படகு திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறினால் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நடுக்கடலில் தத்தளித்தது. இதனால் படகில் பயணித்தவர்கள் அச்சமடைந்தனர்.

காற்று, கடல் கொந்தளிப்பு மிகவும் மோசமாகக் காணப்படும் இந்த நேரத்தில் இயந்திரக் கோளாறினால் குமுதினி நடுக்கடலில் தத்தளித்தது. இதனால் பயணிகள் பெரும் சிரமப்பட்டதுடன் 'என்ன நடக்குமோ' எனப் பயந்தனர்.

குமுதினி தத்தளிப்பதை அவதானித்து அங்கு வந்த கடற்படைப்படகு குமுதினியையும் அதில் பயணித்தவர்களையும் பாதுகாப்பாக நெடுந்தீவுத்துறை முகத்தில் கொண்டு சென்று நிறுத்தியது. அதனைத் தொடர்ந்து வடதாரகை மூலம் பயணிகள் மீண்டும் குறிகாட்டுவானுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (த-7)

# கரவெட்டியில் முக்கிய வீதிகளுக்கு மின் விளக்குகள் இல்லை

மந்திகை, மே 23

கரவெட்டிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட முக்கிய வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவில் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாலுசந்தியிலிருந்து அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயிலுக்குச் செல்லும் அல்வாய் வீதிக்கு மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. இந்த வீதி இந்தப் பிரதேசத்திலுள்ள முக்கிய வீதிகளில் ஒன்றாகும். இதேபோலவே துன்னாலை தாமரைக்குள வீதிக்கும் மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை.

எனவே பிரதேச சபை நிர்வாகம் விரைந்து இந்த வீதிகளுக்கு மின் விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-237)

# நுங்கு பறிக்கத் தடை

யாழ்ப்பாணம், மே 23

பனை மரங்களில் இருந்து நுங்கு பறிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது யாழ்ப்பாணத்தில் 'நுங்கு சீசன்' ஆரம்பமாகியுள்ளது. சிலர் வியாபார நோக்கம் கருதி நுங்கை முற்றவிடாமல் பனைமரங்களில் இருந்து இறக்கி விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறு நுங்கு குலை குலையாகப் பறிக்கப்படுவதால் பனம் சார்ந்த உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இதனால் கடந்த காலத்தில் பனம் கிழங்குக்குக் கூடப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து நுங்கு பறிக்கும் நடவடிக்கைகளுக்குப் பனை அபிவிருத்திச் சபை முற்றாகத் தடைவிதித்துள்ளது.

இனிமேல் நுங்கு பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர். நுங்கு பறிப்பவர் சீவல் தொழிலாளியாக இருந்தால் அவரது தொழில் அனுமதி அட்டை இரத்துச் செய்யப்படும் - என்றார் தலைவர். (த-17)

## குறைகேள் சேவை

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர் மக்கள் முறைகேடுகள் கருத்தரங்குகளை வட்டார ரீதியாக நடாத்தி வருகின்றனர். நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகளில் மன்றத்தின் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர் ஆகியோர் மக்களால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளை கேட்டு அதற்கான தீர்வுகளையும் வழங்கி வருகின்றனர்.

# புனரமைக்கப்படாத வீதிகள்

மந்திகை, மே 23

கடந்த ஆண்டு கரவெட்டி பிரதேச சபையினால் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுமெனத் தீர்மானிக்கப்பட்ட நான்கு வீதிகளிலும் இதுவரை எந்தப் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படாமல் உள்ளமை குறித்து அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி மத்தொனி வீதி, கரவெட்டி நாரதா பாடசாலை வீதி, இமையாணன் கலைமகள் வீதி, கரணவாய் காவில் வீதி, அல்வாய் சாமணந்தறை பிள்ளையார்கோயில் வீதி என்பன 'நெல்சிப்' திட்டத்தின் ஊடாக புனரமைக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் கரவெட்டி மத்தொனி வீதி மாத்திரமே புனரமைக்கப்பட்டுள்ளது.

ஏனைய வீதிகள் புனரமைக்கப்படாமல் 'நெல்சிப்' வேலைத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த வீதிகள் யாவும் மிகமோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன என்றும், இவற்றையும் விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-237)

# பெண் தலைமைக் குடும்பங்கள் வடமராட்சிப் பகுதியில் அதிகம்

யாழ்ப்பாணம், மே 23

கணவனை இழந்து, பிரிந்து வாழும் பெண்களை அதிகம் கொண்ட பிரதேசமாக யாழ். மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசம் உள்ளதாக யாழ். மாவட்ட உதயதாரகை மகளிர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒன்றரை வருடமாக மகளிர் குழுக்கள் வீடு வீடாகச் சென்றும், சங்கங்கள் ஊடாகவும் மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கைகளில் யாழ். மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசம் அதிகளவிலான பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவற்றில் அதிகளவான பெண்கள் கணவனை இழந்தும், கணவனைப் பிரிந்தும் பிள்ளைகளுடன் தனியாக வசிக்கின்றார்கள். இந்தப் பெண்களில் அதிகமானோர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

அத்துடன் திருமணமான பெண்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவும், சிறு வயதில் திருமணம் முடித்தவர்களாகவும் உள்ளனர் என்று ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. (த-14)

# கண்காணிப்பில் உணவகங்கள்

வடமராட்சி,மே 23

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள உணவு உற்பத்தி நிலையங்கள், உணவகங்கள் மற்றும் தேநீர் சிற்றுண்டிச் சாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் சுகாதாரச் செயற்பாடுகள் அடிக்கடி கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே உணவு கையாளும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தர நிர்ணயத்துக்கு குறைவாக சுகாதார செயற்பாடுகளைச் செய்து வரும் நிறுவனங்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


இதேவேளை தர நிர்ணயத்துக்கு மேலதிகமாக சுகாதாரச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தரச் சான்றிதழ்களை உயர்த்தி வழங்கவும் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவு அலுவலகங்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர் மீதான இனப்படுகொலை

# என்ன செய்கிறது இந்தியா?

## மாநிலங்களவையில் டி.ராஜா கேள்வி



இலங்கையில் தமிழர்கள் மீது திட்டமிடப்பட்டு நடத்தப்படும் இனப்படுகொலையைத் தடுக்க, மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று மாநிலங்களவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ராஜா நேற்று கேள்வி எழுப்பினார்.

மாநிலங்களவையில் நேற்று நேரமில்லா நேரத்தின்போது டி.ராஜா பேசியதாவது:

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இலங்கைத் தமிழர்களின் இனப்படுகொலை தொடர்ந்து நடைபெறுகின்றது. இந்துக் கோயில்கள் அழிக்கப்படுகின்றன. பாரம்பரியமாக வசித்த வடக்கு மற்றும் கிழக்கு பகுதியிலிருந்து தமிழர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றனர்.

இலங்கை இராணுவத்தில் 60 வீதமானோர் வடக்கு பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். அங்கு இராணுவமும், பொதுமக்களும் 1:4 என்ற வீதத்தில் உள்ளனர். கிழக்கில் நான்கு பொதுமக்களுக்கு ஒரு படையினர் என்ற விகிதத்தில் படைச் செறிவு உள்ளது.

இனப்படுகொலைகள் விடயத்தில் இந்திய அரசின் கொள்கை என்ன? முகாம்களில் இருந்து தமிழர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

தமிழ்ச் சமூகம் அழிக்கப்பட்டு வருகிறது. தமிழர்களின் இனப்படுகொலையைத் தடுக்க மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

அனைத்துலக சமூகத்தின் குரலை இலங்கை அரசு கண்டுகொள்வதேயில்லை- என்றார்.

இதேவேளை ராஜாவின் கோரிக்கைக்கு தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். (வ)

### ஆந்திராவில் ரயில் விபத்து:

# 22 பேர் பரிதாப சாவு



அனந்தப்பூர், மே 23

ஆந்திராவின் அனந்தப்பூர் மாவட்டத்தில் நேற்று அதிகாலையில் நடந்த கோர விபத்தில் பெங்களூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹம்பி எக்ஸ்பிரஸ், பென்னிகொண்டா ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயிலுடன் மோதியதில், 22 பேர் உயிரிழந்தனர். 46 பேர் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

இந்த ரயிலில் இருந்தவர்கள் ஹூப்ளியிலிருந்து பெங்களூர் நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தனர். அதிகாலை 3.15 மணியளவில் பென்னிகொண்டா ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதி ஹம்பி எக்ஸ்பிரஸ் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ரயிலின் இரண்டு பெட்டிகள் தடம்புரண்டு தீப்பிடித்தன. இதில் 22 பேர் உயிரிழந்ததுடன் 46 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீட்புநடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சமிக்ஞை கோளாறால்



இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்ற போதும், குறித்த பயணிகள் ரயில் கட்டுப்பாட்டை மீறி மிக வேகமாகப் பயணித்ததே விபத்துக்குக் காரணம் என குற்றம் சாட்டப்படுகின்றது. (வ)

## இராணுவத் தளபதிக்கு அந்தோனி பிரிவுபசாரம்



டில்லி, மே 23

எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ள இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங்குக்கு பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி இன்று புதன்கிழமை பிரிவுபசார விருந்து அளிக்கவுள்ளார்.

டில்லி கன்டோன்மென்டில் உள்ள யுத்த கௌரவ அரங்கில் இந்த விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அதே இடத்தில் முப்படைகளின் தலைமைத் தளபதியான ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் வி.கே.சிங்குக்கு நாளை வியாழக்கிழமை விருந்தளிக்கிறார்.

இதன் பின்னர் இராணுவத் தலைமைத் தளபதியாக வி.கே.சிங் கலந்து கொள்ளும் மிகப்பெரிய இறுதி நிகழ்வு தேசிய பாதுகாப்பு பயிற்சி மையத்தில் நடைபெறும் பயிற்சி முடித்தோருக்கான அணிவகுப்பு ஆகும்.(வ)

## இந்தவருடம் டெல்லியில் இனங்காணா சடலங்கள்

# 1000

இந்த வருடம் 1000 இற்கும் மேற்பட்ட இனங்காண முடியாத சடலங்கள் டில்லியில் மீட்கப்பட்டுள்ளன என்று அந்த மாநிலப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவப்பாதுகாப்பு அலுவலகம் அருகே கிடந்த பையில் துண்டு துண்டாக வெட்டிய நிலையில் ஆண் ஒருவரின் உடல் கடந்த சனிக்கிழமை தெற்கு டில்லியில் மீட்கப்பட்டது.

இதேபோல மத்திய டில்லியில் பிரசாத் நகரில் பையினுள் முற்றிலும் அழுகிப்போன நிலையில் இளைஞரின் சடலம் இருந்தது. இவற்றோடு சேர்த்து இந்தவருடம் மட்டும் ஆயிரத்து 12 அடையாளம் தெரியாத சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கடந்த வருடம் 3 ஆயிரத்து 337 அடையாளம் தெரியாத சடலங்கள் டில்லியில் மீட்கப் பட்டிருந்தன**

இதேவேளை கடந்த வருடம் 3 ஆயிரத்து 337 அடையாளம் தெரியாத சடலங்கள் டில்லியில் மீட்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய மாநிலங்களில் கொலை செய்யப்படும் நபர்களின் உடல்களை டில்லியில் போட்டுவிடுவதாக தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கவலை தெரிவித்துள்ள டில்லி முதல்வர் ஷீலா தீட்சித், உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துடன் ஆலோசனை நடத்தியுள்ளார். (வ)

## இந்திய இராணுவத்துக்கு 'ரோபோ'

இந்திய இராணுவத்துக்குப் பயன்படும் வகையிலான ரோபோ ஒன்றை தயாரிக்கும் பணியில் டில்லியைச் சேர்ந்த பொறியலாளர் ஆகாஷ் சின்ஹா ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

இந்த ரோபோ மும்பை பயங்கரவாதத் தாக்குதல் போன்ற சூழ்நிலைகளில் உதவும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளது.

மேலும் இந்த ரோபோக்களால் பார்க்கவும் கேட்கவும் முடியும், வெடிகுண்டுகளை எடுக்கவும், செயல் இழக்கச் செய்யவும் முடியும், ரிமோட் மூலம் இவைகள் இயக்கப்படும்.

25 கிலோ எடை கொண்ட இந்த ரோபோ 50 கிலோ எடையிலான எடையைத் தூக்கும் திறன்கொண்டவை- என்றார். (வ)

### மீனாட்சி அம்மன் கோயில் இருந்து

# வெளியேற்றப்பட்டார் நித்தியானந்தா



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கருவறைக்குள் சுவாமி நித்தியானந்தா செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

மதுரை ஆதீன மடத்திற்கு இளைய ஆதீனமாக சுவாமி நித்தியானந்தா நியமிக்கப்பட்டதற்கு தமிழகத்திலுள்ள இந்து அமைப்புகள், ஏனைய ஆதீனங்கள், மடாதிபதிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதோடு நித்தியானந்தாவை ஆதீனமாக ஏற்க முடியாது என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

மேலும் பல்வேறு இந்து அமைப்பினர் இணைந்து ஆதீன மீட்புக்குழு நிறுவி தொடர் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். அரசை தலையிட வலியுறுத்தி மதுரை மாவட்ட ஆட்சியாளர், இந்து அறநிலையத் துறை இணை ஆணையாளரிடம் மனுக்கள் வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் 2 தினங்களுக்கு முன்பு, சுவாமி நித்தியானந்தா சார்பில் தங்கத் தேர் இழுக்க ஏற்பாடாகியிருந்தது.

இதற்கு கோயில் நிர்வாகம் அனுமதி அளிக்கவில்லை. இதற்கான கட்டணத்தை கோயில் நிர்வாகம் வாங்கவில்லை. இதனால் தங்கத் தேர் இழுக்கும் முயற்சியைக் கைவிட்டு, ஆதீனம் அருணகிரிநாதரும், நித்தியானந்தாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றனர்.

அங்கு அவர்கள் கருவறைக்குள் நுழைய முயன்றபோது, நித்தியானந்தாவுக்கு அர்ச்சகர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து கோயில் ஊழியர்களுக்கும், நித்தியானந்தா சீடர்களுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த சம்பவம் கோயிலில் பரபரப்பை ஏற்படுத்தியது. (வ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 96 இராணுவத்தினர் சாவு

## யேமனின் சுதந்திர விழா நிகழ்வில் தற்கொலை குண்டுதாரி புகுந்து தாக்குதல்

சானா, மே 23

யேமனில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 96 இராணுவத்தினர் உயிரிழந்தனர்; 300 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

யேமனில் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் ஒருங்கிணைப்பின் 22ஆவது ஆண்டு விழாவையொட்டி இராணுவத்தினர் தலைநகர் சானாவில் நேற்று முன்தினம் அணிவகுப்பு நடத்தினர். தீவிரவாதி ஒருவர், மத்திய பாதுகாப்புப்படையைச் சேர்ந்தவர் என்று தன்னைக் கூறிக்கொண்டு இராணுவ உடை அணிந்து அணிவகுப்புக்குள் நுழைந்தார். பின்னர் தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார்.



மிகுந்த சத்தத்துடன் குண்டு வெடித்ததில் இராணுவத்தினர் நாலாபுறமும் தூக்கியெறியப்பட்டனர். தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருமே இராணுவத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. காயமடைந்தவர்களை மீட்க 12இற்கும் மேற்பட்ட அம்புலன்ஸ்கள் ஈடுபட்டன. காயமடைந்தவர்கள் 7 மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

இதில் அந்த நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் முகமது நாசர் அகமது அணிவகுப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக அங்கு வந்திருந்தார். ஆனால் குண்டு வெடித்ததில் நூலிழையில் காயமின்றி அவர் உயிர் தப்பினார்.

யேமன் நாட்டு ஜனாதிபதியாக அப்தராபு மன்சூர் ஹாடி பொறுப்பேற்றபின் நடந்த மிக மோசமான தாக்குதல் இதுவாகும். கடந்த பெப்ரவரியில் இவர் பதவியேற்றதும் அல்குவைதா தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் தொடரும் என்று உறுதியளித்திருந்தார்.

இதையடுத்து யேமன் நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள சில நகரங்களைப் பல ஆண்டுகளாக ஆக்கிரமித்துள்ள அல்குவைதா தீவிரவாதிகளின்மீது இராணுவத்தினர் கடந்த 10 நாள்களாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் தீவிரவாதிகள் வசமிருந்த சில நகரங்களை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

# மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் மீது குற்றச்சாட்டு

மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம் புதிய கிரிமினல் குற்றச்சாட்டை எதிர்கொள்கிறார்.

இந்தத் தடவை, கடந்த மாதத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அவரது பங்கு குறித்ததாகக் குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது.

இதில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், விரைவில் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவதற்கானத் தகுதியை அவர் இழப்பார்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து அன்வர் இப்ராஹிம் கருத்துத் தெரிவித்ததாவது:-

கடந்த மாதங்களில் மலேசியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள் தொடர்பில் எதிர்க்கட்சி சார்ந்த ஆர்ப்பட்டங்களை பரவலாக முன்னெடுத்து வந்தோம். எமது ஆர்ப்பாட்டங்களின் அழுத்தம் காரணமாக அரசு அந்தச் சட்டத்தை இடைநிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதனால் நாட்டின் எதிர்க்கட்சியை பலமற்றதாக்க இந்த அரசு பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டையும் பார்க்க வேண்டும் - என்றார்.


மேலும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்று அவரது சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

# நயாகரா நீர் வீழ்ச்சியில் குதித்தவர் உயிர் தப்பினார்

வொஷிங்டன், மே 23

நயாகரா நீர் வீழ்ச்சியில் குதித்து தற்கொலைக்கு முயன்றவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார். அமெரிக்காவில் உள்ள நயகரா நீர் வீழ்ச்சியில் அடையாளம் தெரியாத ஒருவர் 180 அடியிலிருந்து குதித்து தற்கொலைக்கு முயன்றவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார் என, நயகரா நீர்வீழ்ச்சி பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 10.20 மணிக்கு நடந் தது எனவும் காயமடைந்த அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.




சிக்காக்கோவில் நடைபெற்று வரும் நேட்டோ மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்க மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்க இராணுவ மற்றும் பொலிஸ் பிரிவினர் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## மனித மாமிசம் சாப்பிட்ட மூவர் தூக்கிலிடப்பட்டனர்

வடகொரியாவில் மனித மாமிசம் விற்பனை செய்தமை மற்றும் உட்கொண்டமை போன்ற குற்றச்சாட்டில் மூவர் தூக்கிலிடப்பட்டனர் எனத் தென்கொரிய அரசினால் நடத்தப்படும் கொரிய ஒன்றிணைப்புக்கான கொரிய நிறுவகம் தெரிவித்துள்ளது.

வடகொரியாவிலிருந்து தப்பிவந்த 230 பேரிடம் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மனித உரிமைகள் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குற்றத்திற்காக 2006 ஆம் ஆண்டு முதல் பலர் தூக்கிலிடப்பட்டதைத் தாம் பார்த்ததாக வடகொரியாவிலிருந்து தப்பிவந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சக ஊழியர் ஒருவரை கொலை செய்து ஊழியரின் உடற்பாகங்களை உட்கொண்டதுடன் ஏனைய பாகங்களை விற்பனை செய்தமைக்காக ஒருவர் தூக்கிலிடப்பட்டார் என சிலர் தெரிவித்தனர் என்று தென்கொரியாவின் யோன் ஹாப் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

# எவரெஸ்ட்டில் விபத்து



காத்மாண்டு, மே 23

நேபாளத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில், 110 பேர் மலை ஏறத் தொடங்கினர். 8,848 மீற்றர் உயரமுள்ள இந்தச் சிகரத்தில், ஜப்பானைச் சேர்ந்த 73 வயது பெண்ணும் ஏறிச் சாதனை படைத்தார். மலை ஏறும் குழுவில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த 12 பேர் உட்பட 13 பேர் இந்தியர்கள். இவர்கள் வரும் 26ஆம் திகதி எவரெஸ்ட் சிகரத்தைச் சென்றடைய உள்ளனர் மலை ஏறும்குழுவில் ஏற்கனவே இரண்டு பேர் இறந்து விட்டனர். இதற்கிடையே எவரெஸ்ட் சிகரத்தை வெற்றிகரமாக அடைந்து, மலையடிவாரத்துக்கு திரும்பிக் கொண்டிருந்த, கனடாவைச் சேர்ந்த நேபாள பெண் ஷ்ரேயா ஷா, 61 வயதான ஜேர்மன் மருத்துவர் மற்றும் தென் கொரியாவைச் சேர்ந்த ஒருவர் ஆகியோர் பனிப்புயலில் சிக்கி இறந்து விட்டதாகவும், சீனாவைச் சேர்ந்த ஒருவரும், நேபாள வழிகாட்டி ஒருவரும் இந்தப் பனிப்புயலில் காணவில்லை என, நேபாள சுற்றுலாத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள் விடுதலை



**மஞ்சள் கடற்பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்ட சீன மீனவர்களின் மூன்று படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன என்று பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.**

வட கொரியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 29 சீன மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மஞ்சள் கடற்பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்ட சீன மீனவர்களின் மூன்று படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளனஎன்றும் பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதை பியோயொங்கிலுள்ள சீனத் தூதரகத்திற்கு வட கொரிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட கொரிய - சீனக் கடல் எல்லையில் வைத்து இந்த மீனவர்கள் கடந்த எட்டாம் திகதி கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தகுந்த உடல் நலத்துடன் உள்ளனர் என பியோங்யொங்கிலுள்ள சீன தூதரகத்தின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# ஈரானுடன் பேச்சுக்களுக்கு முன் உடன்படிக்கைக்கு முயல்கிறது ஐ.நா.

பாக்தாத் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் ஈரானுடன் அணு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அணு ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றது எனக் கூறப்படும் பகுதியைக் கண்காணிப்பது குறித்து தெஹ்ரானுடன் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடன்படிக்கை ஏற்படுத்தப்படுமாயின், பாக்தாத் பேச்சுவார்த்தைக்கு அது நம்பிக்கையளிக்கும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


ஈரான் அதிகாரிகளுடன் ஐ.நா அணுசக்தி முகவர் நிலையத்தின் தலைவர் யுகியோ அமானோ நேற்று இது குறித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்பிரகாரம் சர்ச்சைக்குரிய அணுதிட்டம் தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஈரானின் சிரேஷ்ட அதிகாரியான சாதி ஜலீலை, யுகியோ அமானோ நேற்றுச் சந்தித்தார்.

அதன்போது ஈரானுடன் மேற்கொள்ள இருக்கும் உடன்படிக்கை தொடர்பான கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டன. ஆயினும் அது எவ்வகையான உடன்படிக்கை என்பது தொடர்பிலான கருத்துக்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. கடந்த காலங்களில் ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவுடன் ஈரான் கொண்டிருந்த முரண்பாடுகளுக்கு இது ஒரு தீர்வாக அமையும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்தாரியை சந்திக்க ஒபாமா மறுப்பு



சிக்காகோ, மே 23

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சந்திக்க மறுத்துவிட்டார்.

நேட்டோ நேச நாடுகள் இடையேயான பேச்சு வார்த்தைகள் அமெரிக்க நகரான சிக்காகோவில் நடைபெறுகிறது. நேட்டோ நேச நாடுகளுக்கு உதவி புரிந்து வருவதால் ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானும் இதில் கலந்து கொள்கின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் வேளையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைத் தனியே சந்தித்துப் பேச விரும்பினார் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி. சரிந்துவரும் தன்னுடைய செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்தும் வகையில் பராக் ஒபாமாவுடன் இரு தரப்புப் பேச்சுவார்த்தை நடத்த சர்தாரி திட்டமிட்டார்.

ஆனால் இரு ஜனாதிபதிகள் மட்டும் சந்திக்கும் திட்டம், இரு தரப்பு பேச்சு வார்த்தை முன்பாகவே தீர்மானிக்கப்படாததால் திடீரென்று அப்படியொரு சந்திப்புக்குச் சாத்தியமில்லை என்று ஒபாமா திட்டவட்டமாகக் கூறிவிட்டார் என அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரி கூறினார்.

ஆனால், ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்ஸாய்-ஒபாமாவின் திட்டமிட்ட சந்திப்பு கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகளுக்குப் பொருள்கள் எடுத்துச் செல்லும் வழியை பாகிஸ்தான் மூடிவிட்டது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆப்கான் எல்லையில் இருக்கும் பாகிஸ்தான் எல்லைக் காவல் நிலையத்தின் மீது அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் 24 பாகிஸ்தானிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் பாகிஸ்தானில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானுக்குச் செல்லும் சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் ஆப்கானிஸ்தானுக்குள் எந்த இராணுவ உதவிப் பொருளையும் நேட்டோ படையினர் எடுத்துச் செல்ல முடிவதில்லை. இந்த வழித் தடத்தை உடனடியாகத் திறக்க வேண்டும் என்று அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது.

இந்தப் பிரச்சினையைப் பாகிஸ்தான் விரைவாகத் தீர்க்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் இந்த விடயத்தில் பாகிஸ்தான் அரசு காட்டிவரும் இழுத்தடிப்புக்களுக்கு விசனம் வெளியிடும் முகமாகவே சர்தாரியினுடனான சந்திப்பை ஒபாமா தவிர்த்தார் எனக் கூறப்படுகின்றது.

# பான் கீ மூன் கண்டனம்



யேமன் தலைநகர் சனாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை 'கடுமையான வார்த்தைகளில்' கண்டனம் தெரிவித்துள்ளது.

இது 'கொடூரமான செயல்' என வர்ணித்துள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அறிக்கை, அனைத்துப் பயங்கரவாத அமைப்புக்களையும் இல்லாதொழிக்கவுள்ளது என உறுதிபூண்டுள்ளது.

இதேவேளை, இந்த தற்கொலைத் தாக்குதல் சம்பவத்திற்கு தனிப்பட்ட முறையில் கண்டனம் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், யேமனிலுள்ள அனைத்துக் கட்சிகளும் வன்முறைகளை நிராகரித்து யேமன் அரசியல் மாற்ற ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதில் முழுமையான மற்றும் ஆக்கபூர்வமான பங்கை வகிக்க வேண்டுமெனவும் கூறினார்.

ஜனாதிபதி மாளிகைக்கு அருகிலுள்ள சதுக்கத்தில் தங்களது உறுப்பினர்களில் ஒருவர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டார் என யேமனிலுள்ள அல்குவைதா கிளை தெரிவித்துள்ளது.

போராளிகளுக்கு எதிராக கடுமையான மற்றும் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதாக யேமன் ஜனாதிபதி அப் ரப்போ ஹடி மன்சூர் உறுதியளித்தார்.

# கணக்குகளை வெளியிட்டது சுவிஸ் வங்கி

சிரியாவின் ஜனாதிபதி ஆசாத்துக்கும், லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபிக்கும் நெருக்கமானவர்களின் கறுப்புப்பணப் பட்டியலை சுவிஸ் வங்கியின் ஒரு பிரிவு வெளியிட்டது.

இந்தப் பட்டியலின் அடிப்படையில் மத்திய புலனாய்வுத் துறை இவர்களின் மீது நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

வங்கியின் ஆண்டறிக்கை கடந்த வாரம் வெளியான போது சந்தேகப்படும் பணப் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை 40 சதவீதம் அதிகரித்திருப்பதாக தெரியவந்தது.

அரேபிய நாடுகளில் ஏற்பட்ட எழுச்சிக்குப் பின்பு 3.3 பில்லியன் சுவிஸ் நாணயம் அளவிற்குப் பணம் சுவிஸ் வங்கியில் பாதுகாக் கப்பட்டுள்ளது.

எகிப்திய சர்வாதிகாரி ஹோஸ்னி மூபாரக்கின் நெருங்கிய நண்பர்களும் பத்துப் பன்னிரண்டு குடும்ப உறுப்பினர்களும் ஏற்கனவே விசாரணைக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் உயரமான 'ஸ்கை ட்ரீ' கோபுரம்

உலகின் மிக உயரமான ஒலிபரப்புக் கோபுரம் ஜப்பானிய தலைநகர் டோக்கியோவில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. இந்தக் கோபுரம் 634 மீற்றர் உயரமானதாகும். 'ஸ்கை ட்ரீ' என இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. இதை நிர்மாணிப்பதற்கு மூன்றரை ஆண்டுகள் தேவைப்பட்டன. இந்தக்கோபுரத்தின் 350 மீற்றர் உயரத்திலும் 450 மீற்றர் உயரத்திலும் அவதானிப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது உயரமானது எனினும் துபாயிலுள்ள 828 மீற்றர் உயரமான புர்ஜ் கலிபா கட்டடம் உலகின் மிக உயரமான கட்டடம் என்ற பெருமையை தக்கவைத்துள்ளது.

### 7 ஆண்டைக் கடந்தது யூ டியூப்

சமூக வலைதளமான யூ டியூப், தனது 7 ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. இது குறித்து யூ டியூப் வெளியிட்டுள்ள செய்தியில் எங்களது சமூக வலைத்தளம் 7 ஆண்டு மைல் கல்லை கடந்துள்ளது என்றும் உலகம் முழுவதும் 800 மில்லியன் பேர் பகிர்ந்து கொள்கின்றனர்.

மேலும் அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வந்த அரசியல் சார்ந்த விடயங்களுக்கு யூடியூப் தளம் கணிசமான பங்கை வழங்கியிருந்தது. எமது தளத்தில் வெளியிடப்பட்ட காணொலிகள் சமூகத்தில் பல்வேறுவிதமான நல்ல மாற்றங் களை ஏற்படுத்தி வருகின்றமை எமக்கு கிடைத்த வெற்றி என்றும் தெரிவித்துள்ளது.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(19)

**ஒழுங்குமுறைகள்**

சில ஒழுங்குமுறைகளுக்குட்பட்டு வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

கடிவாளமில்லாத குதிரையைப்போல் கட்டுப்பாடற்ற மனம் கண்டபடி அலையும். அலைகிற மனதைக் கட்டுக்குள் வைத்தால் வாழ்க்கை அமைதியான முறையில் செல்லும்.

வில்ட்யூரன்ட் என்கிற எழுத்தாளர் தம்முடைய நூலொன்றில் (civilization) இப்படிக் குறிப்பிடுகிறார்.

★ உடலையும், மனதையும் தூய்மையாக்கிக் கொண்டு உங்கள் அன்றாட அலுவலைத் தொடங்குங்கள்.
★ பொருள்களை உரிய இடத்தில் வைத்துப் பழகுங்கள்.
★ நன்கு உடுத்திக் கொள்ளுங்கள். (மற்றவர்கள் உங்களைப் பற்றிய முதற் கருத்தை உருவாக்கிக் கொள்வதில் உங்கள் உடைக்கும் முக்கியப் பங்கு உண்டு).
★ வீட்டிலும், வெளியிலும் புன்சிரிப்போடு பழகுங்கள்.
★ மற்றவர்களின் பேச்சை இடை மறிக்கக் கூடாது. உங்கள் முறை வரும்போது பேசுங்கள்.
★ விட்டுக்கொடுக்கவும். உதவவும் தயாராயிருங்கள்.
★ மூளையில் கண்டதையும், திணிக்காதீர்கள்.
★ நாளும் நல்ல நூல்களைப் படியுங்கள்.
★ வெளிக்குப் பணிவுள்ளவனாகவும், உள்ளுக்குள் சுய மரியாதை உள்ளவனாகவும் இருக்கவேண்டும்.
★ எது உகந்த வழி என்பதைக் கண்டுபிடித்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பத்து விதிகளையும் பத்து கட்டளைகளாய் மதித்து நடக்க வேண்டும். நடைமுறை வாழ்க்கையில் மன இறுக்கம் இல்லாமல் செயல்பட இவை உதவும்.

**பேச்சில் கவனம்**

பேச்சு விளைவுகளை உண்டு பண்ணும் சொற்கள் ஆற்றல் மிக்கவை. எதைப் பேசுவது என்பது போலவே எதைப்பேசாமல் தவிர்ப்பது என்பதும் முக்கியம்.

உரையாடலை விவாதமாக்கி விடக் கூடாது. நம்முடைய பேச்சு எதிராளியின் மனதைக் காயப்படுத்தி விடாதபடி வார்த்தைகளைக் கவனமாக தேர்ந்தெடுத்துப் பேசவேண்டும்.

இடைமறித்து, சொல்லின் பொருளறிந்து பேச வேண்டும். பேச்சில் ஆதிக்கம் செலுத்துகிற, எதிராளியை மட்டம் தட்டுகிற முயற்சி கூடாது.

சமய சந்தர்ப்பமில்லாமல் லாப நோக்கில்பேசுகிற பேச்சும், கொடிய சொற்களும், தகுதியற்ற பேச்சும், தனக்கே நன்மையளிக்காத பேச்சும்பிற்பாடு வருத்தப்பட வைக்கும். இதமாக, மிதமாக, யோசித்துப் பேசினால், நொந்து கொள்ளும் நிலை ஏற்படாது.

**மறக்கத் தயாராயிருங்கள்**

காணாமல் போனதையும், கைவிட்டுப்போனதையும், முடிந்து போனதையும் பற்றி அறிவாளிகள் கவலைப்படுவதில்லை.

பழைய கணக்குகளைப் பார்த்தால் என்ன பயன்? இழந்த காதலை அசைபோடுவதால் என்ன பலன்? மனம் அமைதியிழப்பதைத் தவிர வேறெதுவும் நடந்துவிடாது.

காத்திருந்து கிடைக்காமல் போனதையும், எதிர்பார்த்து நடக்காமல் போனதையும் மறந்துவிடுங்கள்.

அலுவலகங்களில் பழைய ஆவணங்களை ஸ்ரோர் ரூமிற்கு அனுப்பி விடுவார்கள். தேவைப்படாதவற்றை எரித்தும் விடுவார்கள். இடநெருக்கடி, நேர விரயம், அனாவசிய குழப்பம் இவற்றை இதனால் தவிர்க்க முடியும். வேண்டாத நினைவுகளையும் அதுபோல் அகற்றி விடுங்கள்.

**மன்னித்து விடுங்கள்**

நண்பர்களின் நம்பிக்கை துரோகத்தில் நீங்கள் துன்பங்களை அனுபவித்திருப்பீர்கள். தொழில் கூட்டாளிகள் வஞ்சனையால் உங்கள் பொருளை அபகரிக்கலாம்.

நண்பர்கள், கூட்டாளிகள் தான் என்றில்லை. குடும்பத்தில் உள்ளவர்களே கூட உங்கள் வீழ்ச்சிக்குக் காரணமாகியிருக்கலாம்.

யாரையும் பழிவாங்கத் துடிக்காதீர்கள். பழிவாங்கும் முயற்சி நண்பரைப் பகையாக்கி விடும். மன்னிக்கிற போது பகைவரும் நண்பராகிவிடுவார். மன்னிக்கத் தெரிந்தவர்கள் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழமுடிகிறது.

**புரிந்துணர்வு**

நாற்பதாண்டுகள் சேர்ந்து வாழ்ந்த பிறகும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாத கணவன் மனைவி உண்டு. அத்தகைய வாழ்க்கை அர்த்தமற்றது. அது மகிழ்ச்சி தராது. உங்கள் வாழ்க்கைத் துணையின் மன ஓட்டத்தைப் புரிந்தவராயிருங்கள். அவருடைய விருப்பு வெறுப்புகளைத் தெரிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.

வீட்டில் மட்டுமல்ல, அலுவலகத்திலும் புரிந்து கொள்ளும் திறன் உதவும். மேலதிகாரியின் எதிர்பார்ப்பை, கீழ்மைப் பணியாளர்களின் செயல்திறனைப் புரிந்து வைத்திருங்கள். மனிதர்களை கையாளுவதில் புரிதல் முக்கியம். தேவையில்லாத உரசல்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

**மனதின் சமநிலை**

சூழ்நிலைகளையும், மனிதர்களையும் மிகச் சரியாக மதிப்பிடக் கற்றுக் கொள்ளுங்கள். யாரிடமும் பாரபட்சம் இல்லாமல் நடந்து கொள்ளுங்கள்.

நிகழ்வுகளை மனச்சோர்வின்றி எதிர்கொள்ளுங்கள் அவற்றின் சாதக நிலைக்கு மகிழவே பாத நிலைக்கு வருந்தவோ செய்யாதீர்கள்.

இளமை- முதுமை, மகிழ்ச்சி- துயரம், உறவு-பிரிவு, ஆதாயம்-இழப்பு, வெற்றி-தோல்வி, இவை வாழ்வின் இயல்புகள். எதையும் நடுநிலை மனப்பான்மையுடன் ஏற்றுப் பழகுங்கள்.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# பிரதேச சபையின் செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பு அவசியம்

## வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர்




யாழ்ப்பாணம், மே.23

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றுவோம். எமது சபை பொறுப்பேற்ற 8 மாத காலத்திலேயே பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். தொடர்ந்தும் சிறந்த அபிவிருத்தியை மக்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம் என்று வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித்தார்.

சுன்னாகம், மயிலணி, பருத்தியோலை வீதி கடந்த 18 திகதி சபைத் தவிசாளரால் திறந்து வைக்கப்பட்டது. வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரகாஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் தங்களைத் தாங்களே ஆளுவதற்காக அனைத்து உள்ளூராட்சிச் சபைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எங்களிடம் ஒப்படைத்துள்ளனர். எமக்கு ஊடாக உங்களுக்கு ஒரு நல்லாட்சி கிடைக்கும் என்று நம்பியே நீங்கள் வாக்களித்துள்ளீர்கள்.

மக்களாகிய உங்களது எதிர்பார்ப்புக்களையும், தேவைகளையும் நிச்சயம் நாங்கள் நிறைவேற்றுவோம். எமது சபை பொறுப்பேற்று 8 மாத காலத்தில் நாம் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். அநேகமான வீதிகள் எம்மால் புனரமைக்கப்பட்டுள்ளன. சிறந்த ஓர் அபிவிருத்தியை வழங்குவதே எங்கள் நோக்கம்.

மக்களுக்கும் சபைக்கும் தொடர்புகள் வலுப்பெற வேண்டும். பிரதேச சபையின் அனைத்து செயற்பாடுகளிலும் மக்களின் பங்களிப்பு அவசியம். இவ்வாறு நெருக்கம் ஏற்படுவதால் உங்களின் தேவைகளை எம்மால் இனங்கண்டு அவற்றைப் பூர்த்தி செய்ய முடியும். அதன் மூலம் சிறந்த நல்லாட்சியை வழங்க முடியும் - என்றார். (எ-5)

# உடல், உள ஆரோக்கியத்துக்கு விளையாட்டு மிக அவசியமானது

## சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர்

யாழ்ப்பாணம், மே 23

இளைஞர்களிடையே ஒற்றுமையையும் உடல் ரீதியான ஆரோக்கிய வாழ்வையும் கட்டியெழுப்ப விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது அவசியம் என சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் வே.சிவசுந்தரம் தெரிவித்தார்.

**பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை நடத்துவதன் மூலம் இளம் சமுதாயத்தினரிடையே ஒற்றுமையையும் உடல் ரீதியான ஆரோக்கிய சுக வாழ்வையும் கட்டியெழுப்ப முடிகிறது.**

சங்கானை ஜுப்பீற்றர் விளையாட்டுக் கழகத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட அமரர் விமலராஜா அபிதரனின் ஞாபகார்த்த மென்பந்து துடுப்பாட்டப் போட்டி நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிவசுந்தரம் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆரோக்கியமான வாழ்வுக்கு விளையாட்டு மிகவும் அவசியமாகும். பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை நடத்துவதன் மூலம் இளம் சமுதாயத்தினரிடையே ஒற்றுமை யையும் உடல் ரீதியான ஆரோக்கிய சுக வாழ்வையும் கட்டியெழுப்ப முடிகிறது.

போட்டிகளின்போது ஒருவரோ அல்லது ஓர் அணியோ வெற்றி பெற்றே தீரும். அதை வைத்து தோற்றவர்கள் திறமையற்றவர்கள் எனக் கருத முடியாது. வெற்றியோ தோல்வியோ விளையாட்டுப் போட்டிகளில் எல்லோரும் பங்குபற்ற வேண்டும். அப்பொழுது தான் உடல் உள ஆரோக்கியத்தில் எமது வாழ்வு மிளிரும்.

ஆகவே விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி திறமைகளை வெளிப்படுத்துகிறீர்களோ இல்லையோதவறவிடாமல்எல்லா விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றுங்கள்- என்றார். (எ-16-29)

# வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வலிகாமம் வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

**நடனம் - குழு 1**

முதலாமிடம்- உடுவில் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - இராமநாதன் கல்லூரி, மூன்றாமிடம்- விக்ரோறியாக் கல்லூரி.

**நாட்டார் பாடல்**

முதலாமிடம்- ஏழாலை ம.வி., இரண்டாமிடம்- பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., மூன்றாமிடம்- வட்டு மத்திய கல்லூரி.

**விவாதம்**

முதலாமிடம்- யாழ்ப்பாணக் கல்லூரி, இரண்டாமிடம்- மானிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்-இணுவில் இந்துக் கல்லூரி.

**மேடை நாடகம்**

முதலாமிடம்- [illegible] கல்லூரி, இரண்டாமிடம்- மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம்- விக்ரோறியாக் கல்லூரி.

**வில்லுப்பாட்டு**

முதலாமிடம்-யூனியன் கல்லூரி, இரண்டாமிடம்- மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம்- விக்ரோறியாக் கல்லூரி.

**நாட்டிய நாடகம்**

முதலாமிடம்-விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடம்- இராமநாதன் கல்லூரி, மூன்றாமிடம் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**தமிழறிவு வினாவிடை**

முதலாமிடம்- மானிப்பாய் இந்துக் கல்லூரி,இரண்டாமிடம்- மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம்- மல்லாகம் ம.வி.

**இசை-குழு 1**

முதலாமிடம்- யூனியன் கல்லூரி, இரண்டாமிடம்- இராமநாதன் கல்லூரி, மூன்றாமிடம் - யாழ்ப்பாணக் கல்லூரி.

**இசை-குழு 11**

முதலாமிடம்- மானிப்பாய் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- இராமநாதன் கல்லூரி, மூன்றாமிடம் - வயாவிளான் ம.வி. (முற்றும்)

# வடமாகாண எழுத்தாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 22

மாகாணநிலைத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் -2012 இன் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:-

**ஆக்கம்- எழுத்து**

முதலாம் இடம் அ.வெற்றிகரன் யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, இரண்டாம் இடம் பீ.விபிசாளினி வ/ பூந்தோட்டம் ம.வி, மூன்றாம் இடம் செ.இமான் மொறியன்ரஸ் மன்/புனித சவேரியர் ஆண்கள் பாடசாலை,

**கட்டுரை வரைதல்**

முதலாம்இடம்ப.பவதாரன், யாழ்/யாழ். இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம் ந.அபிராமி கிளி/ திருவையாறு ம.வி, மூன்றாம் இடம் யு. தர்சிகா மு/ வித்தியானந்தாக் கல்லூரி,

**கட்டுரை வரைதல்**

முதலாம்இடம்சு.சஜனிமு/பாண்டியன் குளம் ம.வி, இரண்டாம் இடம் த.கேசிதா யா/உடுவில் மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம் வி.ஆன்கில்டாமன்/தோட்டவெளி அ.த.க. பாடசாலை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## மஹிந்தவின் வீழ்ச்சி ஆரம்பம்

இராணுவத்தின் முன்னாள் தளபதியும் இலங்கையின் முன்னாள் முதன்மை ஜெனரலுமான சரத் பொன்சேகா ஒருவழியாக விடுவிக்கப்பட்டு விட்டார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பொதுமன்னிப்பின் கீழ்தான் அவர் விடுவிக்கப்பட்டார் என்றபோதும் அமெரிக்காவே அவரது விடுதலையின் பின்னால் நின்று செயற்பட்டது என்ற பொது அபிப்பிராயம் அசைக்க முடியாமல் இருக்கிறது. புலிகளை ஒழிக்கச் சுட நின்றது போலவே மொத்த உலக நாடுகளும் இந்த விடயத்திலும் அமெரிக்காவுடன் சுட நின்றன.

பொன்சேகாவின் விடுவிப்பை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் உடனடியாக வரவேற்றபோதும் வோஷிங்ரன் உடனடியான பிரதிபலிப்பு எதனையும் காட்டவில்லை. அதற்கு வேறு சில காரணங்கள் இருக்கக்கூடும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்பதாக, பொன்சேகாவின் விடுதலை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டம் என்பவற்றை திட்டவட்டமாக முன்மொழியுமாறு வோஷிங்ரன் இலங்கை அரசுக்கு கடுமையான அழுத்தம் கொடுத்தது.

ஆனால், அரசு அதனை வேறுவிதமாகக் கையாள முயன்றது. இறைமையுள்ள ஒரு நாடான இலங்கையின் மீது அமெரிக்கா தேவையற்ற அழுத்தங்களைக் கொடுப்பதான எண்ணத்தைச் சிங்கள மக்களிடம் ஏற்படுத்தி அமெரிக்காவுக்கு எதிரான உணர்வலைகளை அவர்களிடம் கிளறிவிட்டு அழுத்தத்தில் இருந்து தப்பிக்க அரசு முயற்சித்தது. அதற்காக நாடுமுழுவதும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் முஸ்லிம்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் அரசின் அனுசரணையுடன் இதுபோன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன. ஆனால் அரசு எடுத்த இத்தகைய முயற்சிகள் எல்லாம் பயனற்றவை என்பதை சரத் பொன்சேகாவின் விடுதலை வெளிப்படுத்தியிருக்கிறது.

சீனா, ரஷ்யா என்று என்னதான் ஆதரவுக் கரங்களைக் கொண்டிருந்தாலும் அமெரிக்கத் தாளத்துக்குக் கைதட்டாத வரைக்கும் நிலைமைகள் சுமுகமாகவும் நிம்மதியாகவும் இருக்கப் போவதில்லை என்பதை அரசு இப்போது புரிந்து கொண்டிருக்கும்.

2005இல் ஆட்சிக் கட்டில் ஏறியது முதற்கொண்டு வெற்றிகளை மட்டுமே பெற்றுவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொன்சேகா விடயத்திலேயே முதலாவது பெருந் தோல்வியைச் சந்தித்திருக்கிறார். அதுவே அவரது வீழ்ச்சியின் ஆரம்பமாகவும் மாறியிருக்கிறது. 2009இல் உச்சத்தைத் தொட்ட மஹிந்தவின் புகழ் வரை கோடு [கிராப்] இறங்கு முகத்தை நாடத் தொடங்கியிருக்கிறது பொன்சேகாவின் விடுவிப்புடன்.

இரண்டு வருடங்களுக்கும் மேலாக பொன்சேகாவைச் சிறையில் அடைத்து அவரைத் தியாகி நிலைக்கு உயர்த்தி விட்டதன் விளைவுகளையும் இனிவரும் காலங்களில் மஹிந்த அனுபவித்தே ஆகவேண்டும்.

மஹிந்தவின் வீழ்ச்சியின் ஆரம்பப் புள்ளியாக அவர் விரும்பியோ விரும்பாமலோ அவரது முன்னாள் சகபாடியே மாறிவிட்டமை சோகமானதாக இருந்தாலும் தவிர்க்க முடியாததாகிப் போய்விட்டது.

# நான் + நீ = நாம்

செந்தூரி

இணையத்தின் தேடல் இயந்திரங்களில், இடமொன்றின் பெயரைத் தேடுகையில், பதிலாக மனித உடல் குவியல்களின் படங்களை மட்டுமே குவிக்கும் சொல்லாக ''முள்ளிவாய்க்காலை''யும் காணலாம்.

முல்லைத்தீவின் கீழ்க் குவியத்திற்குரிய இந்த ஊரின் பெயரிலான அடையாளப்படுத்தப்பட்ட சதுக்கங்கள் தமிழர் வாழும் தேசங்களுக்கும் நாடு கடத்தப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் 'முள்ளிவாய்க்கால் முற்றமா'கவும் ஐரோப்பிய தேசங்களில் 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சதுக்கங்களாக'வும் தனது கடல் கடந்த பெயரூன்றலைக் கொண்ட இந்தக் கடலோரக் கிராமம், உச்சரிக்கும் போதெல்லாம் உதடுகளில் சோகத்தையும், உணர்வுகளில் இனவழிப்பின் துயரத்தையும் ஒருங்கே ஊட்டும் 'கறுப்பு பூமி'யாகிப் போனது.

தன்னைத் தேடி அபயம் கேட்டு வந்த ஏதிலிகளை, காப்பற்ற முடியாமல்போன துன்பியலின் சாயலை, இன்னமும் சாம்பல் போர்வைகளால் மறைத்தே வைத்திருக்கும் அந்த மண், வரும் நாள்களில் எமக்கான பலமானதொரு ஆயுதம். ''சர்வதேசங்களினால் சத்தியமாகப் பார்க்கப்படுவோம்'' என்கின்ற நம்பிக்கையை இறுதிமூச்சாக காற்றில் கலக்க விட்டபடி மௌனித்துப்போன ஒவ்வொரு தமிழ் ஆத்மாவுக்கும், பிராயச்சித்தம் வாங்கிக் கொடுக்க முடியும் என்கின்ற அர்த்தமுடைய காத்திருப்பினை, உண்மையாக்கும் சக்தி, ''முள்ளிவாய்க்கால்'' என்கின்ற எழுத்துக்களுக்குரியது.

உலகின் எல்லா மூலைகளிலும் உள்ள ''நிறைய வீடுகளின் அடுப்பு எரியாத'', ''பலருக்கு பசியெடுக்காத'', ''பல படுக்கை அறை மின்குமிழ்கள் விடிய விடிய ஒளிர்ந்த'' ஒருமித்த மனித உணர்வுகளின் ஏக்கம் நிறைந்த தமிழினத்தின் வீழ்ச்சி நிகழ்த்திக் காட்டப்பட்ட அதே இடம்தான், எத்தனை வருட பிரளயங்களின் பின்பாகிலும் 'தமிழனின் மீள் எழுச்சிக் குரிய புள்ளி' என்கின்ற ஆரூடம் பொய்யாகப் போவதில்லை.

இனவழிப்பின் அசிங்க வெளிப்படு முகமாக நின்றிருந்த இலங்கை அரசையும், ஆளும் இனத்தையும், மானிடத்தலை கொய்யும் மகா பாவத்திற்கு பிற்புலமாக நின்றிருந்த எல்லாவுலக தேசங்களையும், 'எமக்கானதென விடியும் இன்னுமொரு நாளில்' முகத்தில் உமிழ்ந்து நீதி கேட்கும், தீர்ப்புக்கான தினத்தை(The Judgement Day) 'முள்ளிவாய்காலை' நினைவுச் சுடராக விரல்களில் ஏந்தியுள்ள எமது பேரெழுச்சி நிச்சயம் துரிதமாய் கனியச் செய்யும்.

காலி முகத் திடலில், போர் வெற்றி விழாவுக்கான ஒத்திகையில் வீரர்கள் களைத்து ஓய்வெடுக்கும் அதே நேரம், பல்கலைக்கழகத்தின் ஏதோ ஒரு விடுதி அறையின் ''முள்ளிவாய்க்கால் எமது முடிவல்ல, ஆரம்பமே!'' என்கிற வாசகம் அகல அட்டை ஒன்றில் எழுதப்பட்டுக் கொண்டிருந்தது. வட மாகாண சபையின் பலாலிக் கொண்டாட்டத்தில், தமிழரான இந்திய துணைத்தூதர், ''எங்கே எனது கதிரை?'' என்று இருக்கைப் போராட்டத்தில் இழுபறிந்து கொண்டிருந்த அதே தருணம், நினைவேந்தல் நிகழ்வுகளில் சிறப்புரையாற்றுவோரின் ஒப்புதல்கள், உயிரச்சத்தினையும் மீறிய தன்மானத் துணிச்சலுடன் கிடைக்கப் பெற்றிருந்தன.

எல்லைகளினால் ஒன்றாக காட்டப்படுகின்ற சிறிய தேசமொன்றினுள், நிகழ்ந்து முடிந்த ஒரே சம்பவத்திற்காய் சம நேரங்களில், செய்யப்பட்ட இரு வேறு தயாரிப்பு முன்னாயத்தங்கள் சொல்லும் சேதிகள் சாமானியமானவையல்ல. தன்னாள்கைக்கு உட்பட்ட இனமொன்றின் அவல மரணங்களைக் கண்ணீருடன் நினைவு கூரும் மக்கள் தொகுதியினரின், இதயச் சுமைகளில் பங்கெடுக்கும் வார்த்தை வழி ஆறுதல்களைக் கூட மனமொப்பாமல் வெற்றிக் கொண்டாட்டங்களை வெறிக் கொண்டாட்டங்களாக தொடர்ந்து வரும் பேரினம் எதிர்பாராதவை நிறையவே நடந்தன இவ்வருடம்.

மேகங்களினால் கண்ணீர் தூவப்படும் கார்த்திகை மாதங்களில் களமாட வீழ்ந்த தன் பிள்ளைகளுக்காய் தமிழனின் வீடுகளில் விளக்கு எரிவதைக்கூட ''கண்ணில் எண்ணெய் ஊற்றி''க் கவனித்த இராணுவ இயந்திரங்கள் முடமாகத் தொடங்கியுள்ளன. ஆலய மணிகளுக்கு கட்டாய மௌனத்தை உத்தரவாக பிறப்பித்த அடக்குமுறைப் பிற்பகல்கள் அத்துமீறத் தொடங்கியுள்ளன. இறந்தவர்களை தெய்வமாகவே வழிபடும் மதம் கலக்காத பாரம்பாரியம் ஒன்று தமிழினத்தின் ஆதிக் குடிகளிடம் இருந்துள்ளது. இன்றைய வழிபாடுகளில் இயற்றப்படும் 'படையல்' அல்லது 'மடை'களுக்கு நிகரான உணவுகள், உடைகள், பயன்பாட்டுப் பொருள்கள், வாசனைத்திரவியங்களை 'மெகா' அளவு மண் பானைகளில் இறந்த உடல்களோடு பரப்பி அடைத்து மண்ணுள் விதைக்கும் 'ஈமத்தாழி' வழக்கம் எம் முன்னோருடையது. இவ்வகையான சில ஈமத்தாழிகளின் வளைந்து குவிந்த அரைக் கோள மேற்புறங்கள் மண்ணின் மேலாக தெரியத் தொடங்கிய போது, அவைகளை 'சொத்தும்' விகாரைகளாக உரிமை கோரியது உப கதை.

கண்ணாடிச் சட்டங்களுக்குள் மலர்ந்து சிரிக்கும், எம்மினத்தின் 'காவல் தெய்வங்கள் உள்ளிட்ட அனர்த்தங்களால் உயிரிழந்த சாமானியர்களுக்கான நினைவு கூரும் நிகழ்வுகளையும் ஆயுதப் புரட்சியின் இன்னொரு வாழும் எச்சமாகக் கருதி 'இருண்டதெல்லாம் பேயாகக் கருதி' மருள்வது சீருடைகளின் இயல்பு. விளையாட்டு மைதானங்களின் சிவப்புக் கொடி கம்பத்தில் பறந்தாலுமே, இறக்கிப் பார்த்து உறுதி செய்யும் 'மோட்டுக்' குணம், ரீசேர்ட்களில் சே-குவேராவின் உருவம் பொறித்த இளைஞர்களைக்கூட மறித்து விசாரித்திருக்கின்றது.

''சூடுகண்ட பூனை''களின் இந்த முற்காப்பு நடவடிக்கைகள் யாவுமே, நீட்டிய இரும்புக் குழல்களினால்தான் சாத்தியப்பட முடிந்தன. ஜெனிவாவின் மனித உரிமைகள் பேரவையின் வலுவான கண்காணிப்பின் கீழ் வளைக்கப்பட்டிருக்கும் இலங்கை அரசும் ஆயுதப் படைகளும் இனிவரும் நாள்களிலும் 'பழைய மிடுக்கில்' தொடர்வதில் பல்வேறு சிக்கல்கள் காத்திருக்கின்றன.

''மனிதாபிமானத்தை மறு கரத்தில்'' ஏந்திய படையினர், நிராயுதபாணிகளான மக்களில் ஒருவரைக் கூட விரல் நீட்டித் தொட்டதில்லை என்று சர்வதேசிய சந்நிதிகளில் கற்பூரம் அடித்து சத்தியம் செய்தனர் பாதுகாப்பு, வெளியுறவுத் துறைகளும், சர்வாதிகாரம் மிக்க மேன்மை தாங்கிய ஜனாதிபதியும் மெது மெதுவாக அடி மடியில் கை வைத்து விசாரிக்கத் தொடங்கிய உலக அமைப்புகளிடம் பொது மக்கள் கொல்லப்பட்டது உண்மைதான் என்பதை ஒத்துக் கொண்டதோடு, அவர்களாலேயே ஒப்புவிக்கப்பட்ட ''இறுதிப் போரின் இறந்தோரின் எண்ணிக்கை'' மடங்குகளால் அதிகரிக்கவும் தொடங்கியது.

''உங்கிட்ட எத்தின ரூவா கொடுத்தேன்? எத்தின பழம் வாங்கச் சொன்னேன்? ஒரு பழம் இங்க, இன்னொண்டு எங்க?'' எனும் கவுண்டமணியின் குறுக்கு விசாரணைகளைப்போல், ''சரணடைய வந்தவர்களின் கதி'', ''இராசாயன ஆயுதங்களின் பாவனை'', ''பொது மக்கள் மீதான படுகொலையாயுதப் பிரயோகங்கள்'', ''முகாம்களிலிருந்து கடத்தப்பட்டோரின் நிலை'', ''பெண் போராளிகள் மீதான வல்லுறவுக் கொடூரங்கள்'' போன்ற கேள்விகளால் நெற்றி வியர்த்தது. பேராசிரியர் பீரிஸுக்கு மட்டுமின்றி ஆட்சியாளர்களுக்கும்தான்.

முல்லைத்தீவின் உவர்வெளிகளில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, நியாயம் பெற்றுத் தருவதை மட்டும் முக்கிய நோக்காகக் கொண்டிராத போதிலும் ஜெனிவாவின் குளிரூட்டிய அறைகளுக்குள் நிறைவேற்றப்பட்ட இலங்கைக் கெதிரான தீர்மானம், புடைத்த தழும்புகளாகி நிற்கும் போரின் ரணங்களை வருடும் சுகத்தை எமக்களித்துள்ளது. பொதுமக்கள் கொல்லப்பட்டதை சங்கடத்துடன் ஒப்புக் கொண்டதன் பின்னாள்களில், போரில் இழந்தோருக்கான அஞ்சலி நிகழ்வுகளை வெளிப்பட்டு எதிர்க்கும் சக்தி ஆட்டங்காணத் தொடங்கியுள்ளதை முடிந்துபோன நிகழ்வுகள் முரசறைகின்றன. இழவு வீட்டிலும் சிரிக்கப் பழகுமாறு கடந்த வருடங்களின் நினைவு தினங்களில் எம் பின்னந் தலைகளில் அடக்கு முறையால் அறைந்தவர்களின் ''முழுவியளத் துக்குதவாத'' முகங்களில் அசடு வழிந்து உறைந்து கிடக்கின்றது இம்முறை. யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாகத்திற்கு (?) குறைவற்ற குடைச்சலை முக்காலங்களிலும் வழங்கும் தீர்க்கமான இன உணர்விற்குரிய ''பரமேஸ்வராக் கல்லூரிப் பொடியள்'' வழக்கம் போல் தம் இமைகளின் கீழ் தீயேந்தி வேலை செய்தனர். 'பொங்கு தமிழ்' என்கின்ற சொற்பதத்தை செயல்வடிவாய் பேரெழுச்சி நிகழ்வாக உலகெங்கும் வியாபிக்கச் செய்ததன், முதற் கருவை தமக்குள் எண்ணங்களாக சுமந்த ... கொண்ட அதே பல்கலைக்கழகத்துக் கண்மணிகள், எப்போதும் போல் ஓய்வதே இல்லை, குருதியில் தோய்ந்த நாள்களின் மூன்றாண்டு நினைவேந்தல் நிகழ்வுகளை, கடந்தவைகளிலும் சிறப்புடன் உணர்வு ததும்பிட நிகழ்த்திவிட வேண்டும் என்கின்ற ஆர்வம் அவ்வளவு இலகுவில் தூங்கி விட மறுத்தது பலருக்குள்ளும்.

பீடங்களுக்குள் நிலவுகின்ற எதிர்ப் பலைகளைக் கவனியாது, தமக்குள் ஆழ ஊடுருவும் படைப் புலனாய்வுக் கைக் கூலிகளை காற்றூசிகளாய் ஊதி, நிர்வாகங்களின் மேல் தீர அழுத்தும் அரசியல் சாயங்களை அப்பாலே வீசி, ''வலி தந்த வாரத்தை'' வடகிழக்கின் எல்லாத் தமிழர்களிடமும் ஆத்ம பூர்வமாய் கொண்டு செல்வதற்கான முன்மாதிரிகளாய் தம்மைத்தாமே வரித்துக் கொண்டவர்களின் கண் தூங்காத காரியங்களின் வீரியத்தின் முன், அவர்களாடிய ஆரியர் கூத்துக்கள்' புள்ளிகளாகி மறைந்தன.

வெளிப்படு அரசியல் தன்மைக்குரியவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட 18-மே இயக்கம் கொண்டிருந்த அனுஷ்டிக்கும் ஆவலுக்கு சற்று சளைத்ததல்ல, உயிரச்சம் மிகுந்த சூழலில் மாணவர்களிடையே கருத்தொற்றுமையை எழுப்பி நிமிர்த்தி ஏனைய உலகத் தமிழர்களோடு இணைந்து நெஞ்சார எம்முறவுகளை வழிபட்ட நிகழ்வை. பத்திரிகைக் குறிப்புகளாக, பரவும் குறுஞ்செய்திகளாக, சமூக வலைத்தள பகிர்வுப் பதிவுகளாக, வார்த்தைகளில் வேதனை தொடுக்கப்பட்ட புகைப்படங்களாக, உணர்வாளர்களின் கருத்துக்களாக உலகெங்கும் தமிழர்களின் விரல் இடைவெளிகளில் நிரவி நின்ற எல்லாத் தனிக்கரங்களும் தனித் தனி நன்றிக் குரியவை.

இரண்டாவது முறையாகவும் உயிர் பறிக்கும் வெறிக் கும்பலால் தாக்கப்பட்ட 'மாணவர் தலைவன் ' என்கின்ற பதவிக்குள் இருக்கும், ''ஏன் தம்பி இப்ப கொஞ்ச நாளா இரவு லேட்டாவே வாறாய்'' என்கிற புரியாத் தாயின், பயமறியா இளங்கன்றுகள் இன்னும் பின்னும் அவதானத்துடன் அடிவைக்க வேண்டியது அவசியம். வெண்சட்டையின் அரைப்பங்கு சிவப்பாகிப் போகப் பிரிந்த பச்சைக் காயத்தினை தைப்பதற்காக அரை முடி மழிக்கப்பட்டு குருதியில் தோய்ந்த சகநண்பனை சூழநின்றவர்கள், புகைப்படங்களில் விலகி நிற்கின்ற முன்னவதானம் இனிமேல் இன்னும் வலுவாய் வேண்டாம் எம்மினிய குழந்தைகளே!

''பாவமண்ணை! சிங்களப் பெடியன் சொல்லிக் குடுத்திருக்க மாட்டாங்கள்,எல்லாம் எங்கடையள்தான்'' என்கின்ற எட்டப்ப அறிமுகங்களிலும்,''இவன் ,கலட்டி வைரவரை கும்பிடாமல் வாறவன்,இனிக் கடும் நேர்த்தி வைப்பான்,பாருங்கோவன்'' என்கின்ற கட்டில்களை நிரப்பும் பகிடிகளுக்குள்ளும், ஒவ்வொரு கண்களில் தூரத் தரிசிக்க முடிந்த கோடீச்சீற்றங்கள், ''நாளைய தேசத்தை இன்றைக்கே காட்டும், மின்னல் கோடுகளாய்த் தெரிந்தன''. ''சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராதோ என்னவோ '' நாடு '' தரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.எஸ்.திருச்செந்தூரன்,
முதுகலை மாணவன்,
சர்வதேச உறவுகள் கற்கை நெறி

# இந்து சமுத்திரத்தில் கூர்மையடையும் இந்திய – சீனா மோதல்

**20** ஆம் நூற்றாண்டின் முதற்கொண்டே இந்து சமுத்திரம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறிவந்திருக்கின்றது. இருப்பினும் 21 ஆம் நூற்றாண்டில் அதன் முக்கியத்துவம் பன்மடங்காக அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக இந்தியாவும், சீனாவும் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்தி, தம் நலன் சார்ந்த போட்டியிலீடுபடுகின்றன. இந்து சமுத்திரத்தில் உள்ள பல நாடுகளில், சீனா தன் துறைமுகங்களை மிகத் தீவிரமாக அமைத்து வருகின்றது. அதன் மூலம் அதன் கடற்படை இந்துப் பிராந்தியத்தில் படிப்படியாக விஸ்தரிக்கப்படுகின்றது.

இந்தியா, சீனாவை இந்து சமுத்திரத்தில் தோற்கடித்து அதன் கடற்படைப் பிரசன்னத்தினை இழக்கச் செய்ய முயல்கின்றது. இதற்கு இந்தியாவிற்கு அமெரிக்கா பூரண ஒத்துழைப்பும் உள்ளது. இருப்பினும் சீனாவின் செல்வாக்கை இரு நாடுகளாலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

உலகில் மூன்றாவது பெரிய நீர்ப்பகுதியான இந்து சமுத்திரம் 47 கடற்கரையோரங்களைக் கொண்ட நாடுகளை உள்ளடக்கியுள்ளது. வங்களா விரி குடா, அராபியக் கடல், மலாக்கா தொடுகடல் என்பன இந்து சமுத்திரத்தின் பிரதான கடற்பகுதிகளாகும். டிக்கோயா காசியோ, இலங்கை, அந்தமான் தீவுகள், மொரிசீயஸ் என்பன இந்து சமுத்திரத்தின் குறிப்பிடத்தக்க தீவுப் பகுதிகளாக காணப்படுகின்றன. இந்தத் தீவுகள், புவிசார் அரசியலில் கேந்திர முக்கியத்துவமிக்கவைகளாகவே எப்போதும் இருந்து வருகின்றன.

சீனா மற்றும் இந்தியா ஆகிய ஆசிய வல்லரசுகளின் பார்வையில் இந்தக் கடல் பிராந்தியமும் அதனைச் சூழ்ந்த நாடுகளும் வணிக ரீதியில் முக்கியமானவை. அதற்கடுத்ததாகவே தம் பாதுகாப்புக்கு இந்தக் கடலைப் பயன்படுத்துவது பற்றி இரு நாடுகளும் சிந்திக்கின்றன. சீனா பாரசீக வளைகுடாவிலிருந்து போர்முஸ் நீரிணையினூடாக 80% மான எண்ணெயினை கப்பல் மூலம் தனது நாட்டுக்கு எடுத்துச் செல்கின்றது. அத்தோடு தனது 85% மான உற்பத்திகளை இந்துசமுத்திரத்தினூடாகவே சீனா, மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்கின்றது. மறுபுறம் இந்தியா தனது 60% மான எண்ணெய்த் தேவையை இந்து சமுத்திரத்தினூடாகவே கப்பல் மூலம் பெற்றுக்கொள்கின்றது. மேலும் 55% ஆன தனது உற்பத்திகளை சீனாவினைப் போன்று இந்து சமுத்திரத் தினூடாகவே மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்கின்றது.

இராணுவ ரீதியில் இந்த இரு அரசுகளும் இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவத்தினை உணர்ந்த வகையிலும் செயற்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் ரி.மோகன்ஸி இன் கருத்துப்படி இந்து சமுத்திரத்தின் கடற்பலத்தில் மிகச் சக்திவாய்ந்ததாகக் காணப்படும் நாடே சர்வதேச அரசியலிலும், பொருளாதாரத்திலும் முக்கியத்துவம் பெறும் என்கின்றார். இதனால் தூர நோக்கில் உலக வல்லரசு என்ற அந்தஸ்தினைப் பெற முயலும் இந்த இரு அரசுகளும் தமது கடல் பலத்தினை இந்து சமுத்திரத்தில் அதிகரிக்க முயன்று வருகின்றன. சீனா தமக்கு பலமான எதிரியாக இந்தியாவைக் கருதுகின்றது. இந்தியாவிற்கு ஆதரவாக அமெரிக்கா இருந்து வருகின்றது. இதனால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்கா இந்தியாவுடன் கூட்டாக இணைந்து இந்து சமுத்திரத்தில் சீனாவினைத் தோல்வியுறச் செய்வதனையே தற்போது இலக்காகக் கொண்டு இயங்குகின்றது. இந்த விடயத்தில் சீனாவும் இந்தியாவினை தோற்கடிப்பதன் ஊடாக அமெரிக்காவின் செல்வாக்கினை இந்தப் பிராந்தியத்தில் தோல்வியுறச் செய்யும் நோக்கிலேயே தீவிரமாகச் செயற்படுகின்றது.

உலகில் எண்ணெய் நுகரும் நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் சீனா உள்ளது. சீனா நாள்தோறும் 7.5 மில்லியன் பீப்பாய் எண்ணெய் பரல்களை பாரசீக வளைகுடாவிலிருந்து, இந்து சமுத்திரத்தினூடாக கிழக்கு சீனாவிற்கு எடுத்து வருகின்றது. மேலும் அடுத்து வருகின்ற 25 ஆண்டுகளில் 100 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எண்ணெயினை மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இந்து சமுத்திரத்தினூடாக எடுத்துவர சீனா திட்டமிட்டுள்ளது. இதனை நோக்கமாகக் கொண்டே அது மயூரியா (பர்மா), சிட்டக்காங் (பங்களாதேசம்), அம்பாந்தோட்டை (இலங்கை), காபாடர் (பாகிஸ்தான்) போன்ற துறைமுகங்களை மிகத் தீவிரமாக அமைத்து வருகின்றது. இவற்றை அமைப்பதன் ஆரம்ப கட்டம் வர்த்தக நோக்கமாகவே காணப்படுகின்றது. இருப்பினும் இவற்றைப் பாதுகாப்பது என்ற ரீதியில் ஆங்காங்கே இந்த துறைமுகங்களுக்கு அண்மையில் சில இடங்களில் கண்காணிப்பு மையங்களை சீனா அமைத்து வருகின்றது. இது சீனாவின் நீண்ட கால இராணுவ வியூகமே

உலகில் நான்காவது எண்ணெய் நுகரும் நாடான இந்தியா அடுத்து வருகின்ற 10 ஆண்டுகளில் தனக்குத் தேவையான 90% ஆன எண்ணெயை ஈரானிடம் இருந்து பெற எண்ணியுள்ளது. இதற்கான உடன்படிக்கையினை 2009 இன் பிற்பகுதியிலே இரு நாடுகளும் கைச்சாத்திட்டுக்கொண்டன. இந்த எண்ணெயை இந்தியாவிற்கு தருவிப்பதற்கு இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தினை முன்கூட்டியே அறிந்து கொண்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே 2005 ஆம் ஆண்டிலிருந்து சேது சமுத்திரத் திட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் இந்தியா தீவிர ஆர்வம் காட்டி வருகிறது. மேலும் ஐரோப்பிய, மத்திய, கிழக்கு நாடுகளில் வர்த்தகத்தில் கணிசமான அளவு சந்தையைக் கைப்பற்றி உள்ள இந்தியா அந்த நாடுகளுக்குத் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு கப்பல் போக்குவரத்தினையே நம்பியுள்ளது. இதன் அடிப்படையிலும் சீனாவின் கப்பல் போக்குவரத்தினைக் கண்காணிப்பதற்குமான அந்தமான், நிக்கோபார் தீவுகள், மாலே தீவுகளில், கரக்கா கொக்கோ போன்ற தீவுகளில் கடற்படை கண்காணிப்பு முகாம்களை அமைத்து வருகின்றன. மேலும் அண்மைக் காலத்தில் தமது கடற்படையினை விஸ்தரிப்பதிலும், நவீனமயப்படுத்துவதிலும் இந்தியா ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல தசாப்த காலமாக அமெரிக்காவின் ஆதிக்கத்தில் காணப்பட்ட இந்து சமுத்திரம் இந்தியா, சீனா ஆதிக்கத்திற்கு உட்பட ஆரம்பித்து விட்டது. இந்த இரு நாடுகளும் பொருளாதார ரீதியில் பலம் பெற ஆரம்பித்ததனால், இந்து சமுத்திரத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயல்கின்றன. இதன் வெளிப்பாடாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டி மிகவும் ஆபத்தான கட்டத்தினை எட்டியுள்ளது. சீனா இதற்கென இந்து சமுத்திரத்தில் காணப்படுகின்ற நாடுகளுக்குப் பெரியளவில் பொருளாதார உதவிகளைச் செய்து வருகின்றது. குறிப்பாக பர்மா, பங்களாதேசம், இலங்கை, பாகிஸ்தான் போன்றவற்றில் தனது துறைமுகங்களை அமைத்துள்ளது. இந்த நாடுகளில் தனது பலத்தினை தக்க வைக்க முயல்கின்றது. இந்தியா, சீனாவின் இந்த முயற்சிகளை முறியடிக்க பல வழிகளிலும் முயன்று வருகின்றது. இதனால் இந்தியா அமெரிக்காவுடன் இணைந்து தனது கடற்படைத் தளத்தினைப் பன்மடங்காக பெருக்கி வருகின்றது. சீனாவுக்கு எதிராக இந்தியாவினை வளர்ப்பதாகவே அமெரிக்காவின் முயற்சி அமைகின்றது. எனவே அடுத்து வருகின்ற தசாப்தங்கள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான முறுகல் உச்சமடைந்து ஆபத்தான அரசியல் பாதையில் இந்து சமுத்திரப் பிராந்தியம் பயணிக்கப் போகின்றது.

சீனாவின் பக்கம் நிற்கும் ரஷ்யாவும் இந்தியாவின் பக்கம் நிற்கும் அமெரிக்காவும் அளிக்க இருக்கின்ற ஆதரவு பலத்திலேயே இந்தக் கடல் பிராந்தியத்தின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

---

ஆர்.கே.மேனன், யா/சென்.சாள்ஸ் ம.வி

# வடமாகாண கல்விப் புலம் வீழ்ச்சியடைகிறதா?

யாழ்.குடாநாடு உட்பட வடமாகாணம் ஒரு காலத்தில் கல்வியின் கருமூலமாக இருந்த காலம் மலையேறிவிட்டது. 9 மாகாணங்களில் 9ஆவது இடத்திற்கு க.பொ.த.சாதாரண தரப் பெறுபேற்றின் மூலம் அது தள்ளப்பட்டுள்ளது. கல்விக்காக குடா நாட்டை தேடி வந்த காலங்களும், முதல் படித்த இலங்கையன் என்ற பெயர் பெற்ற சேர்.பொன்.இராமநாதனின் கனவுகளும் இன்று தவிடுபொடியாகி விட்டது.

அண்மையில் யாழ்.பிராந்திய சுகாதார பணிமனையில் கேட்போர் கூட மண்டபத்தில் வட மாகாண ஆளுநர் தலைமையில் கல்வி அதிகாரிகளின் மத்தியில் இது தொடர்பான அவசர கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதில் "மேலதிக வகுப்புக்கள், வினாத்தாள் பயிற்சிகள் நடத்தப்பட வேண்டும்" எனப் பல விடயங்கள் முன்மொழியப்பட்டன. இந்த விடயம் தொடர்பாக அனைவரும் சிந்திக்க வேண்டியுள்ளது.

நடந்து முடிந்த க.பொ.த சாதாரண தர பெறுபேற்றின் அடிப்படையில் வடமாகாணம் அனைத்து மாகாணங்களிலும் பின்னிலையில் நிற்பதற்கு உரிய காரணங்களை இரண்டு வளகங்களில் சிந்திக்க வேண்டும்.

1.கல்வி கலைத்திட்டம் சார்பான சில பின்னடைவுகள்.

2.கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான சிந்தனை மாற்றங்கள்.

**1.கல்வி கலைத்திட்டம் சார்பான சில பின்னடைவுகள்.**

இன்று தர்மங்கள் தோற்பது போன்றும், அதர்மங்கள் வெல்வது போன்றும் ஒரு நாகரிக சுனாமி நடமாடிக் கொண்டு இருக்கின்றது. அது உண்மைக்கு புறம்பானவையாக இருந்தாலும் தர்மம்சார் செயற்பாடுகளை, நேர்மை உண்மைகளுக்கு உருவம் கொடுக்கும் செயற்பாடுகளை, கேலிக்கிடமாகப் பார்க்கும் மானிட மனங்கள் வலுப் பெற்று விட்டன.

அன்றுள்ள ஆசிரியர் குழாமையும் இன்றுள்ள ஆசிரியர் குழாமையும் சற்று சீராக உற்று நோக்கிப் பாருங்கள். அன்று அர்ப்பணிப்பு சார் சிந்தனைகள் புரையோடிக் கிடந்த ஆசிரியர் மனங்களில், இன்று ஊதியத்திற்கான ஊழியம் எனும் கடமை நோக்குத் தலைதூக்க ஆரம்பித்து விட்டது. இது குறை கூறும் படலம் அல்ல. நாம் அனைவரும் ஒன்று கூடி சிந்திக்க வேண்டிய கட்டமிது.

மாணவர்களின் கல்விப் பின்னடைவுக்கு பெற்றோர்களின் அக்கறையின்மை, மாணவர்களின் அக்கறையின்மை எனப் பல நியாயங்களை முன்வைக்கும் நாம், இயன்ற அளவு எமது பங்கினை இந்த மாணவர்களின் முன்னேற்றத்திற்குக் கொடுக்கின்றோமா? என சிந்திக்க மறுக்கின்றோம். அதிகாரிகளின் அச்சுறுத்தல்களுக்காகவும், அவர்களிடம் இருந்து நற்பெயரை சம்பாதிப்பதற்காகவும், அவர்களுக்குத் தேவையான ஆவணங்களை சீர்ப்படுத்தும் நாம் அந்த ஆவணங்களின் நோக்கங்களின் அடிப்படையாக அமையும் மாணவர்களின் கற்றல், கற்பித்தலில் எவ்வளவு தூரம் அக்கறையை காட்டுகின்றோம். இந்த உண்மைத் தத்துவத்தைப் புரிந்த சில அதிகாரிகள் யதார்த்த பூர்வமாக சிந்தித்து வகுப்பறை செயற்பாடுசார் ஆவணங்களை மாத்திரம் ஆசிரியர்கள் மத்தியில் மேற்பார்வை செய்கின்றனர். வேலைப்பளுக்களை ஆசிரியர்கள் மீது தேவையற்ற வகையில் கூட்டாது, மாணவர்களுடன் நேரத்தை செலவழிக்கின்றார்களா? என்பதை மாத்திரம் மேற்பார்வை செய்கின்றனர். இது போற்றுதற்குரிய விடயம். யாழ். வலயத்தில் குறிப்பாக கணித பாடமேற்பார்வை யதார்த்த பூர்வமான போற்றுதற்குரிய செயலுக்[illegible] மேற்பார்வையாக விளங்குகின்றது.

எதிர்கால சந்ததிகளின் நிம்மதியான வாழ்வுக்குப் புடமிடும் உத்தம தொழிலிது. கடமைநோக்கம் மாத்திரம் இதற்கு இருப்பின் அது வெற்றியளிக்காது. அர்ப்பணிப்புடன் கூடிய சேவை இதற்குத் தேவை. பிரத்தியேக வகுப்புக்களை மாணவர்களும் தேடிச் செல்கின்றார்கள். பெறுபேறுகளும் தேடிக் குவிகிறது. ஏன்? முறைமை சார் கற்பித்தல் அங்கு இடம்பெறவில்லை என தம்பட்டம் அடிப்பவர்கள், அவர்கள் சம்பாதிக்கும் பரீட்சை வெற்றியைப் போல, அவர்கள் சம்பாதிக்கின்ற மாணவர் வரவேற்பைப் போல ஏன் சம்பாதிக்க முடியாமல் உள்ளது என்று சிந்திக்கின்றார்களா?

பிரத்தியோக வகுப்பு ஆசிரியர்கள் சுயநலம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். தங்களது ஊதியத்திற்காக, தங்களது வாழ்வியல் முன்னேற்றத்துக்காகப் புதிய புதிய நுணுக்கங்களை முன்வைத்து பரீட்சை பெறுபேற்றை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு சிந்தித்து செயற்படுகின்றார்கள். இந்த சிந்தனைச் செயற்பாடுகளை சில முறைகளுக்குட்படுத்தி ஏன் நாம் நடைமுறைப்படுத்த முடியாது? பட்டங்களையும் கல்விக் கொள்கைகளையும், கல்வி உளவியலையும் கற்று வந்த எம்மால் முடியாத ஒன்றை பிரத்தியோக வகுப்பு ஆசிரியர் செய்கின்றார் என்றால், முறைசார்ந்த கற்றல் கற்பித்தல் நெறிகளுக்கு ஊடாக வந்தவர்களால் ஏன் முடியாது?.

குறைகளுக்கு விகாரப்பட்டு விரல்களைத் தூக்காமல் நிறைவுக்காக அர்ப்பணிபுடன் சே[illegible] மனங்கொண்டவர்களாக ஆசிரிய சமூகம் வளர வேண்டும். அனைத்து ஆசிரியர்களையும் இங்கு சுட்டிக்காட்டவில்லை ஒரு சிலர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

**2.கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான சிந்தனை மாற்றங்கள்.**

21 ஆம் நூற்றாண்டில் இருப்பிடம் தெரியாது, அந்தரத்தில் ஆடும் எமக்கு இன்று பல கதவுகள் திறந்திருக்கின்றன. ஆளுமைகள், நிதானங்கள் பிறக்காத இந்த மாணவப் பருவத்தில் எந்தக் கதவு எமக்காக திறந்துள்ளது எனத் தெரியாமல் திசைமாறும் சந்தர்ப்பங்கள் நிறையவே. ஆகவே இது தொடர்பான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் ஒழுங்கு முறைகளில் நிகழ்த்தப்படுவதோடு பெற்றோரும் பக்கபலமாக நிற்க வேண்டும். அன்று ஒரு வழிப் பாதை மாத்திரமே இருந்தது. குடாநாட்டிற்குக் கல்வியை தவிர வேறு வழியில்லை, என்ற சிந்தனை புரை யோடிக்கிடந்தது. துன்பங்கள் துயரங்கள் மத்தியிலும் தூரநோக்கு, மனங்களில் மாசுபடாமல் இருந்தது. இன்று கல்வி எனும் இலக்கினை சிந்திக்கும் மாணவர்களுக்கு, அதன் முக்கியத்துவத்தை சிந்திக்கும் மாணவர்களுக்கு பல திசைமுகப்படுத்தல்கள் கிடைக்கின்றன. தனி மனித கௌரவச் சிந்தனைகள், சமூக அந்தஸ்து நிலைகள் தலைதூக்காத மாணவப் பருவத்தில் உணர்வுகளை ஊசலாடவைக்கும் பல செயற்பாடுகள் எம் மத்தியில் இடம் பெறுகின்றன. தனியார் நிறுவனங்கள், கம்பனிகளின் வரவைத் தொடர்ந்து "கல்வியின் மூலம் வேலை வாய்ப்பு" எனும் எண்ணக் கருக்கள் சற்று முறியடிக்கப்படுகின்றன. வேலையில்லாப் பிரச்சினை சிறு சிறு பணத் தொகைகளை காட்டி நிவர்த்தி செய்யப்படுகின்றபோது கல்விக்குப் பின் வரும் கௌரவ தொழில் வாய்ப்பை மாணவ மனங்கள் உணர மறுக்கின்றன.

ஆகவே பெற்றோர்கள் உள்ளிட்ட மாணவர் சமூகம் அனைவரும் ஒன்றை மாத்திரம் சிந்திக்க வேண்டும். பணம் சம்பாதிப்பதற்கு பல வழிகள் இருக்கலாம். ஆனால் கல்வி என்ற ஒன்று இல்லை என்றால் கட்டையில் போகும் வரை கௌரவம் கிடைக்காது. சிந்தனைகளை சீர்படுத்துங்கள், இல்லையேல் மாகாண ரீதியில் முதன்மை பெற எந்த வாய்ப்பும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைக்கும் எல்லை உண்டு

ஓர் ஆள் மிகவும் வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தான். அவன் வேகமாக நடந்ததற்குக் காரணம் கடும் வெயில் . காலில் செருப்பு இல்லை. மணல் பாதை. அதனால் அவன் ஓட்டமும் நடையுமாகப் போய்க்கொண்டிருந்தான்.

காலில் செருப்பும் இல்லை, கையில் குடையும் இல்லை., அந்த ஆள் வெயிலில் வெந்து நடந்து போய்க் கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் இன்னொருவன் குதிரை மீது ஏறி அந்த வழியாக வந்து கொண்டிருந்தான். அவன் காலில் செருப்பும் இருந்தது. கையில் குடையும் இருந்தது.

நடந்து போய்க்கொண்டிருந்தவன் அந்தக் குதிரை ஆசாமியைப் பார்த்து, ''ஐயா! நீங்களோ குதிரை மீது உட்கார்ந்து கொண்டு போகிறீர்கள். அப்படியிருக்கும்போது உங்களுக்கு அந்தச் செருப்பு எதற்கு? அதை எனக்குக் கொடுத்து உதவலாமே'' என்று கேட்டான்.

குதிரை மீது உட்கார்ந்திருந்தவன் யோசித்தான். 'இவன் சொல்வதும் நியாயம்தானே...' என்று நினைத்த அவன் தன்னுடைய செருப்பைக் கழற்றி அந்த வழிப்போக்கனுக்குக் கொடுத்தான்.

''மிகவும் நல்லது'' என்று சொல்லி வழிப்போக்கன் செருப்பை வாங்கித் தன் காலில் மாட்டிக் கொண்டான்.

அதன்பின்னர் மீண்டும் வழிப்போக்கன் பேச ஆரம்பித்தான்.

''ஐயா... நீங்கள் குதிரையில்போவதால் போக வேண்டிய இடத்துக்கு விரைவில் போய்ச் சேர்ந்துவிடுவீர்கள். அதனால் உங்கள் கையில் அந்தக் குடை எதற்கு? நான் நடந்து போய்க் கொண்டிருப்பவன். இந்த வெயிலில் நீண்டநேரம் நடக்க வேண்டியிருக்கிறது. அதனால் அந்தக் குடையையும் எனக்குக் கொடுங்கள் '' என்று கேட்டான்.

குதிரைவீரன் யோசித்தான். 'இதுவும் நியாயம்தான்' என்று அவனுக்குத் தோன்றியது.உடனே அவன் இரக்கப்பட்டு தன்னிடமிருந்த குடையையும் வழிப்போக்கனிடம் கொடுத்துவிட்டான்.

அதன்பின் குதிரை வீரன் நிம்மதியாகப் புறப்பட்டான். இப்போது வழிப்போக்கன் மறுபடியும் கைதட்டி குதிரை வீரனை நிறுத்தினான்.

''என்னப்பா... ஏன் என்னை நிறுத்தினாய்? இன்னும் உனக்கு ஏதாவது வேண்டுமா? என்று குதிரையில் இருந்தவன் வினவினான். இவன் மெதுவாக வாயைத் திறந்து அந்தக் குதிரையையும் எனக்குக் கொடுங்களேன்'' என்றான்.

அந்தக் குதிரைவீரன் இப்போது ஒரு கணம் யோசித்துப் பார்த்துவிட்டு தன்னிடம் இருந்த குதிரைச் சவுக்கை எடுத்து அந்தச் சவுக்கால் அந்த ஆளை வாங்கு வாங்கு என்று அடித்து வீசித் தள்ளிவிட்டான்.

அவ்வளவு சவுக்கடியையும் வாங்கிக்கொண்டு அந்த ஆள் சிரித்தான்.அடி வாங்கிக்கொண்டு யாராவது சிரிப்பார்களா? குதிரை வீரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவன் ''என்னப்பா இது? ஏன் அடி வாங்கிக் கொண்டு இப்படி சிரிக்கிறாய்? என்று கேட்டான்.

இப்போது அந்த வழிப்போக்கன் கூறினான்.


''ஐயா... நான் இப்படி சிரிப்பதற்குக் காரணம் இருக்கிறது. இந்தக் குதிரையைக் கேட்டு நான் உங்களிடம் அடி வாங்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். என் உயிர் உள்ள வரையில் மனதில் ஒரு தவிப்பு இருந்து கொண்டே இருக்கும். செருப்பையும் குடையையும் கேட்டவுடனே கொடுத்தாரே குதிரையையும் கேட்டிருந்தால் கொடுத்திருப்பாரோ என்ற பேராசையில் ஏங்கிக் கொண்டே இருந்திருப்பேன். இப்போது உங்களிடம் அடி வாங்கிய பின் என்னுடைய அந்தச் சந்தேகம் தீர்ந்து போய்விட்டது. என்னுடைய ஆசைக்கு எல்லை எது என்பது இப்போது எனக்குப் புரிந்துவிட்டது''என்று சொல்லிவிட்டு அவன் நடக்க ஆரம்பித்தான்.



ஒவ்வொருவருடைய ஆசைக்கும் எல்லை உண்டு என்பதை இந்தக் கதை தெட்டத் தெளிவாக விளக்குகிறது. இதனை ஒவ்வொருவரும் வாழ்வில் புரிந்து கொள்வது அவசியம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# 8 நூற்றாண்டுகளுக்கு மேல் பழைமையான நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோயில்



ஒவ்வொருவரின் உள்ளமும் இறைவன் வீற்றிருக்கும் மனக்கோயிலாக இருக்க வேண்டுமென்பதே ஆண்டவனின் விருப்பமாகும். இதனையே 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்று பாடித் துதிக்கின்றோம். இவ்வாறு உள்ளத்தில் குடியிருக்கும் கடவுளை ஊரோடு இணைந்து மனதுருகிப் போற்றிவணங்கவும், மக்களிடையே பரஸ்பர அன்பை, நல்லுறவை, பகிர்தலை, பக்குவத்தை வளர்க்கவும் ஆலயம் என்னும் பொது வழிபாட்டிடத்தை அமைத்து பூஜிப்பது தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது.

யேசுதாஸ்

மக்கள் வாழும் கிராமங்களையும், நகரங்களையும் தேசங்களையும் பாதுகாத்து பல்வேறு வளங்களையும் சௌபாக்கியங்களையும் இந்த ஆலயங்களில் வீற்றிருக்கும் தெய்வங்கள் வழங்கி அருளாட்சி புரிந்து வருகின்றன. இவை சிறு கோயில்கள், ஆலயங்கள், தேவஸ்தானங்கள், திருத்தலங்கள், ஈஸ்வரங்கள் என அவற்றின் வரலாற்றுச் சிறப்பு, பழைமை, அமைவிடம் என்பவற்றுக்கமைய அழைக்கப்படுகின்றன.

இவ்வாறு இலங்கையில் பல்லாயிரம் கோயில்களில் பல்வேறு தெய்வங்கள் எழுந்தருளி இருந்தாலும் சிவன் வழிபாடே விஞ்சி நிற்கிறது. ஏனெனில், ஒரு முறை மிகச் சிறந்த சிவபக்தரும் இராவணனுடைய தந்தையுமாகிய ''விஸ்வரசு'' முனிவர் ஈசனிடம் தான் சிவவழிபாடு செய்வதற்கு ஓர் அமைதியான இடத்தை பூவுலகில் தருமாறு கேட்ட போது பரமேஸ்வரன் பார்வதியினால் படைக்கப்பட்டதும், இந்து சமுத்திரத்தின் முத்தாகவும் விளங்கும் இலங்கைத் தீவை அவருக்கு வழங்கியதாக தக்ஷண கைலாச புராணம் கூறுகிறது.

நல்லூர் கைலாசநாதர் ஆலயத்தின் தோற்றம் யாழ்ப்பாண அரசுடன் தொடர்புள்ளதாகக் கூறப்படுகிறது. அக்காலப்பகுதியில் தமிழகத்தின் பல இடங்களில் இருந்தும் வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியதைத் தொடர்ந்து ஏற்பட்ட யாழ்ப்பாண அரசு சிறப்பாகக் கைலாசநாதர் ஆலயத்தை அமைத்து, அதற்கான முதலாவது மஹாகும்பாபிஷேகத்தை நடத்தியமை பற்றி கைலாசமாலையில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஈஸ்வர வழிபாடு அதிகமாக இருப்பதாலும், கைலாசநாதர் பார்வதிதேவியோடு இருந்து அருள்புரிவதாலும், திருமூலர் இந்த ஈழநாட்டை சிவபூமி என்றும் புண்ணியபூமி என்றும் வர்ணித்துள்ளார்.

இந்த சிவபூமியின் வட பகுதியில் சிறப்புடன் அமைந்திருந்த நல்லூர் இராசதானியின் தெற்குத் திசையிலே நாவலர் வீதியும் கோயில் வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள கைலாச பிள்ளையார் ஆலயம் இற்றைக்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக த்மிழர்களின் புராதன கோயில்களில் ஒன்றாக விளங்குகின்றது. இது ஆரம்பத்தில் கைலாச நாதரின் ஆலயமாகத் தோன்றி, கால ஓட்டத்தில் பிள்ளையார் கோயிலும் இணைந்து கைலாச பிள்ளையார் என்று அழைக்கப் படுகிறது.

முழுமுதற்கடவுளாகிய சிவபிரான் அவரது சக்தியான பார்வதி செல்லப்பிள்ளை விநாயகர் இருப்பிடமாக சைவ சமயத்தவர்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ள வெண்பனிப்படலமுள்ள கைலாசமலை முதற் கைலாசமெனவும், இந்தியாவில் திருக்காளகஸ்தியிலுள்ள சிவாலயம் இரண்டாவது கைலாசமெனவும், நல்லூரில் உள்ள கைலாசநாதர் ஆலயம் தக்ஷண கைலாசம் மூன்றாவது கைலாசமெனவும் கைலாயமாலை நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லூர் கைலாசநாதர் ஆலயத்தின் தோற்றம் யாழ்ப்பாண அரசுடன் தொடர்புள்ளதாகக் கூறப்படுகிறது. அக்காலப்பகுதியில் தமிழகத்தின் பல இடங்களில் இருந்தும் வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியதைத் தொடர்ந்து ஏற்பட்ட யாழ்ப்பாண அரசு சிறப்பாகக் கைலாசநாதர் ஆலயத்தை அமைத்து, அதற்கான முதலாவது மஹாகும்பாபிஷேகத்தை நடத்தியமை பற்றி கைலாச மாலையில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

மதுரையில் இருந்து கி.பி 13 ஆம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாணம் வந்து தமிழ் அரசை உருவாக்கிய சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியே இந்தக் கோயிலைக் கட்டுவித்தான். தனது இராசதானிக்கு தெய்வங்களின் திருவருளும், பாதுகாப்பும் அழகும் வேண்டுமெனக் கருதி, அரண்மனை அயலிலே முருகன் ஆலயம், கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம், வடக்கே சட்டநாதர் ஆலயம், மேற்கே வீரமாகாளி அம்மன் ஆலயம் தெற்கே கைலாசநாதர், கைலை நாயகி, கைலை விநாயகர் ஆலயங்களையும் கட்டினார் என அறியப்படுகிறது.

அரசும் ஆலயங்களும் தமிழ் நாட்டிலிருந்து பரம்பல் அடைந்தமைக்கு பல சான்றுகள் உள்ளன. வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் தென்தமிழ் நாட்டில் உள்ளது. சட்டநாதர் கோயில் சீர்காழியில் உண்டு. கைலாசநாதர் பெயரில் பல கோயில்கள் உள்ளன. நல்லூர், திருநெல்வேலி எனப் பல ஊர்களும் உண்டு.

சிங்கை ஆரியன் சிறந்த சிவபக்தன், தமிழிலும் வடமொழியிலுமுள்ள சமய, இலக்கிய, இலக்கண நூல்கள் மற்றும் நுண்கலைகளில் தேர்ச்சி பெற்றவன். இவன் தனது சொந்த ஊரான மதுரையிலே கோயில் கொண்டிருக்கும் சொக்கநாத(சிவ) பெருமானுக்கு கோயில் ஒன்றை அமைக்க விரும்பி சிந்தித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் இரவு கனவிலே தோன்றித் தாம் கைலாசநாதன் எனவும், தனக்கு அப்பெயரிலே கோயில் அமைக்குமாறும் அறிவுறுத்தினார்.

அதனையடுத்து சிங்கையாரிய மன்னன் இந்திய கட்டடக் கலைஞர்களின் ஆலோசனைப்படி தென்னிந்திய ஆலய அமைப்புக்களையொத்த ஆலயத்தைக் கட்டுவித்தான். கேதாரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கத்தை பிரதிட்டை செய்து வைத்து கும்பாபிசேகத்தையும் நடத்தி வைத்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடும் திட்டமில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

மட்டக்களப்பு,மே23

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடும் திட்டம் இல்லை என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆராயவுள்ளதாக தகவல்கள் வெளியான நிலையிலேயே அந்தக் கட்சியின் பொதுச்செயலர் ஹசன் அலி அதனை மறுத்துள்ளார்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவது தொடர்பான எந்தத் திட்டமும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இல்லை.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவது தொடர்பான எந்தத் திட்டமும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இல்லை. அதேவேளை கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் கண்டியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும், கிராமியக் குழு உறுப்பினர்களும் கலந்து கொள்வர். (ச)

## குடி தண்ணீர் இன்றி மக்கள் அவதி

அக்குறணை,மே23

அக்குறணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அளவத்துகொட நகரை அண்மித்த கிராமப் புறங்களில் வாழும் சுமார் 3000 குடும்பங்கள் சுத்தமான குடிதண்ணீர் இன்றி சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

இது தொடர்பாக அரசியல்வாதிகளிடம் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

அளவத்துகொட , சைஸ்டன் கொலனி, பலக்கடுவ, நாகஹபிட்டிய, தெல்கஸ்கொட போன்ற கிராமங்களில் வாழும் மக்களே இவ்வாறு குடிதண்ணீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பு
## மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி மனு

மட்டக்களப்பு,மே23

போரால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தொடர்ந்து எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகோரி தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பு மனு ஒன்றை கிழக்கு மாகாணமுதல மைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் ஒப்படைத்துள்ளது.

இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போரால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்டவர்களில் இதுவரை 584 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தற்காலிக குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர், 647 குடும்பங்கள் மலசலகூடங்கள் இன்றி வாழ்கின்றனர். 184 விதவைகள் குறித்த கிராமங்களில் வாழ்வாதாரமற்ற நிலையில் காணப்படுகின்றனர். குடிதண்ணீர் வசதியின்றி 780 குடும்பங்கள் காணப்படுகின்றன. மின்சார வசதியின்றி 790 குடும்பங்களும் சமுர்த்தி கொடுப்பனவு இன்றி 250 குடும்பங்களும் வாழ்கின்றனர்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் கூறப்பட்டுள்ள விடயங்களை ஆராய்ந்த முதலமைச்சர், அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நவீன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த மக்களுக்கு எதிர்நோக்கும் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். மலசலகூடம், குடிதண்ணீர், மின்சாரம் மற்றும் சமுர்த்திப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளார். (ச)

## நுளம்பை ஒழிக்க...



தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாளிகைக் காட்டில் சப்பயன் புல் இனத்தை அகற்றும் பணியில் பிரதேசசபை உறுப்பினர்கள் ஈடுபட்டனர்.

## கிழக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

### ஹிஸ்புல்லா தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே23

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நானோ, எனது மகனோ போட்டியிடப்போவதில்லை என்று பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை தேர்தல் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன். என்னை போட்டியிடுமாறு எனது கட்சியின் தலைவர் அமைச்சர் றிசாட் பதியுதீன் உட்பட பலரும் வலியுறுத்துகின்றனர்.

ஆனால் நான் போட்டியிடப்போவதில்லை. தேசிய அரசியலில் உள்ள நான், அதன் மூலமாக சமூகத்துக்கு பலதரப்பட்ட சேவைகளை ஆற்றி வருவதுடன் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டியுள்ளது.

எனது மகன் தேர்தலில் போட்டியிடுவார் என்று கூறப்படும் கதை வெறும் கட்டுக்கதையாகும். அவர் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார். எனது மகனை அரசியலுக்கு கொண்டு வரும் எண்ணம் எனக்கு இல்லை. அவரும் அந்த எண்ணத்தில் இல்லை- என்றார்.

கிழக்கு மாகாண சபையின் தற்போதைய உறுப்பினர் கே.எல்.எம்.பிரீதை வேட்பாளராக நியமிப்பீர்களா என கேட்ட போது இன்னும் வேட்பாளர் யார் என்பது குறித்து தீர்மானிக்கவில்லை என்று பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ச)

## அதிகரித்த விலையில் பொருள்கள்

நுவரெலியா,மே23

மலையகத்தில் பல இடங்களில் உணவுப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையிலும் கூடுதலாக விற்கப்படுகின்றன.

குறிப்பாக சீனி கிலோ 120 ரூபாவுக்கும், மா ஒரு கிலோ 120 ரூபாவுக்கும் பல இடங்களில் விற்பனையாகின்றன.

விலைகட்டுப்பாட்டு அதிகாரிகள் இது தொடர்பாக எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உணவுப் பொருள்களின் விலையை வர்த்தகர்கள் தங்களது விருப்பத்துக்கேற்ப அதிகரிக்கின்றனர். உணவகங்களில் உணவுப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே செல்கின்றன என்று மக்கள் குறை கூறுகின்றனர். (ச)

## யானைத் தாக்குதலால் 3 வீடுகள் சேதம்

மட்டக்களப்பு,மே23

மட்டக்களப்பு, பின்சேனை பிரதேச குடிமனைகளுக்குள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு உட்புகுந்த காட்டுயானைகளின் அட்டகாசத்தால் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன என்று பின்சேனை கிராம அபி விருத்திச் சங்க தலைவர் வா.கேதாரம் தெரிவித்தார்.

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள இந்தக் கிராமத்துக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் தாக்கியதில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் இரு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் சொன்னார்.

வீட்டை முற்றாக இழந்த குடும்பம் தங்குவதற்கு இடமின்றி மரத்தின் கீழ் தஞ்சமடைந்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமையும் காட்டு யானைகளின் தாக்குதலினால் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளன. (ச)

## மருதமுனையில் புதிய குறுக்கு வீதி

அம்பாறை,மே23

மருதமுனை பிரதேசத்துக்கும், நற்பிட்டி முனைப் பிரதேசத்துக்கு மிடையே இலகுவான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் நோக்குடன் புதிய குறுக்கு வீதி ஒன்றை அமைப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருதமுனையோடு அண்மித்த கிராமங்களில் வாழும் மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகள் மற்றும் வியாபார நோக்கங்களுக்காக மருதமுனைக்கு தினமும் செல்வதும், நற்பிட்டிமுனைப் பிரதேச மாணவர்கள் மருத முனை பாடசாலைகளுக்கு கல்வி கற்க வருவதும் வழமையாகும்.

இந்த நிலையில் இவர்கள் தினமும் பாண்டிருப்பு தாளவிட்டுவான் சந்திக் கூடாகவே நீண்ட தூரம் பயணம் செய்து மருத முனைப் பிரதேசத்துக்கு வருகின்றனர். இதனால் ஏற்படும் சிரமங்களையும், கால விரயத்தையும் கவனத்தில் கொண்டே இந்தப் புதிய குறுக்கு வீதி அமைக்கும் அவசியத்தை மாகாண சபை உறுப்பினர் துல்கர் நயீம் வலியிறுத்தியுள்ளார் .

இதனையடுத்து அமைச்சர் உதுமா லெவ்வை உரிய அதிகாரிகளுக்கு புதிய வீதி அமைக்கும் திட்டம் தொடர்பான விளக்கங்களை அளித்ததுடன், இந்தக் குறுக்கு வீதிக்கான திட்ட வரைபுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பணியை விரைவாகச் செய்து முடிப்பதற்கு எவ்வாறான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பது பற்றியும் அமைச்சர் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-ஜ)

## காணாமற்போன சிறுவன் சடலமாக மீட்பு

தலவாக்கலை,மே23

தலவாக்கலை, மேல்கொத்மலை நீரணையில் தவறி விழுந்த சிறுவனின் சடலம் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு மீட்கப்பட்டது. தலவாக் கலை, கூம்வூட் தோட்டத்தைச் சேர்ந்த 9 வயது சிறுவன் ஒருவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமல் போனதாக பெற்றோர் தலவாக்கலை, லிந்துலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்கின்ற தினேஷ்குமார் என்ற இந்தச் சிறுவன் தலவாக்கலை நகரிலுள்ள பிரத்தியேக வகுப்புக்குச் சென்றிருந்தபோதே காணாமற் போனார்.

இதனைத் தொடர்ந்து நீரணையில் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதே சடலமாக சிறுவன் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## புதிதாக இரண்டு பஸ்; எதிர்த்து ஆர்ப்பாட்டம்



சிலாபம்,மே23

வடமேல் மாகாண வீதிப் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினால் ஆனமடு - சிலாபம் வீதிக்கு புதிதாக இரண்டு பஸ்களுக்கு அனுமதி வழங்கியுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனமடு - சிலாபம் வீதியில் பயணத்தில் ஈடுபடும் பஸ்கள் ஒன்றிணைப்பு அடிப்படையில் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அதனடிப்படையில் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் இரண்டு தனியார் பஸ்களுடன் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஒரு பஸ்ஸும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த வீதியில் 12 தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் புதிதாக மேலும் இரண்டு பஸ்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதையடுத்து அதன் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** ஆரம்பித்து இடையில் விட்ட பணி ஒன்றை மீண்டும் எடுத்து வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். இனிமையான பேச்சுக்கள் வெற்றியை அதிகரிக்கும். காலை நேரத்தில், சில நல்லசெய்திகளைக் கேட்கலாம். உறவினரின் பணியின் பொருட்டு அலைச்சல் இருக்கும். மற்றவர்களின் செயலுக்கு, நீங்கள் பொறுப்பேற்க வேண்டி ஏற்படலாம்.

**இடபம்:** திட்டமிட்ட வேலைகள் திட்டமிட்டதுபோல முடிவுக்கு வரும். சில நேரங்களில், மனதில் பழைய நினைவுகள் ஆக்கிரமித்துக் கொள்ளும். சகஜ நிலையோடு செயற்படுங்கள். எதிர்பார்த்த பணம், இடையூறின்றி கைக்கு வந்து சேரும். வெளிநாட்டுத் தொடர்புகளில், ஏற்ற இறக்கமான பலன்களைக் காணலாம்.

**மிதுனம்:** குடும்ப கருத்து வேறுபாடுகள் அகலும் நாள். பயணங்களில் தடைகள், குறுக்கீடுகளை எதிர்கொள்ளலாம். கடன் விவகாரங்களில், வாக்கு நாணயத்தைக் காப்பாற்றுவதில் சிறு சிரமம் உண்டு. அலுவலகப் பணிகளில், தேவையற்ற சச்சரவுகள் ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் இருக்கட்டும். சகோதரிகளுக்காக, சில பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்

**கடகம்:** பிடிவாதமாகவும், துணிச்சலுடன் செயற்பட்டு காரியங்களை முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைப்பதில் சிரமம் உண்டு. இல்லறத் துணையோடு வாக்குவாதம் வேண்டாம். கடன் வாங்கிய ஒருவர், நீங்கள் எதிர்பார்த்த நேரத்தில் திருப்பிக் கொடுத்து விடுவார். சொத்து வகையில் செலவுகள் ஏற்படும்.

**சிங்கம்:** வசதி படைத்தவர்களின் சந்திப்பால் வளம்பெறுவீர்கள். எதிர்கால சேமிப்பை அதிகரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். அலுவலகத்தில், குடும்ப விவகாரங்கள் பேசுவதைத் சற்றுத் தவிர்த்துக் கொள்ளுங்கள். குழந்தைகளின் கல்வி விடயங்களுக்காக, அலைச்சல் இருக்கும். தொழில், வியாபார ரீதியான பண வரவுகளுக்கும் வாய்ப்புகள் உண்டு.

**கன்னி:** குடும்பத்தில் குதூகலம் காணப்படும். எடுத்துக்கொண்ட பணிகளில், சிரத்தையுடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகளை, தொலைபேசி மூலம் கேட்கலாம். வீட்டை அலங்காரம் செய்வது, சீரமைப்பது போன்ற பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். இறைவழிபாட்டில் நாட்டம் உண்டாகும்.

## நாளை

வைகாசி 11 வியாழக்கிழமை 24.05.2012
திதி: திருதியை மு.ப. 10.15 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மரண மு.இ 07.07 வரை
சுபநேரம்: 07.22- 08.52 வரை
ராகு காலம்: 01.22- 02.52 வரை

**துலாம்:** எடுத்துக்கொண்ட பணிகளை இடையூறின்றிச் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் உங்களுக்கு ஓரளவு அனுசரணையாக இருப்பர். இல்லறத்துணையின் யோசனை, தக்க நேரத்தில் உதவும். நல்லவர் ஒருவரின் நட்பைப் பெறுவீர்கள். கடனாகக் கொடுத்த பணம், எதிர்பார்த்த காலத்துக்கு முன்னதாகவே திரும்பி வரும்.

**விருச்சிகம்:** எதிலும் நீங்கள் பெருந்தன்மையோடு செயல்படுவீர்கள். சேமிப்பை விட, செலவுகள் கூடும் நாள். பயணங்களால், சுபகாரியச் செலவுகளால் பணம் கரையலாம். வெளிநாட்டு பயண முயற்சிகளில் அனுகூலம் உண்டு. வேலையாள்களால், அயலிலுள்ளவர்களால் சில பிரச்சினைகளை சந்திக்கலாம்.

**தனுசு:** மனத்தெளிவோடு செயற்படுவீர்கள். கஷ்டம் இல்லாமல் காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால், பெண்களால் செலவுகள் அதிகரிக்கலாம். தந்தை உடல் நலனிலும் அக்கறை காட்ட வேண்டும். நல்ல காரியம் ஒன்றைச் செய்வதன் மூலம், புகழ், கௌரவம் மேம்படும்.

**மகரம்:** வாகனம் வாங்குவது, மாற்றுவது பற்றி சிந்திப்பீர்கள். வியாபாரிகள், லாபம் கூடுதலாகப் பெற்று மகிழ்ச்சி அடைவர். நீண்ட நாள்களாக, உங்களை தேடி வராத சிலர் இன்று தேடி வருவர். அவர்களால் சில காரியங்களைச் செய்து கொள்வீர்கள். தெய்வ வழிபாடு, மன நிறைவைத் தரும்.

**கும்பம்:** நினைத்தது நடந்து நிம்மதி காண்பீர்கள். எதிர்பார்த்த தனவரவுகள் இல்லம் தேடி வரலாம். நிலம், வீடு விவகாரங்களில் அனுகூலமான பலன்கள் உண்டு. தொழில் வகையில், புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப்பெறுவீர்கள். உறவினர்கள், உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். நண்பர்களின் பாராட்டு மழையில் நனைவீர்கள்.

**மீனம்:** மறதி, கவனக்குறைவு அதிகமாக இருக்கும். வழக்கமான அல்லது புதிய முயற்சிகளில் தடைகள் தாமதங்களைச் சந்திப்பீர்கள். சற்று யோசித்து செயற்பட்டால், அனைத்தையும் சரி செய்து கொள்ள முடியும். திடீர் செலவுகளால், பணச்சிக்கலில் மாட்டிக் கொள்ளலாம். தொழில் போட்டிகளை, புத்தி சாதுர்யத்தால் சமாளிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 6 | | | 1 | 2 | | |
| 4 | | 3 | 7 | | | 8 | | |
| | | 2 | 6 | 8 | | 3 | | 9 |
| | 3 | | | 9 | | 1 | 6 | 2 |
| | | | | | | | | |
| 2 | 1 | 8 | | 6 | | | 7 | |
| 3 | | 7 | | 5 | 8 | 6 | | |
| | | 1 | | | 2 | 4 | | 3 |
| | | 4 | | | | 7 | 2 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 5 | 7 | 8 | 4 | 6 | 9 |
| 4 | 7 | 5 | 9 | 2 | 6 | 1 | 3 | 8 |
| 8 | 6 | 9 | 1 | 3 | 4 | 2 | 7 | 5 |
| 2 | 3 | 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 7 |
| 5 | 4 | 6 | 7 | 8 | 3 | 9 | 1 | 2 |
| 9 | 8 | 7 | 2 | 5 | 1 | 3 | 4 | 6 |
| 6 | 9 | 8 | 3 | 4 | 5 | 7 | 2 | 1 |
| 7 | 1 | 4 | 6 | 9 | 2 | 8 | 5 | 3 |
| 3 | 5 | 2 | 8 | 1 | 7 | 6 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# பூநகரி ஆலங்கேணி
## கட்டுக்கரை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
# புனரமைப்புக்கான நிதி வேண்டுகை

ஈழத் திருநாட்டின் சீரும் திருவும் சென்நெல்லும் விளைந்தோங்கும்
பூநகரி ஆலங்கேணி பகுதியிலே கட்டுக்கரை பதியிலே
கோயில்கொண்டு வேண்டுவார் வேண்டுகின்ற போதெல்லாம்
அவர்களுடைய இதயக் கமலாசனத்திலே வீற்றிருந்து மேலான
பேரின்ப வாழ்வை தருபவர் கட்டுக்கரை அருள்மிகு
ஸ்ரீ வீரகத்தி விநாயகர்.

இந்த விநாயகப்பெருமான் ஆலயமானது கடந்த காலத்தில் ஏற்பட்ட போர் சூழல்கள் காரணமாகவும், இடப்பெயர்வுகளினால் பராமரிப்பு இன்மையாலும் மிகவும் பாதிப்புக்கு உள்ளான நிலையில் சிறப்பிழந்து காணப்படுகின்றது. அதனால் இந்த ஆலயத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் புனரமைப்புச் செய்வதற்காக கடந்த (02.05.2012) அன்று பாலஸ்தாபன விழா காணப்பெற்றிருக்கின்றது. ஆகவே இந்தப் புனரமைப்புக்கு பெருமளவிலான நிதி தேவைப்படுமென கணக்கிடப்பட்டிருப்பதால் விநாயகப் பெருமானின் நாமங்களை உங்கள் நெஞ்சிலே வைத்துப் பூசிக்கின்ற மெய்யான அடியார்களே சூழ்நிலைகள் காரணமாக இவ்வூர்தனில் இருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் வசித்துவருகின்ற விநாயகரின் அன்பான உறவுகளே கிடைப்பதற்கு அரிய இந்த நற்பெரும் காரியம் இனிதே நடைபெற இருக்கும் இவ்வேளையிலே உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நிதியுதவி செய்து பரம்பொருளின் பெரும்புகழால் உலகமெலாம் வாழ்வோர் உய்ய, உவகையோடு உதவுமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் நிதியுதவியினை
*வீரகத்தி விநாயகர் ஆலயம்*
கணக்கு இல. 7166 5112
இலங்கை வங்கி
கிளிநொச்சி - எனும் கணக்கு இலக்கத்துக்கு வைப்புச் செய்யலாம்.

மேலதிக தொடர்புக்கு: (0094) 776 290 829
(0094) 77 444 9712

பூநகரி,
ஆலங்கேணி.

ஆலய பரிபாலன சபை,
கட்டுக்கரை பிள்ளையார் ஆலயம்.

(6.7.45)



# திரு.திருமதி யோசப் பிரான்சீஸ் மரியபுஸ்பம்
## தம்பதியரின் 50 ஆண்டு திருமண நாள் வாழ்த்துக்கள்
23.05.2012



இல்லறமென்னும் நல்லற வாழ்வில்
சீர்பல கொண்டு சுற்றமும் உறவும் பேணி
இல் வாழ்விற்கோர் இலக்கணமாகி
உலகம் போற்றும் உத்தம சீலராய்
அன்பென்னும் இன்பக் கடலில் நீந்தி
அறிவோடு பண்புறு மக்கள் தம்மையும்
மேலும் வேண்டும் மேன்மைகள் யாவையும்
இறைமகன் யேசுவின் இன்னருளாலும்
நாவாயூர் நாயகி பரலோக அன்னையுமாய்
நீண்ட ஆயுளும் நிறைவுறு அகமும் பெற்று
ஐம்பது ஆண்டுகள் இல்வாழ்வில் நிறையு மின்னாள்
இன்னும் பல்லாண்டுகள் இனிதே வாழ்ந்து
பார்மிசை உம்புகழ் பரந்து ஒளிர்ந்திட
இறை ஆசி வேண்டி வாழ்க! வாழ்க வென
வாழ்த்தி நாம் மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(5/199) (2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வேண்டின் பொன்சேகா கேட்கலாம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்



கொழும்பு,மே23

விசேட பாதுகாப்புத் தேவையென்றால், விடுதலை பெற்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா பாதுகாப்பு அமைச்சிடம் அது தொடர்பில் கோரிக்கை விடுக்க வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பாதுகாப்பு பிரச்சினை காணப்பட்டால் அது தொடர்பல் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்து அதன் மூலம் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவுக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து அரசு இதுவரையில் எந்தவிதமான தீர்மானமும் எடுக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகா பாதுகாப்பு அமைச்சில் விடுக்கும் கோரிக்கைக்கு அமைவாக இராணுவம் அல்லது பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது குறித்து தீர்மானிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## ஜனாதிபதியுடன் அமைச்சர் படையணி...



கட்டார் தேசிய நூதனசாலைக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு வைக்கப்பட்டிருந்த மிகப் பழைமைவாய்ந்த திருக்குர்ஆன் பிரதியை பார்வையிட்டார். அருகில் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம். பௌசி, ரிசாத் பதியுதீன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# பொன்சேகா வெளியே வந்தாலும் எந்தப் பதவியும் வகிக்க முடியாது

## அரச உயர் அதிகாரி தகவல்

கொழும்பு,மே23

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, நாடாளுமன்ற உறுப்பினராகவோ, மாகாணசபை உறுப்பினராகவோ பதவியேற்க முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு அளித்துள்ளார். ஆனாலும் இலங்கையின் அரசமைப்பின்படி, இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் ஏழு ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடவோ, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவோ முடியாது.

பொதுமன்னிப்பு சரத் பொன்சேகாவின் சிறைவாசம் அனுபவிக்கும் காலத்தை மட்டுமே குறைத்துள்ளது. அவரது சிறைத்தண்டனை குறைக்கப்படவில்லை. அவரது சிறைத்தண்டனைக் காலம் குறைக்கப்பட்டால் தான் அரசியலில் ஈடுபட முடியும்- என்றார்.

சரத் பொன்சேகாவின் குடியியல் உரிமைகளை முழுமையாக மீளப்பெறுவதற்கு அரசுடன் தொடர்ந்து பேச்சு நடத்தப் போவதாக ஜனநாயக தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரிரான் அலஸ் தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை பெற்று குடியியல் உரிமைகளை இழந்தாலும்கூட, அவற்றை மீளவழங்கும் வகையில் ஒருவருக்கு முழுமையான பொதுமன்னிப்பு அளிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது என்று அவர் கூறினார்.

சந்திரிகா ஆட்சிக்காலத்தில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் சிறைவாசம் அனுபவித்த தற்போதைய அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத்தகைய பொது மன்னிப்பை வழங்கியிருந்தார். ஆனால் அத்தகைய முழுமையான பொதுமன்னிப்பு சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வழக்கு முடியும்வரை பெறுபேறு வெளியாகாது

## கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு,மே23

இஸட் புள்ளி தொடர்பான நீதிமன்ற வழக்கு முடிவடையும்வரை ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மீள்மதிப்பீட்டு பெறுபேறுகளை வெளியிட வேண்டாம் என்று பரீட்சைகள் திணைக்களத்தை சட்டமா அதிபர் கோரியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சுமார் 140,000 பேர் விடைத்தாள் மீள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர். இந்த மீள்மதிப்பீடுகள் முடிவடைந்துள்ள போதிலும் சட்டமா அதிபரின் ஆலோசனை காரணமாக பெறுபேறுகளை வெளியிட முடியவில்லை என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ச)

### கொழும்பில் நடைபெறவுள்ள

# தமிழ் இலக்கிய மாநாட்டில் ஏழு பேருக்கு கௌரவிப்பு

கொழும்பு,மே23

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் 2 ஆம்,3 ஆம்,4ஆம் திகதிகளில் உலகத் தமிழ் இலக்கிய மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையின் பல பாகங்களைச் சேர்ந்த கலை இலக்கியத்துக்கு அர்ப்பணித்த மூத்த கலை, இலக்கிய படைப்பாளிகள் ஏழு பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அன்புமணி இரா. நாகலிங்கம், நாவலாசிரியர் ந. பாலேஸ்வரி, செய்யித் ஹஸன் மௌலானா, வட மாகாணத்தைச் சேர்ந்த சிற்றிதழ் சிற்பி சிவசரவணபவன், கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி, ஓவியர் ஆசை இராசையா, மலையகத்தைச் சேர்ந்த மூத்த கவிஞர் சக்தீ பால-ஐயா ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (ச)

# மக்களுக்கான அதிகாரம் வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதிக்கு ஹிருணிகா மனு



கொழும்பு,மே23

மக்களுக்கான இறைமை-அதிகாரங்கள் நியாயமாக வழங்கப்படல் வேண்டும் என்று ஹிருணிகா பிரேமச்சந்திர ஜனாதிபதியிடம் மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

80 ஆம் ஆண்டுகளிலிருந்து எனது தந்தையின் அரசியல் பயணம் எவ்வாறானது என கொலன்னாவைப் பகுதி மக்கள் மாத்திரமன்றி, அனைத்து மக்களும் நன்கு அறிவார்கள்.

79 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசு இருந்தபோது இலங்கை மக்கள் வீட்டுக்கு வெளியே வருவதற்கே அச்சமடைந்த காலப்பகுதி அது.

அப்போது அந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாது, மக்களை ஒன்றிணைத்து வீதிக்கு இறங்கி நீலக்கொடியை கொலன்னாவையில் பறக்கவிட்ட ஒரே தலைவர் எனது தந்தை. கடந்த ஏழு மாதங்களாகப் பிரதான சந்தேகநபரைச் சட்டத்தின் முன் கொண்டுவர வேண்டுமென்றே நான் கூறி வருகிறேன். தற்போது இந்த வழக்கு பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் தரப்பு மற்றும் துமிந்த சில்வா உள்ளிட்ட நாட்டின் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தரப்பினரின் வழக்காக மாறியுள்ளது.

இந்த மனு யாருடைய அழுத்தங்களுக்கும், தேவைகளுக்கும் அமைய எழுதப்பட்ட ஒன்று அல்ல. எனது உள்ளத்தில் பதிந்துள்ள அனைத்து விடயங்களையும் இந்த மனுவில் சேர்த்துள்ளேன்.

இந்த மனுவை படித்தவுடன் கிழித்துப்போடுவதா, சிந்தித்து நியாயத்தை வழங்குவதா? என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ரூபாவின் பெறுமதியை வலுப்படுத்த 425 மில்.டொலர் இலங்கைக்கு

ரூபாவின் பெறுமதியை வலுப் படுத்த 425 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளது. நாட்டுக்கு வரும் டொலர்களை விட நாட்டிலிருந்து வெளியே செல்லும் டொலர் பெறுமானத்தை அதிகரித்ததால் ஏற்பட்ட வர்த்தக பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கே இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று மத்தியவங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.(ச)

# தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவியுங்கள்

## ஜனநாயக மக்கள் முன்னணி செயலர் வலியுறுத்து

**தமிழ் அரசியல் கைதிகள்மீது குற்றங்கள் இருப்பின் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள். சிறைப்படுத்தி வதைக்கவேண்டாம்.**

கொழும்பு,மே23

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை அரசு விடுதலை செய்தது போன்று, பத்து வருடங்களுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளையும் அரசு விடுதலை செய்யவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் குமர குருபரன் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறையிலிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மீது குற்றம் இருப்பின் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துங்கள். சிறையில் வைத்து அவர்களின் வாழ்க்கையை சீரழிக்க வேண்டாம்.

புலிகள் இயக்கத்திற்கு தலைமை வகித்த முக்கிய பல தலைவர்கள் சுதந்திரமாகச் சுற்றித்திரிகின்றபோது, தமிழ் அரசியல் கைதிகள் மட்டும் ஏன் இன்னும் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை அரசு விடுதலை செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியதொரு விடயமாகும். இவரை விடுதலை செய்ததுபோல காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளையும் அரசு விடுதலை செய்யவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள்மீது குற்றங்கள் இருப்பின் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துங்கள். சிறைப்படுத்திவதைக்க வேண்டாம்.

அவர்களை விடுதலை செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச)

# இரத்தினக்கல் தோண்டுவதை தடுக்க பாதுகாப்பு

கொழும்பு,மே23

பலாங்கொடை, பெலிஹுலோயா பகுதியில் இரத்தினக்கல் தோண்டுவதைத் தடுப்பதற்காகப் பொலிஸாருடன் இணைந்து விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

4 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு காணியில் இரத்தினக் கற்கள் இருப்பதாகக் கிராமவாசிகள் சிலர் அறிந்து கொண்டதைத் தொடர்ந்து அங்கு கூட்டம் கூடியது.

இரத்தினக்கல் தோண்டுவதற்கான கருவிகளுடன் மக்கள் கூட்டமாக வந்ததால் பொலிஸார் தலையிட வேண்டி ஏற்பட்டது என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த காணியைச் சுற்றி பாதுகாப்பு வலையம் ஒன்றை அமைத்துள்ளோம் என்றும் அவர் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

கந்தையா இரத்தினசிங்கம் (360090884V) தேசிய அடையாள அட்டை 20.05.2012 திங்கள் மினி பஸ்ஸில் பன்றிகோட்டுப் பிள்ளையார் கோயிலடிக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:
021 3006459
கந்தையா இரத்தினசிங்கம், மே/பா, ந.கராளசிங்கம், 406, கே.கே.எஸ். வீதி, வண்ணார்பண்ணை.
(18296) (2-6-7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள் - 2010

01. கலைமுதற் தேர்வு - 2010 (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 15.06.2012 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 02.07.2012 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 11.06.2012 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
21.05.2012 (சி/303) (2-6-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
07★ 12★ 1960
விண்ணில்
23★ 05★ 2011

அமரர்
**செபஸ்தி காணிக்கைராசா**

உனை இழந்து ஓராண்டு
உருண்டோடி
விட்டதையா தினமும் எண்ணுதற்கு நீ
இங்கு இல்லையையா மாண்டு
விட்டாய் என்ற எண்ணம் எம்மில்
இல்லையையா மீண்டும் நீ
பிறப்பெடுத்து வீடு வந்து சேருமையா

அன்னாரின் ஆத்ம சாந்தி இன்று (23.05.2012) புதன்கிழமை நடைபெறுகின்றது. மதிய போசன நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்**
தேராவில், விசுவமடு, முல்லைத்தீவு
(16833) (2-7-6)

## 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 10 |
| ★ | ★ |
| 02 | 06 |
| ★ | ★ |
| 1925 | 1986 |

**திதி : 23.05.2012**

அமரர் **தம்பு கதிரவேலு**
(இளைப்பாறிய அதிபர், யா/கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)

அன்பின் பிறப்பிடமே! அறிவின் சிறப்பிடமே!
ஆண்டுகள் இருபத்தாறு ஆனாலும்
ஆறமுடியவில்லை எம்மால்
இப்புவியில் ஐயா உம்மை நாம்
இழந்த துயரை ஈடுசெய்ய
முடியாமல் தவிக்கின்றோம் இன்று வரை

நிருவத்தம்பை, ஊரிக்காடு
வல்வெட்டித்துறை (18406)(6-7-8)
**மனைவி, மக்கள். மருமக்கள் பேரப்பிள்ளைகள்**

## வீடு வாடகைக்குத் தேவை

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை மையமாக வைத்து 1km சுற்று வட்டத்தில் 3 படுக்கை அறைகளுடன் வீடு தேவை.
(18457) (6-7-8) தொடர்புகளுக்கு : 077 3626230

## சுவையான உணவுக்கு......

சுத்தமாக வீட்டில் சமைத்த சுவையான காலை, மதியம், இரவு உணவு Hotel விலையிலும் பார்க்க குறைந்த விலை யில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள். மட்டுப் படுத்தப்பட்ட அளவான ஓடர்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். அத்துடன் வைபவங்கள்/விழாக்கள் என்பவற்றுக்கும் விரும்பிய உணவு செய்து கொடுக் கப்படும். தொடர்புகளுக்கு: 077 6722145
(18456) (6-7-8)

## தரம் 3,4,5 வகுப்புக்கள்

பலவருட அனுபவம் பெற்ற பட்டதாரி ஆசிரியரினால் அதி கூடிய புள்ளிகளைப் பெறக்கூடிய வகையில் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.
T.P :077 6745833, 077 7112406
(18454)(6-7-8)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி புது வீதியிலுள்ள 2½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 7850933
(18453)(6-7-8)

## அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு

உடுவில் கிழக்கு அண்ணா சனசமூக நிலையத்தினரால் 13.04.2012 வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் இடை நிறுத்தப்பட்டு 27.05.2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் நிலைய முன்றிலில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
(18300)(6-7-8) நிர்வாகம்

## வீடு, காணி விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு, முத்துமாரி அம்மன் கோயிலடி, சாவகச்சேரியில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் 12 ½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0774654982
(18295)(2-6-7)

## விற்பனைக்கு

டிமோ பட்டா (முழு பொடி) விற்பனைக்கு உண்டு. அல்லது மாத வாடகைக்கும் கொள்வனவு செய்யலாம்.
உடன் தொடர்பு கொள்ளவும் :
075 0402302
(18291)(6-7-8)

## விற்பனைக்கு

பழைய வீட்டுக் கட்டடம் (ஜன்னல்கள், கதவுகள், கூரைகள் என்பன அடங்கிய கட்டடம்) விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 0773644276
(18299)(2-6-7)

## காணி விற்பனைக்கு

அரியாலையில் 97 பரப்பு நெற்காணி விற்பனைக் குண்டு.
விவரங்களுக்கு : 077 9589718
(18382))(2-6-7)

## Vehicles for hire (Jaffna peninsula only



Nissan car, 30 Seater Bus,
Prado Jeep, 12 Seater Van
*Tilko Jaffna City Hotels (Pvt) Limited*
#70/6 K.K.S Road, Jaffna.
Tel 021 2225969,
Mobile 0771064385, Fax 021 2227291
(சி/169) (2-6-7)

## கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 kg மேல் வளர்ச்சியடையக் கூடிய No - 1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 23.05.2012 விநியோகிக்கப்படும். விலை 80/=
றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P.No. 0776090926
(18384) (2-6-7)

## பெயர் மாற்றம்

குருக்கள் கிணற்றடி, கணேஸ்வரம், அளவெட்டியைச் சேர்ந்த இராசமணி பூபாலபிள்ளை ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து இராசமணி வவானந்தன் எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே [illegible] அறியத்தருகின்றேன்.
(18298)(2-6-7) இ.வவானந்தன்

## ஸ்ரீ சந்திரசேகரவிநாயகர் திருக்கோயில் மஹோற்சவம் - 2012

23.05.2012 புதன்கிழமை



## கொடியேற்றம்

முற்பகல் 11.00 மணிக்கு
தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்.
(18376)(6-7-8) கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

## மாபெரும் புத்தக கண்காட்சியும் விற்பனையும்

இடம்:- கேட்போர் கூடம் (Auditorium)
யாழ் மத்திய கல்லூரி
திகதி :- 21,22,23,24,25,26,27 மே 2012

நேரம் –
9.00 a.m. - 7.00 p.m.



சகலவிதமான புத்தகங்களும்
நியாயமான விலைக் கழிவுடன்
விற்பனை செய்யப்படும்

ஒழுங்கமைப்பாளர்
**ஜெயா புத்தகசாலை**
91- 99, U.G. Floor, People's Park Complex, Colombo -11. Tel: 2438227, 7400711 Fax : 2332939
(17997)

| 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|
|  |  |
| அமரர் தம்பையா கணபதிப்பிள்ளை (முன்னாள் புலோலி எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்) | கணபதிப்பிள்ளை பொன்னம்மா |
| பிறப்பு: 20.12.1930 இறப்பு: 14.05.2002 | பிறப்பு: 05.04.1924 இறப்பு: 23.05.2008 |

வையகத்தில் எம்மை வாழ்வாங்கு வாழ வைத்த எம் தெய்வங்களே!
நீங்கள் போன பாதை தெரியாது நாளும் நினைந்து ஏங்கி
வாடுகின்றோம். என்றும் உங்கள் நினைவுகள் சுமந்து நிற்கும்.

சாயி இல்லம், புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி. (சி/319) (45.6.7)
**பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் செந்தில்நடராஜா

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)



காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும், பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செந்தில் நடராஜா (ஓய்வுபெற்றதொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்) (21.05.2012) திங்கட்கிழமைஅன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க.பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் ஆறுமுகம் - அற்புதமலரின் மருமகனும் திலகவதியாரின் அன்புக் கணவரும் ஜனனி, கம்சவாகினி, தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தநடராஜா (அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதம், தில்லைநடராஜா மற்றும் சுந்தரநடராஜா (லண்டன்), திலகவதி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கோபாலன் மற்றும் புனிதவதி, மாலினி (லண்டன்), சிவகுமார், விவேகானந்தன் (நோர்வே), சிவானந்தன் (லண்டன்), முருகானந்தன் (நோர்வே), வசந்தமலர், மங்கையர்க்கரசி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம். (18451) (2-6-7)
தகவல்: **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# உலகச் சந்தையில் எரிபொருள் விலை சரிந்தால் விலையை குறைக்கலாம்

## ஆனால் அரசு அதனைச் செய்யாது என்கிறது தொழிற்சங்கம்

**எரிபொருள் விலையானது உலகச் சந்தையில் நிலவும் எரிபொருளின் விலைக்கேற்ப இங்கு தீர்மானிக்கப்படுவதில்லை.**

உலகச் சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்தால் நாட்டில் எரிபொருளின் விலையைக் குறைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பெற்றோலிய வளத்துறைத் தொழிற்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும்போதே நாட்டில் எரிபொருளுக்கான விலையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுகின்றது. எரிபொருள் விலை குறைவடையும்போது அரசினால் அதனைக் கட்டுப்பாட்டு விலைக்குள் வைத்திருக்க முடியவில்லை. எரிபொருள் விலை வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் அரசு மக்களுக்கு அதனை மானிய விலையிலோ அல்லது குறைவான விலையிலோ வழங்காமை ஏன் எனவும் அந்தச் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

எரிபொருளின் விலை ஒரு லீற்றருக்கு 8 ரூபா முதல் 10 ரூபா வரை குறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள பெற்றோலிய வளத்துறை தொழிற்சங்கம், எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற ஊழல் மோசடிகளைக் கட்டுபடுத்துவதற்குப் பதிலாக மக்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் அரசின் செயலை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. நாட்டில் எரிபொருள் விலையானது உலகச் சந்தையில் நிலவும் எரிபொருளின் விலைக்கேற்ப தீர்மானிக்கப்படுவதில்லை.

உலகச் சந்தையில் எரிபொருளை இலவசமாக வழங்கினால் கூட இலங்கையில் எரிபொருள் விலை குறைவடையப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

## சமய சந்நிதிகளில்

கோண்டாவில் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் ஜூன் மாதம்2 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

* * *

சித்தங்கேணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெற்று எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை நிறைவு பெறும். (ந)

* * *

இணுவில் கந்தசாமி கோயில் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ் வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ந)

* * *

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் (ந)

# தேவார பண்ணிசை இலவசப் பயிற்சி

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணம் சிவ தொண்டன் நிலைய ஆதரவுடன் கொழும்புத்துறை சிவ தொண்டன் நிலைய மகளிர் ஆச்சிரமத்தில் வட இலங்கை சங்கீத சபையினதும், அகில இலங்கை திருமுறை மன்றத் தினதும் பாட விதானத்துக்கு அமைவாக வாராந்தம் செவ் வாய்க்கிழமைகளில் மாலை 5 மணி முதல் இலவசத் தேவாரப் பண்ணிசை பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றது.

தாவடியூர் கலாபூஷ ணம், கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்திகளால் இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப் படுகின்றது.

இந்தப் பயிற்சி வகுப்பில் ஆண், பெண் இருபாலாரும், பெரியோர்களும் பங்குபற்றி பயன் பெறலாமென மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ண மூர்த்தி தெரிவித்துள்ளார். (ந)

# மலசலகூடத்தில் மருந்துக் களஞ்சியம்

அழகு சாதன மற்றும் ஔடத அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, விநியோகத்திற்கான பல வகையான மருந்துகள் மலசலகூடம் ஒன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கண்டி நகரத்தில் உள்ள பல்வேறு மருந்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இந்தக் களஞ்சியம் இருப்பது தெரியவந்தது என்று அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை பெரும்பான்மையான மருந்தகங்கள் உணவு மற் றும் ஔடத சட்ட திட்டங்களுக்கு அமையச் செயற்படவில்லை என்று அதிகார சபை குற்றம் சாட்டியுள்ளது.

இப்படியான மருந்தகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# அன்னையர் தின நிகழ்வு

நவாலி,மே 23

நவாலி ஊன்றுகோல் அறப் பணியகம் நடத்திய உலக அன்னையர் தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி முருகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் பணியகத்தின் தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக முதியோர் மேம்பாட்டு உதவியாளர் ஸ்பெல்மன் பாலகுமாரி கலந்து கொண்டார். இதில் தாயின் மகத்துவத்தை விளக்கும் பாடல் போட்டிகளும் மாணவர்களுக்கிடையேயான பேச்சு, கவிதை போட்டிகளும் இடம் பெற்றதுடன் அன்னையர்களுக்கு சேலைகளும் மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

(ந-100)

# மரண அறிவித்தல்



## திருமதி நடராசா இராசமலர்

சங்குவேலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி நடராசா இராசமலர் கடந்த (20.05.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் வைத்தியலிங்கம் நடராசாவின் அன்பு மனைவியும், அரியதுரை (இத்தாலி), தவமலர் (சுவிஸ்), சுகிர்தமலர் (ஓய்வுபெற்ற தாதியர்), ராஜகுலசிங்கம் (சுவிஸ்), கௌரிமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஞானமணி (இத்தாலி), சிவஞானந்தன் (சுவிஸ்), செல்வராசா (ஓய்வுபெற்ற புகையிரத களஞ்சிய பொறுப்பாளர்), தர்மகுலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், இலட்சுமணர், சுப்பிரமணியம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிளவுடியா, டனிலோ, நிரோசன், டிலக்சி, கௌமீரா, ஆதித்தன், ஆரணி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கிறிஷான், அஸ்வினி, சஞ்சீவ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2012) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கு வேலி தெற்கு,
மானிப்பாய்.

(18293) (45.8.7)

தகவல்:
பிள்ளைகள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்

தோற்றம்
19 ★ 11 ★ 1934



மறைவு
23 ★ 04 ★ 2012

## அமரர் வைரமுத்து சுந்தரமூர்த்தி

கடந்த (23.04.2012) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வைரமுத்து சுந்தரமூர்த்தி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.05.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் கல்லடி ஒழுங்கை சாவகச்சேரியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குகொண்டோருக்கும், அவரது மறைவுச் செய்தியறிந்து, பல வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி.

(14720) (45.6.7)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையம்பதியாள் துணை

## சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## 37 ஆவது ஆண்டு வைகாசி மஹோற்சவப்பெருவிழா - 2012

24.05.2012 வியாழன் கொடியேற்றம், மு.ப.10.00 மணி
26.05.2012 சனி அன்னச்சப்பறம் மாலை.7.00 மணி
28.05.2012 திங்கள் பூச்சப்பறம் மாலை 7.00 மணி
29.05.2012 செவ்வாய் வசந்தோற்சவம் மாலை 7.00 மணி
02.06.2012 சனி வேட்டைத்திருவிழா பி.ப.2.00 மணி
(ஸ்ரீ ஞானவைரவர் ஆலய முன்றலில்)
02.06.2012 சனி சப்பறத்திருவிழா மாலை 7.00 மணி
03.06.2012 ஞாயிறு தேர்த்திருவிழா மு.ப.10.00 மணி
04.06.2012 திங்கள் பூரணைத் தீர்த்தோற்சவம் மு.ப.10.00 மணி
04.06.2012 திங்கள் கொடியிறக்கம் மாலை 6.00 மணி
05.06.2012 செவ்வாய் அபிஷேகம் விசேடபூசை மு.ப.11.00 மணி
நண்பகல் மகேஸ்வரபூசை (அன்னதானம்)
05.06.2012 செவ்வாய் பூங்காவனம் மாலை 7.00 மணி
06.06.2012 புதன் பிராயசித்த அபிஷேகம் காலை.6.00 மணி
06.06.2012 புதன் வைரவர் மடை மாலை 7.00 மணி



### தினசரி உற்சவம்

காலை 8.00 மணி அபிஷேக ஆராதனை 10.30 வசந்தமண்டபூஜை 11:30 அம்பாள் வீதி உலாவரும் காட்சி மாலை 4.00 மணி சாயரட்ச பூஜை 5.30 மணி வசந்தமண்டபபூஜை, 7.00 மணி அம்பாள் வீதி உலாவரும் காட்சி தினமும் மகேஸ்வரபூசை, அன்னதானம், நடைபெறும்.

'தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்''

தில்லையம்பதி.

திருக்கோயில் பரிபாலனசபையினரும், உபயகாரர்களும்.



## 2012 இற்கான புதிய அனுமதிகள்

புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

BIT Bachelor of Information Technology

ESOFT The Leader in Professional ICT Education

**Join Srilanka's# 1**

**University of Colombo School of Computing**

உங்கள் நுழைவுக்கான வழி

3 A/L passes (Any Stream) → BIT DEGREE

Without A/Ls → FIT

கொழும்பு பல்கலைக்கழக நுழைவு, பரீட்சைப் பதிவுகள் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்

ESOFT

- Dr.Dayan & Mr.Nishan ஆகியோரின் நேரடி வழிகாட்டலின் கீழ் தற்போது யாழ் கிளை.
- 10 வருட அனுபவமிக்க ஆசிரியர் குழாம்
- மீட்டல் பயிற்சி நெறிகள் தலைமையக விரிவுரையாளர்களால் வழங்கப்படும்
- ISO தரச் சான்றிதழ் பெற்ற, இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட கணினி கல்லூரி.
- சிறந்த விரிவுரையாளர்களால் உருவாக்கப்பட்ட 30 பாடவிதானங்கள் வினாக்கொத்துக்கள் இலவசம்
- பயிற்சி முடிவில் கொழும்பு பல்கலைக்கழகச் சான்றிதழும், தொழில்வாய்ப்பை உறுதிப்படுத்தும் சான்றிதழும் வழங்கப்படும்

(சி/325)

25% OFF Discount for University,Tec Students & Goverment Employees.

SMS Send your Details. 077 309 9 308

உங்கள் பாடநெறியினை தெரிவுசெய்யும் வழிகள்

- BIT Plus programme (முழுநேரம்)
- BIT Year 1 (பகுதிநேரம்)

புதிய பிரிவு 03.06.2012

ESOFT The Leader in Professional ICT Education

ESOFT Computer Studies [Pvt] Ltd
17/1,Brown Road,Jaffna.
Hotline:077 3099308 Tel:021 2224042
Email:jaffna@esoft.lk ,Web:www.esoft.lk



## வேலைவாய்ப்பு டுபாய் / அபுதாபி



ஐக்கிய அரபு நாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களுக்கு கீழ்காணும் வெற்றிடத்திற்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

# SECURITY GUARDS

**50 Nos.** | **AED 2000**

SLBFE Charges : அரசால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டும். 1AED = 35ரூபா

**Benefits / Conditions**

தங்குமிடம் மற்றும் உள்ளுர் பிரயாண ஒழுங்கு, மருத்துவம் - கம்பனியால் ஒழுங்கு செய்யப்படும், உணவு - கம்பனியால் தரப்பட மாட்டாது, வேலை நேரம் தினமும் 9 மணித்தியாலங்கள் 1 மணித்தியால விடுகை மற்றும் 02 மணித்தியால OT. இன்சூரன்ஸ் - UAE சட்டங்களுக்கு அமைவாக கம்பனியால் வேலை செய்யும் காலங்களில் ஒழுங்குசெய்யப்படும், 02 வருட சேவை ஒப்பந்தம், இரண்டுவருடத்திற்கு ஒருமுறை திரும்பி வர விமானச் சீட்டு, கிழமையில் 01 நாள் விடுமுறை. மேலதிக நேர கொடுப்பனவு மாதமொன்றிற்கு AED 770 (நிலையான மேலதிக வேலை) ஏனைய விதிமுறைகள் UAE சட்டத்திற்கு அமைவானதாகும்.

**நேர்முகப் பரீட்சைகள்**

**2012 மே மாதம் 23, 24, 25 மற்றும் 26ம் திகதிகளில்**

**(காலை 10.00 முதல் மாலை 4.00 மணி வரை)**

நேர்முக பரீட்சைக்கு வரும்போது உங்களின் பாஸ்போட், சுயவிபரக்கோவை, கல்விச் சான்றிதழ்கள், முன்னனுபவச் சான்றிதழ்கள் மற்றும் 08 பாஸ்போட் அளவு புகைப்பட பிரதிகள் (White Background) தவறாமல் கொண்டுவரவும்.

(சி/50) AL/Advt/2491/26/12

**AL - AZAB Travels (Pvt) Ltd**
No. 67, 1st Floor, Pradeepa Mawatha, Colombo 10.
(மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால்)
L. L. No. 2491
Tele : 011 266 9995 / 0777 20 15 15 / 071 988 54 54
E-mail : alazabtravels@gmail.com


## மரண அறிவித்தல்

## சிவலிங்கம் பரமேஸ்வரி



இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பின்லாந்து, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சிவலிங்கம் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (21.05.2012) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - சிதம்பரேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சிவலிங்கம் (உதயணன்) அன்பு மனைவியும், கலாதரன் (பின்லாந்து), ஸ்ரீதரன் (அமெரிக்கா), கெங்காதரன் (அமெரிக்கா), பவானி (கனடா), பாமினி (கனடா), சுதாசினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத்தாயும், நிறஞ்சலா (பின்லாந்து), முல்லை (அமெரிக்கா), செல்வி (அமெரிக்கா), தயாளன் (கனடா), நேசானந்தன் (கனடா), நிமலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புமாமியும், நிக், கிருஷாந், துர்க்கா, சேரன், தீபன், வினோ, சினேகா, சான்றோன், சேந்தன், நவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். சிவசுப்பிரமணியம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன், புலேந்திரன் மற்றும் கதிர்காமநாதன் (கனடா), விஜயலட்சுமி (கனடா), கனகசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொறன்ரோவில் (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
சிவலிங்கம் (கணவர்) கனடா
0016 473403319
கனகசிங்கம் (சகோதரன்) கொழும்பு
077 6087799

(18452)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் பஸ் தரிப்பிடத்தினுள் ஏனைய வாகனங்களுக்குத் தடை

மன்னார்,மே 23

மன்னார் தனியார் பஸ்தரிப்பிடத்தினுள் தமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களைத் தவிர இதர வாகனங்கள் உட்பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள தாக மன்னார் தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவரான ரீ.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மன்னார் நகர சபையினர் அறிவித்தல் பலகையொன்றைக் காட்சிப் படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தினுள் ஓட்டோ உட்பட இதர வாகனங்கள் உட்பிரவேசிப்பதனால் பயணிகள் தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதோடு சில வேளைகளில் விபத்துக்களும் ஏற்பட்டன.

இதனால் மன்னார் தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கத்தினர் மன்னார் நகர சபையுடன் பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தனர்.

மேலும் பொதுமக்களிடமிருந்தும் பல்வேறு முறைப்பாடுகள் நகரசபைக்கு கிடைத்தது. இதனால் நகரசபைத் தலைவர் அதிரடி நடவடிக்கையை எடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்த நிலையில் தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கத்தைச் சேர்ந்த பஸ்களைத் தவிர ஏனைய வாகனங்கள் உட்பிரவேசிப்பதை மன்னார் நகரசபையினர் தடைசெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-12)

## சட்ட விரோதத்தால் ரூ. 25 ஆயிரம் பறந்தது

யாழ்ப்பாணம், மே 23

உடுத்துறைப் பகுதியில் சட்டவிரோதமாக அரச சாராயம் விற்பனை செய்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

பருத்தித்துறைப் பொலிஸார் மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களில் திடீரென மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது சட்ட விரோதமாக அரச சாராயத்தை உடுத்துறைப் பகுதியில் விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்த நபரை பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, வழக்கை விசாரித்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும், தவறினால் 6 மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ம-8)

## அரிசி ஆலை உரிமையாளர் வீட்டில் 10 பவுண் திருட்டு

மன்னார், மே 23

மன்னார் அரிசி ஆலை உரிமையாளர் ஒருவரின் வீட்டில் திருட்டு இடம் பெற்றுள்ளது.

மன்னார் -தாழ்வுபாடு பிரதான வீதியில் கீரி கிராமம் அமைந்துள்ளது. இங்கு அரிசி ஆலை உரிமையாளர் ஒருவரின் வீடு அமைந்துள்ளது.

நேற்று முன்தினமிரவு அரிசி ஆலை உரிமையாளரும் அவரது மனைவியும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது அதிகாலை 2 மணிக்கு முன்பாக வீட்டின் பின்புறமாக இருந்த யன்னலை உடைத்துக்கொண்டு திருடர்கள் வீட்டினுள் நுழைந்துள்ளனர். பின்னர் அங்கிருந்த அலுமாரி உள்ளிட்ட சகல இடங்களிலும் தேடியுள்ளனர். இதன் போது அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 10 பவுண் தங்க நகைகள், ஒரு லட்சம் ரூபா பணம் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். இந்த நிலையில் அதிகாலை 2 மணியில் தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது. இதனால் உறக்கம் கலைந்து எழுந்து பார்த்தபோது வீட்டிலிருந்த பொருள்கள் சிதறிக் கிடப்பது தெரிய வந்துள்ளது. பின்னரே திருட்டு இடம் பெற்றமைஅவர்களுக்கு தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க-12)

## மாணவனைக் காணவில்லை



### சிவகுமார் மயூரன்

16 வயது தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை மாணவன் மேற்படி மாணவன் கடந்த வருடம் பருத்தித்துறை கடற்கரையோரத்தில் அநாதரவாக நின்றிருந்தபோது அவரை பருத்தித்துறை நீதிமன்றம் ஊடாக பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத் தெருவில் வசிக்கும் விஜயபாலன் ஆன் றோசாரீஸ் என்பவர் தத்தெடுத்து படிப்பித்துவரும் காலத்தில் (09.02.2012) ஆம் திகதி காணாமற் போயிருந்தார் இன்றுவரை அவர் திரும்பி வரவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பருத்தித்துறை பிரதேச செயலகம்:-
0212263259
பருத்தித்துறை பிரதேச செயலகம்
நன்நடத்தைஅலுவலர்
0770872440

(16992) (14-15)

Sale! Sale!
Sale! LANKA TILES
லங்கா ரைல்ஸ் இன்
வாடிக்கையாளர் நலன் கருதி
மாபெரும் மலிவு விற்பனை
23.05.2012 தொடக்கம் 30.05.2012 வரை
இடம்: 406, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(மனோகரா தியேட்டருக்கும் யாழ்.இந்துக்கல்லூரிக்கும் இடையில்)
Sale Sale! Sale! Sale! Sale! Sale! Sale!
(C/153)

விசேட கொடுப்பனவு!



பஜாஜ்
முச்சக்கர வண்டியுடன்

MRF
டயர் 3
இலவசம்!



முந்துங்கள்!
இக் கொடுப்பனவு
2012 மே 02 முதல் 31 வரை முற்பதிவு
செய்து கொள்வனவு செய்யும்
முச்சக்கர வண்டியுடன் மட்டுமே.*

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com
(சி/151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மக்கள் வங்கியிடமிருந்து...

ஜய ஸ்ரீ Jaya Sri

மாபெரும் பரிசுப் போட்டி 2012

முன்பு உங்களுக்கு வழங்கிய பரிசுகளை விட அதிகமான பரிசுகளுடன் 2012ல் நாம் வந்துள்ளோம்.

மாதாந்த சீட்டிழுப்பில்,
- ஒரு மைக்ரோ பெண்டா கார் அல்லது ஒரு டெ∴பே டிராக்டர் (தேசிய மட்டத்தில் 01)
- 24" LED SHARP தொலைக்காட்சிப் பெட்டிகள் 48 (பிராந்திய மட்டத்தில் 02)
- 1020 மிக்ஸர் கிரைண்டர்கள்(கிளை மட்டத்தில் 03)

வருட இறுதி சீட்டிழுப்பில்,
- 03 ஆடம்பர ஹொண்டா சிவிக் கார்களை (தேசிய மட்டத்தில் 03)

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்,

மக்கள் வங்கியின் ஏதேனுமோர் சேமிப்புக் கணக்கில் (சிறுவர் சேமிப்புக் கணக்குத் தவிர்ந்த) அல்லது நடைமுறைக் கணக்கில்,

மாதம் முழுவதும் ஆகக் குறைந்தது ரூபா 10,000/-யை கணக்கு மீதியாகப் பராமரித்து மாதாந்த "ஜய ஸ்ரீ" சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறலாம். (புதிய கணக்கும் சேர்த்துக்கொள்ளப்படும்)

நீங்கள் சேமிக்கும் மேலதிக தொகையான ஒவ்வொரு10,000/- ரூபாவிற்கும் ஒவ்வொரு வெற்றி வாய்ப்பு வீதம் அதிகரிக்கும்.

2012 மார்கழி மாதம் 01ம் திகதியிலிருந்து 31ம் திகதி வரையான காலப் பகுதியில் ஆகக் குறைந்தது ரூபா 50,000/-னை கணக்கு மீதியாகப் பராமரித்து வருட இறுதியில் மாபெரும் "ஜய ஸ்ரீ" சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறலாம்.

ஜய ஸ்ரீ மாபெரும் பரிசுப் போட்டியில்
2012 பங்குனி மாத யாழ் பிராந்திய வெற்றியாளர்கள்...

24" LED SHARP தொலைக்காட்சிப்பெட்டி வெற்றியாளர்கள்

யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை -திரு. பி. பாலமுருகன்
யாழ்.பிரதான வீதிக் கிளை - செல்வி .எஸ். சுசீலாதேவி

மிக்ஸர் கிரைண்டர் வெற்றியாளர்கள்.

யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை
எஸ். நிர்மலா
ஆர். சந்திரசேகர
என். சத்தியசீலன்

காங்கேசன்துறை கிளை
எஸ்.தாமோதரன்
எஸ்.நோபேட் எமில்
ஏ. ரவீந்திரன்

யாழ்.பிரதான வீதி கிளை
ஐ.வர்ணகுலசிங்கம்
எம். குணரத்தினம்
பி. தாரணி

ஊர்காவற்றுறை கிளை
ஜி. உதயசேகர்
ஏ.ஜே. வேர்ஜினி ரொசிற்றா
ரி.சிவதர்சினி

நெல்லியடி கிளை
எஸ். சிறிகலா
எம். அன்ரன் தவரட்னர்
ஆர். ராஜாஜி

அச்சுவேலி கிளை
கே.கௌதமி
எஸ். ராமசந்திரன்
எம்.சங்கரபிள்ளை

சங்கானை கிளை
வி.முத்துலிங்கம்
எஸ்.பிரேமிலா
ரீ.செல்வராணி

சுன்னாகம் கிளை
எம்.ஞானசீலன்
இ.சுப்பிரமணியம்
எஸ்.பரமேஸ்வரி

சாவகச்சேரி கிளை
ஆர்.மீரா
எம். ரசூல்
கே.ஜெயவசந்தா

வல்வெட்டித்துறை கிளை
ரி.பத்மாவதி
எஸ்.கஸ்தூரி
இ.ஆறுமுகம்

யாழ்.பல்கலைக்கழக கிளை
ஐ.அன்னலெட்சுமி
ஆர்.வசந்தகலா
பி.துசிகரன்

யாழ்.கன்னாதிட்டி கிளை
எஸ்.சிவகுமாரன்
ஆர்.வி.சத்தியலிங்கம்
எஸ்.சிவகௌரி

பருத்தித்துறை கிளை
ஏ.குணசீலி
வி.தவராசா
ஏ.வி.சலசலவ்சன்

மாதாந்தம் வெற்றியாளர்கள் விபரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

மக்கள் வங்கியின் "ஜய ஸ்ரீ" உடன் சேமித்திடுங்கள் - மனதிலுள்ள பரிசுகளை கைகளிலே பெற்றிடுங்கள்

AAA-Brand Finance Rating, AA (lka) Fitch Rating

(C/329)

வனிதா வாசனா ஜனஜய ISA சாதாரண சேமிப்புக் கணக்கு நடைமுறைக் கணக்கு

*நிபந்தனைகளுக்குட்பட்டது

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி

www.peoplesbank.lk

# மரண அறிவித்தல்



## திருமதி செல்வரஞ்சிதராணி சிறீஸ்கந்தராஜா

புன்னாலைக்கட்டுவன் தெற்கை சேர்ந்த திருமதி செல்வரஞ்சிதராணி சிறீஸ்கந்தராஜா (20.05.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் கந்தப்பசேகரம்- அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் சிறீஸ்கந்தராஜாவின் அன்பு மனைவியும் மனோகரன் (கனடா), மனோன்மணி (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான வினோகரன், யசோதா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரேவதிதேவி, பொன்ராசா மற்றும் காலஞ்சென்ற கௌசலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வகாந்தன் (சுவிஸ்), செல்வநந்தினி (கனடா), ராஜகாந்தன் (சுவீடன்), சிறீரஜனி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் நகுலேஸ்வரி (சுவிஸ்), ரவீந்திரன் (கனடா), கிருபா (சுவீடன்), சதீஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரவீணா, அனுக்ஷா, தர்ஷன், கோபிகன், சாருகா, கிவிஷன், பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2012) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்.

(சி/330) (14-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளையும் பொன்சேகா போன்று விடுவியுங்கள்

## மார்க்ஸிச-லெனினிசக் கட்சி வலியுறுத்து

கொழும்பு,மே 23

அரசியல் பழிவாங்கலுக்காகத் தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் சிறைவைக்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய முடியுமானால் ஏன் நீண்ட - பல வருடங்களாக விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய முடியாது?

அந்தவகையில் தமது விடுதலைக்காக நீதி கோரி கடந்த 5 நாள்களாகச் சிறைகளில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவையாகும். அவர்களின் விடுதலைக் கோரிக்கையை அரசு முழுக் கவனத்தில்கொண்டு உடன் விடுதலைக்கு ஆவன செய்யவேண்டும்.

- இவ்வாறு புதிய ஜனநாயக மாக்ஸிச-லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**அமெரிக்காவின் மிரட்டலுக்கு அடி பணிந்தே இப்பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டுமென்றே பேரினவாத அடிப்படையில் இழுத்தடித்து மறுக்கப்பட்டு வருகிறது.**

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆளும் வர்க்க சக்திகளுக்கிடையிலான முரண்பாட்டின் காரணமான அரசியல் பழிவாங்கலின் அடிப்படையிலேயே தடுத்து வைக்கப்பட்டு, குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் சிறைவாசம் அனுபவித்தார். இவை ஜனநாயக மறுப்பும் அதிகாரத்தின் பழிவாங்கலுமாகும். இவை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல. இந்நிலையில், திங்களன்று ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டார்.

இவை ஜனநாயகத்தின் அடிப்படையில் அல்ல. அமெரிக்காவின் மிரட்டலுக்கு அடி பணிந்தே இப்பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டுமென்றே பேரினவாத அடிப்படையில் இழுத்தடித்து மறுக்கப்பட்டு வருகிறது.

எனவே, சட்டத்தின் பெயராலும், ஜனநாயகம் மனித உரிமையின் பெயராலும் நீண்டகாலம் சிறைகளில் விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டுமென எமது கட்சி வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

நெடுந்தீவுச் சிறுமியின் கொடூரக் கொலை வழக்கு;

# பார்த்த சாட்சியின் வாக்கு மூலம் பதிவு செய்ய மன்று உத்தரவு

யாழ்ப்பாணம், மே 23

நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட முன்னர் சிறுமியைப் பின் தொடர்ந்து, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கந்தசாமி ஜெகதீஸ்வரன் சென்றதனைத் தான் கண்ணுற்றார் என்று சாட்சி ஒருவர் தெரிவிக்கிறார். அவரது வாக்கு மூலத்தைப் பதிவு செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தவிட்டது. அத்துடன் சந்தேக நபரைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் ஜேசுதாசன் லக்சினி கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். ஜெகதீஸ்வரன் (வயது- 31) மீது அந்தக் குற்றம் சுமத்தப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சந்தேக நபரும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

**‘சிறுமி வீதியில் சென்று கொண்டிருந்த போது அவரைப் பின் தொடர்ந்து சந்தேக நபரான ஜெகதீஸ்வரன் சென்றார்.**

விசாரணையின்போது கொலை செய்யப்பட்ட சிறுமியின் தந்தையார் ‘சிறுமி வீதியில் சென்று கொண்டிருந்த போது அவரைப் பின் தொடர்ந்து சந்தேக நபரான ஜெகதீஸ்வரன் சென்றார் என்பதனைக் கண்ணுற்ற ஒருவர் அதுபற்றித் தனக்குக் கூறினார். அது பற்றி மன்று கவனம் செலுத்த வேண்டும்'' எனத் தெரிவித்தார்.

அதனையடுத்து அந்தச் சாட்சியின் பெயர் விவரங்களை நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கும்படியும் அந்த சாட்சியின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்து அதனை மன்றில் சமர்ப்பிக்கும் படியும்நெடுந்தீவுப்பொலிஸாருக்கு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (உ-4)

---

யாழ். ஹெரோயினுடன் கைதானவர்களில்

# நால்வருக்கு ரூ.95 ஆயிரம் அபராதம் ‘பேபியன்' தொடர்ந்தும் மறியலில்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வலையமைப்பு ஒன்றின் 5 பேரில் நான்கு பேர் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்கு 95 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது யாழ். நீதிமன்றம். பிரதான சந்தேக நபருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டில் யாழ். நகர்ப் பகுதியைச் சேர்ந்த 5 பேர் கடந்த மாதம் 27ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். யாழ். பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து சந்தேக நபர்களைக் கைது செய்திருந்தனர். விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் தொடர்பான வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தக் குற்றச் சாட்டில் யாழ். ஐந்து சந்தியைச் சேர்ந்த பேபியன் என அழைக்கப்படும் எஸ். கரிகரன் (வயது -26) என்பவர் பிரதான சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து அதே இடத்தைச் சேர்ந்த இரட்ணசிங்கம் வசீகரன் (வயது-24), பாலராஜா சிறிகாந் (வயது-23), இரட்ணசபாபதி பிரியந்தன் (வயது-24), சேகரன் சிறிகரன் (வயது-24) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட இவர்கள் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றைய விசாரணையில் பிரதான சந்தேக நபரான பேபியனைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. ஏனைய நால்வரும் தம் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதையடுத்து மூன்று பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்றம். பேபியன் தொடர்பான வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-4)

---

# பருத்தித்துறை நகரில் 26 வீதிகளுக்கு ‘காப்பெற்'

வடமராட்சி, மே 23

பருத்தித்துறை நகரில் உள்ள 26 வீதிகளும், 23 ஒழுங்கைகளும் முறையே ‘காப்பெற்' வீதியாகவும் தார் வீதியாகவும் மாற்றியமைப்பதற்கென நேற்று முன்தினம் நடைபெற்ற பருத்தித்துறை நகரசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சபைத்தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தலைமையில் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபைக்குச் சொந்தமான 26 வீதிகளில் ‘காப்பெற்' திட்டத்தின் கீழும், ஏனைய திட்டங்களின் கீழுமாக 9 வீதிகள் ‘கார்ப்பெற்' வீதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவற்றுக்கான செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மூன்று வீதிகள் கொங்கிறீட் சிமெந்தினால் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு வீதியான யக்கோறுளை வீதியை கொங்கிறீட் வீதியாக அமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

எஞ்சிய 14 வீதிகளும் ‘காப்பெற்' வீதியாக மாற்றம் செய்யப்படும். சபை எல்லைக்குள் உள்ள 23 ஒழுங்கைகளுக்கும் கற்கள் போடப்பட்டு தார் வீதியாக மாற்றப்படும். இனிமேல் சபை எல்லைக்குள் ஒழுங்கைகள் என்று எதுவுமே இருக்கக்கூடாது. அனைத்து வீதிகளும் ‘காப்பெற்' வீதிகளாகவும் ஒழுங்கைகள் தார் வீதிகளாகவும் இருக்க வேண்டும் என இத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-8)

---

## இந்திய வியாபாரியிடம் ரூ. ஒரு லட்சம்

புடவை விற்பனையில் ஈடுபட்டிருந்த இந்திய நபரை மூர்க்கத்தனமாகத் தாக்கிவிட்டு அவரிடமிருந்து புடவைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் நேற்று மதியம்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

சக்திவேல் ஜெகநாதன் (வயது-35) என்ற இந்தியரிடமே கொள்ளையர் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய நபரிடமிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

(உ-3)

---

# மோ. சைக்கிள் விபத்தில் காயமுற்ற இருவரில் குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், மே 23

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்று விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவரில் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று மரணமானார். மற்றையவர் தொடர்ந்தும் தீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றார்.

இந்த விபத்து மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்துக்குச் சமீபமாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் இடைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சதீஸ்கரன் (வயது-30) என்பவரே சிகிச்சை பயனளிக்காது நேற்று மரணமானார். கிளிநொச்சி இரணைமடுவைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சுதாகரன் (வயது-25) என்பவரே தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில்சிகிச்சைபெற்றுவருகிறார்.

தலைக்கவசம் இல்லாது மோட்டார் சைக்கிளில் சென்ற இவர்கள் லாண்ட்மாஸ்ரரில் மட்டை ஏற்றிக்கொண்டு சென்றபோது எதிரே மோதி விபத்துக்குள்ளாகினர். இருவரும் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

டிப்பரில் மண் ஏற்றிப் பறிக்கும் சாரதியே விபத்தில் மரணமானார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். டிப்பர் நடத்துநரே காயமடைந்த மற்றையவர்.

தலைக்கவசம் அணியாது சென்ற இவர்கள் இருவரையும் பொலிஸார் மறித்த போது, மோட்டார் சைக்கிளை நிறுத்தாது வேகமாகச் சென்ற சமயமே விபத்து நிகழ்ந்த தாகக்கூறப்படுகிறது. (ஒ-4-9)

---

## ரூ. 21 ஆயிரம் அபராதம்

மேலதிகமாக சாராயம் வைத்திருந்தமை, அதிக விலைக்கு சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டு போன்றவற்றுக்காக 7 பேருக்கு யாழ். நீதிமன்றம் 21 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம், கொக்குவில், மானிப்பாய், சுதுமலை, கோண்டாவில் பகுதிகளில் வைத்து யாழ். மதுவரி நிலையப் பரிசோதகர்களால் இனங்காணப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

சந்தேக நபர்கள் விசாரணையின்போது தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

---

# மர நிழலில் பாடசாலை: புதுக்குடியிருப்பில் அவலம்

யாழ்ப்பாணம்,மே 23

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்கள் தொடர்ந்தும் மரநிழலில் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இறுதி யுத்தத்தின் போது இந்தப் பாடசாலையும் மோசமான சேதங்களுக்கு உள்ளானது.

இடிந்து விழும் நிலையிலுள்ள பாடசாலைக் கட்டடங்களில் துப்பாக்கி ரவைகளின் துளைகள் காணப்படுகின்றன. போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்தப் பாடசாலை புனரமைக்கப்படவில்லை. தற்போதுள்ள வெப்பமான காலநிலையில் மரநிழலின் கீழேயே கற்றல் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

பாடசாலையைப் புனரமைத்து வழங்குமாறு பிரதேச மக்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரபல பாடசாலையாகிய இந்தப் பாடசாலையில் தற்போது சுமார் ஆயிரம் மாணவர்கள் கற்று வருகின்றனர். எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றியே பாடசாலை இயங்கிவருகிறது.

பாடசாலையை அண்டிய பகுதிகளில் மக்களைக் குடியமர்த்த அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும், மின்சார வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் எனவும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பாடசாலைக் கிணறு பழுதடைந்துள்ளதால் அதனைப் பயன்படுத்த முடியாதுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாம்பு மற்றும் யானைகளின் அச்சுறுத்தல் உள்ளதால் பாடசாலையைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட வேண்டும். அத்துடன் வெளிமாவட்டங்களிலிருந்து வந்து கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் தற்போது தங்கியுள்ள விடுதிக்கும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் பாடசாலை சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே போன்று மாங்குளம் ஒலுமடு அ.த.க. பாடசாலையிலும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், மே 23

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான தேசியத் தரம் வாய்ந்த அணிகள் பங்கு பற்றும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று புதன்கிழமை காலை 6.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில்இடம் பெறவுள்ளஆட்டங்களில் மோதவுள்ள அணிகள் -

காலை 6.30 மணி

* யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிஎதிர். இராணுவ கூடைப்பந்தாட்ட அணி.

காலை 8 மணி

* யாழ். பாடசாலை கூடைப்பந்தாட்ட அணிஎதிர். கடற்படை கூடைப்பந்தாட்ட அணி

காலை 9.30 மணி

* திருகோணமலை மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி எதிர் பொலிஸ் கூடைப்பந்தாட்ட அணி.

மாலை அரையிறுதியாட்டப் போட்டி இடம்றெும்.

மாலை இடம்பெறும் ஆட்டங்களுக்கு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், வடமாகாண விளையாட்டுத் துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை,யாழ். மாவமட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி எ.எவ். ஜே.ரூபசிங்கம் கலந்து கொள் ளவுள்ளனர்.

(ஙு-23)



வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட செயலகத்தின் விளையாட்டுப் பிரிவினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள்,உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலக அணியைப் படத்தில் காணலாம். (த-86)

# தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்



வலி.வடக்கு, மே 23

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**ஆண்கள்-11 வயதுப் பிரிவு**

75 100 மீற்றர்

சதீஸ் யதுசன் (அராலி சரஸ்வரி மகாவி த்தியாலயம்)

தவயோகராசா கஜயபானுஜன்(மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்)

ரஜீபன் ரஜிதன் (பண்டத்தரிப்பு சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்)

(இரண்டு போட்டிகளிலும் இவ்வீரர்கள் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளார்கள்)

உயரம் பாய்தல்

செல்வஞானம் நிரோஜன்(மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை),ஸ்ரீஸ்கந்தராசா சஜந்தன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), ரவிச் சந்திரன் சதுஷ்காந்தன் (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்).

நீளம் பாய்தல்

புண்ணியமூர்த்தி தனிஸ்ரன் (சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்),குணதீபன் செந்தாளன்(சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம்), குணபாலன் துஷ்யந்தன் (ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்).

**13 வயதுப் பிரிவு**

**100 மீற்றர் ஓட்டம்**

சிவகுமார் கபில்சன் (மல்லாகம் மகாவித்தியாலயம்), சிவநீதன் துவாரகன்(வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), அருட்செல்வன் தனுசன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**200 மீற்றர் ஓட்டம்**

சிவநீதன் துவாரகன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி),குலசபாநாதன் தயாளன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), நித்தியானந்தம் தரஞ்சன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

**உயரம் பாய்தல்**

விஜயகுமார் வேணுஜன் (நவாலி மகாவித்தியாலம்), சிவநீதன் துவாரகன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி),ஆர் யதுசன் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

**நீளம் பாய்தல்**

சிவகுமார் ஹம்சிகன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி),சிவகுமார் கபில்சன் (மல்லாகம் மகாவித்தியாலயம், வி.தனுஜன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**4x100 மீற்றல் அஞ்சல் ஓட்டம்**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி,மானிப்பப் இந்துக் கல்லூரி. (த-86)

## வெற்றி பெற்ற அணிகள்

வலி.வடக்கு, மே 23

வலிகாமம் கல்வி வலயம் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான பெருவிளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**எல்லே (19 வயதுப் பிரிவு)**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,அளவெட்டி அருணோதயக் கல்லூரி,தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**கபடி (15 வயதுப் பிரிவு)**

இணுவில் மத்திய கல்லூரி,இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி,பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

**கபடி (19 வயதுப் பிரிவு)**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி,இணுவில் மத்திய கல்லூரி,வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

**உதைபந்தாட்டம் (15 வயதுப் பிரிவு)**

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்,அளவெட்டி அருணோதயக் கல்லூரி,இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

மானிப்பாய் இந்துக் கல்லூரி,வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்,இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி,மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**கரப்பந்தாட்டம் 15 வயதுப் பிரிவு**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி. இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**கூடைப்பந்தாட்டம் (19 வயதுப் பிரிவு)**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,சண்டிலிப்பாய் இந்தக் கல்லூரி.

**மேசைப்பந்தாட்டம் 15 வயதுப் பிரிவு**

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, தெல்லிப்ழை யூனியன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி. (த-86)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட அராலி சரஸ்வதி மகாவித்தியாலய வீராங்கனைகள் பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுநர்களுடன். (த-23)

## வவுனியாவில் விளையாட்டு விழா

கடந்த சனிக்கிழமை வவுனியாவில் வடக்கு கிழக்கு ஆகிய மாகாணங்களில் உள்ள விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றிய மாபெரும் விளையாட்டு விழா ஒன்று இடம் பெற்றுளது.

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்த இவ் விளையாட்டு விழா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றளது.

காலை 7 மணிக்கு ஆரம்பமான விளையாட்டு விழா விளையாட்டுக்கழகத்தின் தலைவர் ப.சதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

105 மையில் சைக்கிள் ஓட்டப் போட்டியை வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் ஆரம்பித்து வைத்ததை தொடர்ந்து நிகழ்வுகள் மாலை வரை இடம் பெற்றன. (த-421)


## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் யாழ் மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையே நடத்திவரும் அமரர் ஜெயரெட்ண சிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக 9 ஆவது ஆண்டாக நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும் படி வேண்டப் பட்டுள்ளது. இலக்கம் 29 ஆஸ்பத்திரி வீதியில் இதற் கான விண்ணப்பங்களை பெற முடியும் எனவும் 29 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் படியும் 31 ஆம் திகதி போட்டிக்கான நிரல் ஒழுங்கு நடைபெறவுள்ளதாகவும்யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தின் செயலா ளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்திடம் வீழ்ந்த தீவுகள்


அலஸ்ரெயர் குக்


கமர்ரோச்

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்கு மிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் அணி விதித்த இலக்கை அந்த அணி 5 இலக்குகளை இழந்து அடைந்தது.

191 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நான்காம் நாள் ஆட்டமுடிவில் 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்திருந்தது. இந்த நிலையில் ஐந்தாவது நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி மேலதிகமாக 19 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் ஜொனதன் ட்ரொட்டின் இலக்கை இழந்தது. தொடர்ந்து களமிறங்கிய கெவின் பீற்றர்சன் அதிரடியாக ஆட முற்பட்ட வேளையில் ஆட்டமிழந்தார். இதன்போது இங்கிலாந்து அணி 4 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

மேலதிகமாக 134 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் இணைசேர்ந்த அலஸ்ரெயர் குக், இயன் பெல் இருவரும் மிகவும் சிறப்பாக ஆடி இங்கிலாந்து அணியை மீட்டனர். இருவரும் ஐந்தாவது இலக்குக்காக 132 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

வெற்றி பெற மேலதிகமாக 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த அலஸ்ரெயர் குக் ஆட்டமிழந்த போதிலும், வெற்றி ஓட்டத்தை இயன் பெல் அடித்து இங்கிலாந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அலஸ்ரெயர் குக் 79 ஓட்டங்களையும், இயன் பெல் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணியின் முதல் 3 இலக்குகளையும் கைப்பற்றி கடுமையான அழுத்தத்தை வழங்கிய கமர் ரோச் 3 இலக்குகளை கைப்பற்றினார்.

இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 243 ஓட்டங்களையும், இங்கிலாந்து அணி பதிலளித்தாடி 398 ஓட்டங்களையும் பெற்றன. மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 345 ஓட்டங்களைப் பெற்று 191 ஓட்டங்களை இங்கிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக வழங்கியிருந்தது.

ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணி சார்பாக ஆட்டத்தில் 11 இலக்குகளைக் கைப்பற்றிய புரோட் தெரிவானார்.

(5)

# இறுதிக்குள் கொல்கத்தா





டெல்லி டேர்டெவில்சை வீழ்த்தி ஐபி.எல்.வரலாற்றில் முதன்முறையாக இறுதிக்குள் நுழைந்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ். ஐ.பி.எல். போட்டிகளின் பிளே- ஓப் ஆட்டம் நேற்று புனே சகாரா மைதானத்தில் நடைபெற்றது. ஐ.பி.எல். லீக் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களையும் கைப்பற்றியிருந்த டெல்லிடேர்டெவில்ஸ் கொல்கத்தா அணிகள் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான மைக்கலமும், காம்பீரும் அபாரமாக ஆடினர். காம்பீர் 16 பந்துகளில் 32 ஓட்டங்களையும், மைக்கலம் 31 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டம் இழந்தனர். ஜக் கலிசும் தன் பங்குக்கு 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். சகல துறை வீரர் சஹீப் அல்ஹசன் ஒரு ஓட்டத்துடன் ஏமாற்றினார். பின்னர் வந்த யூசுப் பதானும், சுக்லாவும் இணைந்து டெல்லியின் பந்து வீச்சை சுக்குநூறாக்கினர். இவர்கள் இருவரும் அதிரடியாக ஆட கொல்கத்தாவின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது. பதான் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும், சுக்லா ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் குவிக்க 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் கொல்கத்தா அணி 162 ஓட்டங்களை எடுத்து வெற்றி இலக்கை [illegible].

பலமான துடுப்பாட்ட [illegible] கொண்ட டெல்லி அணி இந்த இலக்கை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. கொல்கத்தா பந்து வீச்சாளர்கள் அதற்கு இடம்கொடுப்பதாக இல்லை. எப்போதும் எதிரணியின் பந்துகளை சிக்ஸருக்குப் பறக்கவிடும் அதிரடி வீரரான சேவாக்கும் வோர்ணரும் நேற்று விரைவாகவே ஆட்டமிழந்துவிட்டனர். சேவாக் 10 ஓட்டங்களுடனும், வோர்ணர் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அதன்பின்னர் ஓஜாவும் மஹேலவும் இணைந்து அணிக்கு புத்துயிர் ஊட்ட முற்பட்டனர். இருவரினதும் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் டெல்லி வெற்றிபெற்றுவிடும் என எண்ணினர். ஆனால் ஓஜாவும் (28), மஹேலவும் (40) ஆட்டமிழக்க நிலைமை தலைகீழானது. பின்னர் வேணுகோபால் (13), மேகி (14), ரெய்லர் (11) மோர்கல் (0) என்று அடுத்தடுத்து வெளியேற வெற்றி கொல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தது. இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களை எடுத்தது. இதனால் 18 ஓட்டங்களால் கொல்கத்தா வெற்றியீட்டியது. பந்து வீச்சில் சுனில்நரேனும், கலிசும் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர். இந்த வெற்றி மூலம் [illegible] இறுதிக்குள் கொல்கத்தா அணி நுழைந்தது. ஆட்ட நாயகனாக யூசுப் பதான் தெரிவானார். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்ச்சைகளுடன் ஐ.பி.எல். சில்மிஷ வீரர்கள் சிக்கினர்

மும்பை 'ஹோட்டலில்' நடந்த விருந்து பசாரத்தில், போதைப் பொருள்கள் பயன் படுத்தியதாக ஐ.பி.எல்., புனே வாரியர்ஸ் அணி வீரர்கள் ராகுல் சர்மா, ரிம் பார்னல் உட்பட 94 பேர் சிக்கியுள்ளனர்.

ஐந்தாவது ஐ.பி.எல்., தொடருக்கும் சர்ச்சை களுக்கும் பஞ்சமே இல்லை. வீரர்கள் சூதாட் டம், ஷாருக்கானுக்கு தடை, செக்ஸ் புகாரில் ஆஸ்திரேலிய வீரர் லுக் கைது வரிசையில், இப்போது போதை மருந்து பயன்படுத்திய சிக்கலும் சேர்ந்து கொண்டுள்ளது.

மும்பையிலுள்ள ஆக்வுட் 'ஹோட்ட லில் பார்ட்டிக்கு' ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது. இதில் புனே வாரியர்ஸ் அணியின் ராகுல் சர்மா (இந்தியா), ரிம் பார்னல் (தென்னாபிரிக்கா) மற்றும் முக்கிய பிர முகர்கள், அழகிகள் பங்கேற்றனர். இதில் போதை மருந்து பயன்படுத்தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து பொலிஸார் மேற் கொண்ட அதிரடி நடவடிக்கையில் 2 கிரிக் கெட் வீரர்கள் உட்பட 56 ஆண்கள், 38 பெண்களை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். இவர்களது ரத்தம், சிறுநீர் மாதிரிகள் சோதனைக்கு எடுக் கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர். விருந்துக்கு ஏற்பாடு செய்த 'ஹோட்டல்' இயக்குநர் விஷாய் ஹண்டா மீது போதை மருந்து பயன்படுத்துதல், தடுத்தல் சட்டத் தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் அத்தியட்சகர் விஸ்வாஸ் படேல் கூறுகையில், 110 கிராம் எடை யுள்ள கோகைன், எஸ்டசி மற்றும் சாரஸ் என்ற போதைப் பொருள்கள் பிடிபட்டன. இதில் சிக்கியவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது, என்றார்.

**எதுவும் தெரியாது**

சம்பவம் குறித்து தென்னாபிரிக்க வீரர் பார்னல் கூறியதாவது:

கடந்த தொடரின் போது அறிமுகமான நண்பர் ஒருவரின், பிறந்த நாள் விருந் துக்காக நானும், ராகுல் சர்மாவும் இரவு 7 மணியளவில் அங்கு சென்றோம். போதைப் பொருள்கள் விநியோகம் செய்வது, பெரிய ளவில் விருந்துபசாரம் நடப்பது எங்களுக்கு தெரியாது. 'ஹோட்டலின்' மொட்டை மாடியில் தான் விருந்துபசாரம் நடந்தது.

திடீரென பொலிஸார் வந்து சோதனை செய்தனர். விருந்துபசாரத்தில் நாங்கள் மது அருந்தவில்லை. புகை பிடிக்கவில்லை. நடனம் ஆடினோம். இதில் குற்றம் இருப் பதாகத் தெரியவில்லை. இதனால் தான் பொலிஸாருடன் செல்லும் போது முகத்தை மறைக்கவில்லை. அப்படி செய்திருந்தால், ஏதோ தவறு செய்தது போல் ஆகிவிடும்.

தவறான நேரத்தில், தவறான இடத்தில் இருந்தது தான் தவறு. இது துரதிருஷ் டவசமானது. இந்த விடயத்தில் அணி நிர்வாகம் எங்களுக்கு துணையாக உள்ளது, இவ்வாறு பார்னல் கூறினார்.

**கிரிக்கெட்டை விட்டு விலகுவேன்**

இது குறித்து, ராகுல் சர்மா கூறுகையில், நான் ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்தவன். எனது வாழ்க்கையில் 'பீர்' கூட குடித்தது இல்லை. இந்த நிலையில், இது போன்ற விருந்துபசாரத்தில் நான் பங்கேற்கிறேன் என்று, எப்படி செய்திகள் வெளியாகின்றன என்றே தெரியவில்லை. பிறந்தநாள் விருந்து என்ற அழைப்பில்தான் நானும், பார்னலும் சென்றோம். அடுத்த அரைமணி நேரத்தில் என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

பொலிஸாரிடம் கேட்டபோது, தேடுதல் நடப்பதாக கூறினர். நடந்தது அனைத் தையும் அணி நிர்வாகத்திடம் கூறினேன். சோதனை முடிவு வந்த பின் உண்மை தெரியும். நான் போதைப்பொருள் பயன்படுத்தினேன் என்று தெரிந்தால், கிரிக்கெட்டை விட்டே விலகுகிறேன், என்றார். (5)

## வீழ்ந்தார் நடப்புச் சம்பியன் வென்றார் நடால்



ரோமில் இடம்பெற்றுவந்த ரோம் மாஸ் டர்ஸ் ரெனிஸ் தொடரில் நடப்பு சம்பியனும், உலகின் முதல்நிலை வீரருமான நொவக் ஜொக்கோவிச்சைத் தோற்கடித்து ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். களிமண் தரையில் இடம்பெறும் இந்தத் தொட ரில் ரபேல் நடால் ஓரளவு இலகுவான வெற்றி யைப் பெற்றுக் கொண்டார்.

இறுதிப் போட்டியில் மழை குறுக்கீடுகள் காணப்பட்ட போதிலும், ரபேல் நடால் 7-5, 6-3 என்ற கணக்கில் வெற்றியைப் பெற்றுக் கொண்டார். கடந்த வருடம் இடம்பெற்ற ரோம் மாஸ்டர்ஸ் தொடரில் நொவக் ஜொக்கோவிச், ரபேல் நடாலைத் தோற்கடித்திருந்த நிலையில் அதற்குப் பழிவாங்கும் போட்டியாக இந்த வருட இறுதிப் போட்டி அமைந்திருந்தது.

வெற்றியின் பின்னர் கருத்துத் தெரிவித்த ரபேல் நடால், ஒரு செட்டையும் இழக்காமல் இந்தச் சம்பியன் பட்டத்தை வென்றது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும், உலகின் முதல் நிலை வீரர்கள் பலரை இந்த வாரத்தில் எதிர்த்து விளையாட வேண்டிக் காணப்பட்டதாகவும், அதன் பின்னர் சம்பியன் பட்டத்தை வெல்வது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதை அடுத்து ரபேல் நடால் - ரெனிஸ் தரவரிசைப் பட்டியலில் மீண்டும் இரண்டாமிடத்திற்கு முன்னேறினார். கடந்த வாரமே ரபேல் நடாலை முந்திக் கொண்டு ரொஜர் பெடரர் இரண்டாமிடத்திற்கு முன்னேறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரோம் மாஸ்டர்ஸின் பெண்கள் தனிநபர் போட்டியில் தனது சம்பியன் பட்டத்தை ரஷ்யாவின் மரியா ஷரபோவா மீண்டும் கைப்பற்றிக் கொண்டார். சீனாவின் லீ நா இனை அவர் 4-6, 6-4, 7-6 என்ற கடுமையான போட்டிக்குப் பின்னர் தோற்கடித்தே மரியா ஷரபோவா இந்தச் சம்பியன் பட்டத்தை வென்றார்.

(5)

## கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவரை கை கழுவிய கிரிக்கெட் சபை

ஐ.பி.எல் 5 ஆவது தொடரின் எஞ்சிய லாபத் தொகையை முன்னாள் கிரிக்கெட் வீரர்களுக்கு பகிர்ந்தளிக்கும் பணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ) நேற்று முதல் தொடங்கியிருக்கிறது. ஆனால் இந்த வீரர்களின் பட்டியலில் உலகக் கிண்ணத்தை இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுத்த கபில்தேவ் மற்றும் முன்னாள் அணித்தலைவர் அசா ருதீன் ஆகியோர் இடம்பெறவில்லை.


கபில்தேவ், 1983 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணிக்கு கிண்ணத்தை முதன்முறையாக பெற்றுக் கொடுத்தவர். அசாருதீன், நாட்டுக் காக 99 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி யவரும் இந்தியாவின் மிகச் சிறந்த டெஸ்ட் அணித்தலைவர்களில் ஒருவரும் ஆவார்.

இவர்கள் இருவரையும் பல காரணங் களுக்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை புறக்கணித்திருக்கிறது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு எதிராக இந்தியன் கிரிக்கெட் லீக்கை(ஐ.சி.எல்)முன்னிறுத்தியவர். இதனால் கிரிக்கெட் சபை கபில்தேவை மன்னிப்பதாகத் தெரியவில்லை.

இந்த லாபத்தை பகிர்ந்து கொள்ளும் திட்டத்தின் கீழ் மொத்தம் 160 உள்நாட்டு வீரர்களுக்கு ரூ.70 கோடி வழங்கப்பட உள்ளது.

(5)

வெளிவந்துவிட்டது
பொது நிதி முகாமைத்துவம்
by.A.கலைச்செல்வன்
கணக்காளர் சேவை, நிர்வாக சேவை, கணக்காய்வாளர் சேவை போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் நூல்
01.01.2012 இல் இருந்து நடைமுறைக்கு வந்துவிட்டது
கிடைக்குமிடம்-
பூபாலசிங்கம் புத்தகசாலை



## சில்மிஷம் செய்யவில்லை ஆனால் செய்தேன்

அமெரிக்க பெண்ணிடம் சில்மிஷம் செய்யவில்லை என்று முதலில் மறுத்த ஐ.பி.எல். வீரர் லுக், இப்போது அதை ஒப்புக்கொண்டார். இந்த விவகாரத்தில் பெங்களூர் வீரர் அப்பன்னாவுக்கும் தொடர்பு இருப்பது உறுதியாகியுள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரில் பெங்களூர் அணிக்காக விளையாடியவர் ஆஸ்திரேலியாவின் லுக். டெல்லி, ஐந்து நட்சத்திர 'ஹோட்டலில்' நடந்த விருந்துபசாரத்தில், அமெரிக்க பெண் ஜோகல் ஹமித்திடம் தவறாக நடக்க முயற்சித்து பிணை பெற்றார்.

முதலில் இந்தப் புகாரை மறுத்த லுக், பொலிஸார் தொடர்ந்து நடத்திய விசாரணையில், தான் செய்தது தவறு என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால் லுக் அல்லது அவரது சட்டத்தரணிகள் யாரும் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டனர்.

இதனிடையே, சம்பவம் நடந்த போது, பொலிஸிடம் கொடுத்த புகாரை திரும்பப் பெறுமாறு, ஒல்லியான இந்திய வீரர் ஒருவர் தன்னை மிரட்டியதாக ஜோகல் தெரிவித்திருந்தார். இது யார் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

**அப்பன்னாவுக்கு தொடர்பு**

'ஹோட்டலின்' சி.சி.டி.வி., காட்சிகளை பொலிஸார் ஆராய்ந்த போது, சம்பவம் நடந்த சில மணி நேரம் கழித்து, லுக்குடன், மேலும் இருவர், ஜோகலின் அறைக்கு செல்வது தெரியவந்தது. இதில் ஒருவர் 'ஹோட்டலின்' பாதுகாவலர். மற்றொருவர், பெங்களூர் அணியின் சுழற் பந்து வீச்சாளர் அப்பன்னா. இவர், ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக 7 ஆட்டத்தில் பங்கேற்று, 6 இலக்குகளை வீழ்த்தி இருந்தார்.

இவர் தான், ஜோகலிடம் வழக்கை வாபஸ் பெறுமாறு மிரட்டினாராம். இதையடுத்து பொலிஸார் அப்பன்னாவையும் வழக்கில் சேர்க்க முயற்சித்து வருகின்றனர். பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறுகையில், வீடியோ பதிவில் இருப்பது அப்பன்னா தான். அவரிடம் இதுகுறித்து பேசினோம். இன்னும் முறையாக விசாரிக்கவில்லை, என்றார். (5)

Earn a UK Degree
@ IIS CITY CAMPUS

edexcel
HND
in
COMPUTING
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
BUSINESS MANAGEMENT
புதிய பிரிவு ஆரம்பம் : 10.06.2012 காலை 10.00 மணி
வார, வாரஇறுதி நாள் பிரிவுகளுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
மேலதிக விபரங்களுக்கு :- 021 4900 900
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


மேலோர்
கெடினும்
அவரது உயர்ந்த
பண்புகள்
கெடாது.
-லாங்பெல்லோ-

# புதன் பொய்கை A

உதயன் 23 மே 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# மனோசக்தியே மாபெரும் சக்தி

■ மனோ



"மெய்வருத்தம், உழைப்பு, குறைவாக இருந்தாலும் மிகப் பெரிய பயனைப் பெறுவதற்கு ஏதேனும் சூட்சுமம் இருக் கிறதா? அந்த அறிவுதான் நம்மை உயர்த் தும். அந்த அறிவுதான் நமக்கு ஆனந் தத்தைத் தரும்.

மகிழ்ச்சியைப் பெறுதல் மட்டுமே மனித வாழ்க்கையில், செயல்பாடுகளின் இரகசியமாக இருக்கிறது. இது மாறாத உண்மை. எத்தனையோ வழிமுறைகளைப் பின்பற்றினாலும் மனிதர்கள் நினைத்ததை நினைத்தவாறே அடைகிற போது தான் இந்த ஆனந்தம் உண்டாகிறது.

நினைத்ததை நினைத்தவாறே அடைவதற்கு முயற்சி, உழைப்பு, செயல் என்பதையே வழிமுறைகளாக உலகம் உபதேசித்து வருகின்றது. ஏனென்றால் இந்தப் பிரபஞ்சத்தின் இயற்கை நியதி அல்லது விதி. "செயல் விளைவு" "கர்மம்-பலன்" "Cause and effect"

செயல் அல்லாமல் விளைவுகள் இல்லை என்பதைப் பாமரனும் கூட ஏற்றுக் கொள்ளுவான். இதனால் தான் இதுவரை 'கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை" (There is No Substitute for Hard Work) என்கிற வாசகத்தைத் தலைமுறை தலைமுறையாக பின்பற்றி வருகின்றார்கள். ஏனென்றால் உழைப்பு என்பது செயல். செயல் இருந்தால் நிச்சயம் விளைவு உண்டு. விளைவு இல்லாத செயலே இல்லை. ஒரு வேளை விளைவுகள் செயலின் தன்மையைப் பொறுத்துத் தாமதமாகக் கிடைக்கலாம்.

இந்தப் பேருண்மையை அடிப்படையாகக் கொண்டதனால் தான் பகவத் கீதையைப் படைத்த பகவான் வியாசரும் கீதையின் போதனையாக செயலைச் செய் பலனை எதிர்பாராதே என்ற போதும் நீங்கள் பலனை எதிர்பார்க்காமல் இருந்தாலும் பிரபஞ்ச நியதிப்படி பலன் நிச்சயம் கிடைத்தே தீரும். இந்த உண்மையோடு கூட இதனோடு இணைந்த மற்றொரு நுட்பத்தைப் பார்க்கவும் தவறி விடுகிறார்கள். பெரும்பான்மையானவர்கள்.

'பலன்' என்பது செயலைச் செய்து விட்ட பின் எதிர்காலத்தில் விளையப் போகிற பயன். செயலைச் செய்யக்கூடிய நிகழ்காலத்தில் உன் நினைவுகளில் கவனத்தைக் குவிக்காமல் எதிர்காலப் பலனில் உன் சிந்தனையைச் செலுத்தினால் நிகழ்காலச் செயல் செம்மையாக இல்லாதொழியும். செயல் செம்மையாக இல்லையென்றால் செயலுக்கேற்ற விளைவும் சரியானதாக, நிறைவைத் தரக்கூடியதாக இருக்காதல்லவா? நிகழ்காலத்தில் நினைப்பைக் குவியுங்கள். நிகழ்காலத்தில் வாழப் பழகுங்கள்.

மற்றுமொரு நுட்பம். செயலைச் செய்தவர்கள் பலனைப் பாராதிருந்தாலும் பலன் அவர்களுக்கல்லாமல் வேறொருவருக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. ஒரு வேளை உலகியல் செயல்பாடுகளில் அதர்மத்தைக் கைக்கொள்ளுபவர்கள், நியாயத்தைப் புறக்கணிப்பவர்கள் வேண்டுமானால் ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய பலனைத் தட்டிப் பறித்துச் செல்லுகிற செயலைச் செய்யலாம். அங்கேயும் அந்த மனிதர்கள் நியாயமற்ற, தட்டிப்பறித்த செயலுக்கான விளைவை அனுபவிக்க வேண்டி வரும்.

பெரும்பாலும் எல்லா மனிதர்களுமே உலகுக்குத் தெரிகிற வகையில், உடல் என்கிற கருவியைப் பயன்படுத்திச் செய்கின்ற செயலைத் தான் செயல் என்று எண்ணிக் கொண்டு மன மயக்கத்திலிருக்கின்றார்கள். இதனால் தான் மனிதர்கள் தங்களின் வெளிப்புற நடவடிக்கைகளைப் பார்ப்பதற்குக் குறையில்லாத, யோக்கியமான, போற்றத் தகுந்த, நியாயமான செயல்பாடுகளாக அமைத்துக் கொள்கிறார்கள். அதற்கான பலனை நல்லதாக அனுபவிக்கின்றார்கள்.

ஆனால் மனித உடலில் மனமும் ஒரு கருவியே. மனம் செய்கிற செயல் சிந்தித்தல், சிந்திக்கிற, நினைக்கிற, எண்ணுகிற செயலுக்கேற்ற விளைவுகளை அந்தந்த மனிதர்கள் நிச்சயமாகப் பெற்றே தீர வேண்டும். ஆகவே புறச் செயல்களைவிட அக எண்ணம் (Intention) மிக முக்கியமானது.

புற உலகில் நல்லவர்களாகக் காணப்படுகிறவர்கள் கூட துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவிப்பதற்கு இதுவே, முழு முதற் காரணம். ஆனால் இந்த உலகம் இதைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்காமல் இந்த நல்லவருக்கா இத்தனை சோதனைகள்? கடவுள் இரக்கமே இல்லாதவர் இதயமே இல்லாதவர் என்று பலவாறாகப் பேசிக் கொண்டு செல்கிறது.

'செயல்-விளைவு' மாறாத தத்துவம். மகேசனே எண்ணினாலும் மாற்றமுடியாத உண்மை.இந்தச் செயல்-விளைவு தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த வள்ளுவரின் இந்தத் திருக்குறளைச் சற்று சிந்தித்துப் பார்ப்போமா!

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்." குறள் 619

வள்ளுவர் "கூலி" என்கிற சொல்லை ஏன் இந்த இடத்தில் பயன்படுத்தினார் என்பதைக் குறித்து வினா எழுப்பினால், செயலுக்கேற்ற, முயற்சிக்கேற்ற, உடல் உழைப்புக்கேற்ற பலன், குறைந்த பட்சம் "கூலி" என்கிற பலனாவது நிச்சயம் கிடைக்கும். இது தெய்வ உதவி இல்லையென்றாலும் தெய்வ ஏற்பாட்டின்படி நிச்சயம் நிகழும்.

மெய்வருந்தக் கூலி பெறுவதை விட மனிதர்கள் மகத்தான பெரிய பயன்களைப் பெறத்தானே ஆசைப்படுகிறார்கள். அது தானே நமக்கும் வேண்டும்.

மெய்வருத்தம், உழைப்பு, குறைவாக இருந்தாலும் மிகப் பெரிய பலனைப் பெறுவதற்கு ஏதேனும் சூட்சுமம் இருக்கிறதா? அந்த அறிவு தான் நம்மை உயர்த்தும். அந்த அறிவு தான் நமக்கு ஆனந்தத்தைத் தரும்.

எந்த அறிவை அறிந்து கொண்டால் அது எல்லாவற்றையும் நமக்குப் பெற்றுத் தருமோ, அந்த அறிவை விட்டு விட்டு மற்ற எல்லா அறிவையும் பெற பெரு முயற்சி செய்து மனம் தளர்ந்து மனிதர்கள் மாண்டு போகின்றார்கள்.

மனிதன் என்ற சொல்லே 'மனம்' உடையவன் என்பதனால் தான் உருவாகி வந்திருக்கிறது. மனம் உடைய மனிதன் மனதால் இயக்கப்படுகிறான். மனதால் இயக்கப்படுகின்றவன் மனதை இயக்கத் தெரிந்து கொண்டால் தான் மாமனிதனாக மாற முடியும்.

மனிதர்கள் தங்களுக்குள்ளே உள்ள மனதின் இயக்கம் பற்றிச் சிந்திக்கவோ, அறிந்து கொள்ளவோ ஆசைப்படாமல் தனக்கு வெளியே புறத்தே உள்ள பொருள்களைப் பற்றியே புலனாய்வு செய்து கொண்டிருக்கிறான்.

புண்ணிய பூமியில் நமது பாரத மணித்திரு நாட்டில் வாழ்ந்த நம் முன்னோர்களான ரிஷிகளும், யோகிகளும், ஞானிகளும், தவசீலர்களும் போதித்த ஆன்மிக அறிவை அறவேவிட்டு விட்டு மேலை நாட்டு மனிதர்களுக்கு அடிமைகளாய் இருந்து அவர்களின் நாகரிகங்களைப் பின்பற்றி, நலம் விளைவிக்காத புறக் கல்வி மற்றும் அதனால் புரியும் சாதனைகளையே பெரிதாக எண்ணி நம் வாழ்க்கையை மண்ணில் புதைத்து விடுகிறோம். இது காலத்தின் கோலம்.

கிரேக்கத்தின் தத்துவஞானி சாக்ரடீஸ் இந்திய சித்தர் திருமூலர் வரை சொன்னது. *"உன்னையே நீ அறிவாய்"*

*தன்னை அறிய தனக்கொரு கேடில்லை*
*தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்*
*தன்னை அறியும் அறிவை அறிந்த பின்*
*தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே.*
(திருமூலர் திருமந்திரம்)

நீ உன்னை அறி. நீ உன் உடலா? நீ உன் உடலுள் உயிராய் விளங்கும் ஆன்மாவா? அல்லது ஆன்மா இயங்கும் போது விளங்கும் மனமா? நீ யார்? நீ எது? சிந்திப்பாயாக. நீ உன் உடலல்ல என்பது உனக்கு உறுதியாகத் தெரியும். நீ, உன் ஆன்மா என்பதையும் சிந்திக்கும் போது ஏற்றுக் கொள்வாய்.

இந்த நீ, ஆன்மாவாகிய நீ, இயக்கத்தினால் மனம் ஆகி, மன இயக்கத்தால் உடல் இயங்கி, இந்த உலகத்தோடு தொடர்பு உண்டாக்கப்பட்டு வாழ்க்கை நடைபெறுகிறது. இந்த வாழ்க்கைக்குக் காரணமான மனம், ஆன்மா பற்றியும் அதன் இயக்கம் பற்றியும் அறிந்து கொள்வதே மிகப் பெரிய ஞானம்.

மனம். அதன் இயக்கம் என்பது மனத்தின் உட்பிரிவுகளான அந்தக் கரணங்களின் இயக்கம் ஆகும். அவைகள் உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

உள்ளம்- பஞ்ச பூதங்களில் ஒன்றாய் ஆகாயத்தைப் போல எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கி எல்லாவற்றிலும் நிறைந்து விளங்குவது போல எதிலும் பற்றாமல் இருப்பது உள்ளம்.

மனம்- ஆகாயம் அசைந்தால் காற்றாவது போல சலனமுடைய மனம், சிந்திக்கும், எண்ணும், நினைக்கும்.

புத்தி-காற்று திண்மை பெற்று நெருப்பாவது போல புத்தி, மன எண்ணங்களுக்கு எல்லாம் உருவம் உண்டாக்கும் ஆற்றல் பெற்றது.

சித்தம்- நெருப்பிலிருந்து நீர் உண்டாவது இரசாயனம். நெருப்பை விடத் திண்மையானது. ஒன்றையொன்று இணைக்கும். சித்தம் எண்ணங்களைப் பதிய வைக்கும்.

அகங்காரம்-நீர் திணிவு பெற்று நிலமாவது போல கடினமானதும் இறுக்கமானதும் அகங்காரம். செயல்படுத்தும் தன்மை வாய்ந்தது. உடலைச் செயல்வழி இயக்கும்.


ஒட்டுமொத்தமாக மனத்தின் இந்தச் செயல்பாடுகள் தான் எண்ணுதல், நினைத்தல், சிந்தித்தல்.


மனிதர்கள் இதுவரை புவியீர்ப்பு சக்தியையும், மின் சக்தியையும், அணு சக்தியையும், ஏனைய இயற்கை சக்திகளையும் அங்கீகரித்தவர்கள். மனித மனத்தில் உருவாகும் எண்ணத்தைச் சக்தியாகக் கற்பனை கூட செய்து பார்க்கவில்லை.


மனித மனத்தில் உருவாகும் எண்ணம் ஒரு சக்தி. அது தான் மன சக்தி. மனசக்தி தான் மாபெரும் சக்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய சிற்பங்கள்







பாவனையின் பின் வீசப்படும் பொலித்தீன் பைகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் பொருட்டு அவற்றைப் பயன்படுத்தி ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் அதிசய சிற்பங்களை வடிவமைத்திருக்கின்றார் பென்சில்வேனியாவைச் சேர்ந்த ஜாக் லோங்நெக்கர்.


இந்தச் சிற்பங்களை அமெரிக்காவில் இடம்பெற்ற போட்டி ஒன்றில் காட்சிப்படுத்தியன் மூலம் சுமார் 30,000 வாக்குகளைப் பெற்று 5,000 டொலரை பணப்பரிசாகத் தட்டிச்சென்றுள்ளார் அவர்.

# சைக்கிள் ஓட்டிய நாய்



நாய் ஒன்று இரண்டு காலில் எழுந்து நின்று சைக்கிளை செலுத்தி மக்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது. தனது முன் இரண்டு கால்களைக் கொண்டு சைக்கிள் கைப்பிடிகளைப் பற்றிப்பிடித்து அதனை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. இந்தச் சம்பவமானது அமெரிக்காவின் தென் கலிபோர்னியா பகுதியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்காக குறித்த நாய் 10 வாரங்கள் மட்டுமே பயிற்சி பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.


# நரிக்கு அடைக்கலம் கொடுத்த பூனைக்குட்டிகள்



வாகன விபத்து ஒன்றில் சிக்கியதன் காரணமாகத் தனது கண்பார்வையை இழந்த நரி ஒன்றுக்கு மூன்று பூனைக்குட்டிகள் தமது பாசத்தை பொழிந்து தம்முடன் ஒன்றாக இணைத்து வைத்திருக்கின்றன. பார்ப்பதற்கு அதிசயமாகவும், பரிதாபமாகவும் காணப்படும் இந்தக் காட்சியானது என்னதான் வீர தீரம் இருந்தாலும் சந்தர்ப்ப சூழ்நிலையில் நம்மிலும் பலவீனமானவர்களின் உதவியும் தேவைப்படும் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

# தொப்பி அணிந்த பூனைகள்





தாங்கள் வளர்க்கும் செல்லப் பிராணிகளை அலங்கரித்துப் பார்ப்பது எஜமானர்களுக்கு பிடித்தமான ஒன்று. அவ்வாறு வித்தியாசமான தொப்பிகளைக் கொண்டு எஜமானர்கள் தங்களது பூனைகளை இங்கு அலங்கரித்துள்ளனர்.

# உலகின் மிகப்பெரிய நீச்சல் தடாகம்



சிலி நாட்டில் சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமான நீச்சல் தடாகமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 20 ஏக்கர்களாகும். உலகின் மிகப் பெரிய நீச்சல் தடாகம் இதுவாகும். 115 அடி ஆழம் கொண்ட இந்த நீச்சல் தடாகத்தில் படகுகளையும் செலுத்த முடியும்

அல் க்ராபோ நகரிலுள்ள அல்போன்ஸோ டெல்மார் உல்லாச விடுதியில் பசுபிக் சமுத்திர கரையோரமாக இந்த நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நீச்சல் தடாகம் கின்னஸ் சாதனை நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# நிலத்துக்கு கீழ் நகரம்



தெற்கு ஆஸ்திரேலியாவில் ஒரு நகரம் நிலத்துக்கு கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நகரத்தில் வீடு, பாடசாலை, வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலை போன்றன காணப்படுகின்றன. மிக மோசமான வெப்பத்தின் காரணத்தால் இந்த நகரம் நிலத்துக்கு கீழ் அமைக்கப்பட்டுள்ளது. எந்த நேரமும் இந்த நகரம் குளிர்மையாகக் காணப்படும்.


இந்த நகரத்தைப் பார்வையிட உலகின் பல நாடுகளில் இருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைரேகை சாஸ்திரம் (தொடர்ச்சி)

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

5




ரேகை சாஸ்திரம் ஒரு கலை வடிவம். இங்கே நாம் கலைக்கும் விஞ்ஞானத் திற்கும் உள்ள வித்தி யாசத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானம் என்பது கட்டமைக்கப்பட்ட விதிகளும், அதனை நிருபணம் செய்யும் சோதனைகளும் கொண்டது. கலை என்பது அடிப்படை அம்சங்களை கொண்டது. ஆனால் அதைப் பயன் படுத்துவோர் பொருட்டு மாறுபடும். உதாரணமாக சோடியம் குளோரைடு என்ற உப்பை நீரில் அமிழ்த்தினால் கரையும் என்பது விஞ்ஞானம் கூறும் விதி. இதை உலகின் எந்த மூலையில் யார் செய்து பார்த்தாலும் நடைபெறும். காரணம் விஞ்ஞானம் மாறாதது.

ஓவியம் என்பது கலை. அடிப்படையில் எப்படியும் ஓவியம் வரையலாம் என்றாலும், உலகில் ஒரே விதத்தில் ஓவியங்கள் இல்லை. கலாசாரம், சூழலுக்கு ஏற்ப அது பெரும் கலைவடிவமாகத் திகழுகிறது.

ரேகை சாஸ்திரம் என்பதும் ஒரு கலை வடிவம் தான். அடிப்படை விதிகளை உணர்ந்துகொண்டு பயன்படுத்தத் தொடங்கினால் ஓவியம் போல பல வண்ணக் கலவையான மனிதர்களையும் அவர்களின் வாழ்க்கை நிலையையும் வெளிப்படுத்தும்.

மனித இனத்தின் தனித்துவமான அடையாளம் உடலில் உள்ள ரேகைகள். கைரேகைகள் ஒருவருக்கு இருப்பது போல மற்றொருவருக்கு அச்சு வார்த் தால் போல இருக்காது. இதனால் தான் மனித அடையாளக் குறியாக ரேகைகள் எடுத்தாள்ப்படுகிறது. வாகனம் தயாரிக்கும் நிறுவனம் எப்படி ஒவ்வொரு வாகனத்துக்கும் தனித்துவமான இயந்திர எண் தருகிறார்களோ, அதுபோல இயற்கை ஒவ்வொரு உயிருக்கும் தனித்துவமான அடையாளம் தருகிறது. அவ்வகையில் மனிதனின் தனித்துவமான அடையாளம் ரேகைகள்.

ஒவ்வொரு மனிதனின் மனோநிலை, செயல் நிலைக்கு ஏற்ப ரேகைகள் மாறுபடுகிறது. இதை உணர்ந்து ரேகை சாஸ்திரம் உருவாகியது. வேடிக்கையான விஷயம் என்னவென்றால், ரேகை சாஸ்திரத்தை உண்டாக்கியவர்களும் அதன் மூல வேராக இருந்தவர்களும் தமிழர்கள்.

குறிஞ்சி நில மக்களின் ஆதாரத் தொழிலாக ரேகை சாஸ்திரம் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. முருகப் பெருமானிடம் வள்ளியும், வள்ளியிடம் இருந்து பிற மனிதர்களும் கற்றார்கள் என்கிறது தமிழ்ச் செவிவழி கதைகள்.

**கை ரேகை சாஸ்திரம்**
**சுக்கிர வளையம்**

சுக்கிரவளையம் ஒரு உப ரேகை ஆகும். சுக்கிர வளையம் உள்ளவர்கள் காம வெறி பிடித்தவர்கள் என்று ஒரு வகையான கருத்து உண்டு.அது முழுமையான சரியான கருத்தாக இருக்காது. ஆனால் இந்த வகையான ரேகை இருப்பவர்கள் மிகக் குறைவான தொகையினர் என்று மட்டும் சொல்லலாம். 10 வீதம் ஆனவர்களுக்கு மட்டுமே இந்த வகையான ரேகை காணப்படும். அதுவும் மிகவும் தெளிவான சுக்கிர வளையம் உள்ளவர்கள் மிகக் குறைவு. அவ்வாறு தெளிவான சுக்கிர வளையம் உள்ளவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றுதான் கூற வேண்டும். இந்த மாதிரி ரேகை உள்ளவர்கள் கலைநயம் உள்ளவர்கள் , பல புகழ் மிக்க சத்திர சிகிச்சை நிபுணர்களிடம் இந்த வகையான ரேகையைக் காணலாம்.

ஆனால் இந்தச் சுக்கிர வளையம் அரை குறையாக அமைந்தவர்கள் காம வெறியர்களாகவும், குற்றவாளிகளாகவும் இருப்பார்கள். சுக்கிர வளையம் திருமண ரேகையை வெட்டினால் அவர்கள் மண வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாக இருக்கும்.

**ரேகைகளின் தன்மை**

ஒருவருடைய உடற்பலத்தையும் ஆயுளையும் குறிப்பது ஆயுள் ரேகை. புத்தியைக் குறிப்பது புத்தி ரேகை. அன்பைக் குறிப்பது இருதய ரேகை. தலையெழுத்தைக் குறிப்பது விதி ரேகை, இவை தவிர உப ரேகைகளில் சூரிய ரேகை முக்கியமானது. இந்த ரேகை ஒருவருடைய புகழ், வசியம் என்பவற்றைக் குறிக்கும். ஒருவரிடம் எவ்வளவுதான் திறமை இருந்தாலும், சூரியனின் கவர்ச்சி விசை இல்லாவிட்டால் வெளி உலகத்திக்கு அவருடைய திறமை தெரிய மாட்டாது.சிலருடைய கைகளில் இந்த ரேகை காணப்படமாட்டாது.அவ்வாறு அமையும் கைகளில் சூரியனின் கவர்ச்சி விசை குறைவாகவே இருக்கும். இனிப் பல்வேறு வகையான சூரிய ரேகைகளும் அவற்றுக்கான பலன்களையும் பார்ப்போம்.

சூரிய ரேகை பல இடங்களில் இருந்து ஆரம்பிக்கலாம். ஆயுள் ரேகையில் இருந்து ஆரம்பித்தால் அவர் வாழ்க்கைச் சக்கரத்தில் ரேகை ஆரம்பிக்கும் வயதில் இருந்து முன்னேற்றமும், விதி ரேகையில் இருந்து சுய முயச்சியால் முன்னேற்றமும் ஏற்படும்.

இருதய ரேகையில் இருந்து ஆரம்பித்தால் மனைவியால் அதிஷ்டம் ஏற்படும். புத்தி ரேகையில் இருந்து ஆரம்பித்தால் சமஜோசித புத்தியால் வெற்றி கிடைக்கும். செவ்வாய் மேட்டில் இருந்து ஆரம்பிக்கும் ரேகை பல பிரச்சினைகளை வாழ்வில் கொடுக்கும்.

சந்திர மேட்டில் இருந்து ஆரம்பிக்கும் ரேகை நல்ல கற்பனாசக்தியைக் கொடுக்கும். கவிஞர்களுக்கு இவ்வகையான ரேகை காணப்படலாம்.சூரிய ரேகை ஒருவருடைய திறமையையும், வெற்றியையும் குறிக்கும். ஒருவருக்குத் தடை இல்லாத சூரிய ரேகையும், நன்கு அமைந்த சூரிய மேடும் அமைந்தால் வாழ்க்கை மிகவும் பிரகாசமாக அமையும்.

சூரிய ரேகையில் தீவுக் குறி காணப்படுவது நல்லது அல்ல.ரேகையின் முடிவில் நட்சத்திரக் குறி காணப்படுவது மிகவும் அதிர்ஷ்டமானது.பெருக்கல் குறி காணப்படுவது சிறப்பானது அல்ல. சதுரக் குறி, பிரச்சினைகளிருந்து பாதுகாப்புப் பெறுவதைக் குறிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட சூரிய ரேகை காணப்பட்டால் பல தொழிலில் ஈடுபாடு காட்டுவார்கள்.

(தொடரும்)

## ஏ.டி.பியின் மிரட்டல்

கருத்துச் சுதந்திரம் இலங்கையில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அந்தக் கருத்துச் சுதந்திரம் பெரும்பாலும், பேரினவாத அரசியல் வர்க்கத்தினாலேயே தமிழர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் இதற்கு விதிவிலக்காக, தங்களது பதவிகளை காப்பாற்றவென சில தமிழ் அதிகாரிகளும் மக்களிடமிருந்து கருத்துச் சுதந்திரத்தை பறிக்க நினைக்கின்றனர்.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வரும் வலிகாமத்தின் பிரதேச செயலர் பிரிவு ஒன்றுக்கு, அண்மையில் வெள்ளைக்கார அம்மணி ஒருவர் சென்றிருக்கின்றார். அவரை அந்தப் பிரதேச செயலகத்தின் ஏ.டி.பியே சகல இடங்களுக்கும் அழைத்துச் சென்றிருக்கின்றார். அம்மணியும் சகல இடங்களையும் பார்வையிட்டதுடன் அந்தப் பிரதேசத்தில் உள்ள மக்கள் சிலரையும் சந்தித்திருக்கின்றார்.

ஏன்...
எதற்கு...
எப்படி?

வெள்ளைக்கார அம்மணி, அந்தப் பகுதியிலுள்ள ஆங்கில அறிவுள்ள பெண் ஒருவருடன் கதைத்திருக்கின்றார். அப்போது அந்தப் பெண், வெள்ளைக்கார அம்மணியிடம் இந்தப் பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் உரிய முறையில் ஏற்படுத்தித் தரப்படவில்லை என்றதுடன் மேலும் உள்ள குறைபாடுகள் அனைத்தையும் பட்டியலிட்டுச் சொல்லியிருக்கிறார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஏ.டி.பி மறுநாள் குறித்த பெண்ணைத் தனது பிரதேச செயலகத்துக்கு அழைத்து முறையாகக் கொடுத்து அனுப்பினாராம். வெள்ளைக்காரரைக் கண்டு நீங்கள் சொன்னாப்போல ஒண்டும் நடக்கப் போறதில்லை. நாங்கள்தான் ஏதாவது செய்யவேணும் என்று பொரிந்து தள்ளியிருக்கிறாராம். அதோட நீங்கள் இனி இப்படி சொன்னா ஆமியிட்டைச் சொல்லுவன் என்றும் சொல்லியனுப்பியிருக்கிறார்.

அந்தளவுக்கு அவர் விசுவாசமாக இருக்கக் காரணம், அவருக்கு வேலை எடுத்துக் கொடுத்தது தியேட்டர்க்காரராம். அதனால் தான் அவர் இவ்வளவு விசுவாசமாய் இருக்கிறார்.

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

உதயன் பத்திரிகையில் கடந்த 30.04.2012 அன்று தலையங்கப் பகுதியில் செய்திக்குப் பக்கமாகத் தீவை அரசியல் கட்சி ஒன்றின் பிடியிலிருந்து விடுவிக்கவும் எனவும், அரசியல் கட்சி ஒன்று மக்களை அடிமைத்தனமாக வைத்திருப்பதாகவும் செய்தி வெளியிட்டிருந்தீர்கள். இந்தச் செய்தியை நான் நெடுந்தீவைச் சேர்ந்தவன் என்ற வகையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

உதயன் பத்திரிகை உண்மையான செய்திகளை வெளியிட்டு மக்களுக்கு நல்ல வழிகாட்ட வேண்டிய நேரத்தில், உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு மக்களுக்கும், பத்திரிகா தர்மத்துக்கும் கேடு விளைவிப்பதாக அமைந்து விடும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சண்முகநாதன்

★ ★ ★

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் நடத்தும் மாபெரும் மருத்துவக் கண்காட்சிக்கு உதயன் ஊடாக அனுசரணை வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

மக்களுக்குப் பயனுடைய அறிவூட்டும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகளுக்கு உதயன் ஊடக அனுசரணை வழங்குவதே பொருத்தமானதாக இருக்கும் என நினைக்கிறேன்.

தொடர்ந்தும் இவ்வாறான பணியை உதயன் முன்னெடுக்க வேண்டும். வடக்கின் இவ்வாறான மக்களுக்குப் பயனுள்ள நிகழ்வுகளுக்கு உதயன் அனுசரணை வழங்கவேண்டும்.

இங்கு இன்னொரு விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். மருத்துவம், விஞ்ஞானம் ஆகிய துறைகளின் சிபார்சுகளுக்கு அமைவாக மருந்துகளும், மருத்துவப் பொருள்களும் கையாளப்படுவதே தற்போதைய காலத்தின் தேவையாகும். எனினும் ஊடகங்களில் சிலவேளை இந்த மரபுக்கு மாறான தகவல்கள் வெளிவருகின்றன. அவை தவிர்க்கப்பட வேண்டும்.

பார்த்தான்
காரைநகர்

★ ★ ★

முள்ளிவாய்க்கால் துயரம் தமிழர் வரலாற்றில் என்றும் மறக்கமுடியாத துயரமாகும். மூன்றாண்டு நினைவினை உதயன் பத்திரிகை பல பக்கங்களுடன் நினைவு கூர்ந்தமை தமிழராகிய எங்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

உதயன் தனது செய்திச் சேவையை தமிழர்களுடைய உரிமைக்காக பல வருடங்கள் கடந்தும் பல துன்பங்கள் கடந்தும் பயணித்து வருவது எமக்கு பெருமையளிக்கிறது.

ஆகவே இனிவரும் காலங்களில் சிங்களப் படைகளால் தமிழர்கள் ஈவிரக்கமின்றி அழித்த நாள்களை நினைவு கூரும் விதமாக அதற்கு முன்னுரிமை கொடுக்குமாறும் வேண்டிக் கொள்கிறோம். அப்பொழுதுதான் எமது மண்ணில் சிங்களப் படைகள் செய்த அட்டூழியங்கள் காலப்பதிவுகளாக அடுத்த சந்ததிக்கும் இட்டுச் செல்லப்படும் என்பதுடன் தமிழர்களின் விடுதலைக்கும் வழிவகுக்கும் என்பது உண்மை.

சேரன், கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழித்தவனின் கல்லறைக்கு மாலை போட்ட பெண்கள்

**1979** ஆம் ஆண்டு ஈரானில் இஸ்லாமியப் புரட்சியின் பின்னர் ஈரானியர் தமது சொந்த சகோதரங்கள், குடும்பத்தவர், அயலவர்களையே நம்பமுடியாத நிலை ஒன்று உருவாகியதாக ஒரு புத்தகத்தில் படித்த ஞாபகம் இருக்கிறது. ஈழத் தமிழர்களாகிய நாம் இன்று இப்படியான ஒரு சூழ் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். அதன் பால் செயல்பட்டு வருகின்றோம். நாம் குற்றவாளியோ சுற்றவாளியோ எதுவானாலும் உலகில் ஒதுங்கி வாழ வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளோம்.

40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் முள்ளிவாய்க்காலில் செத்தபோது அந்த மக்களின் நினைவுகூட இல்லாமல் போர் வெற்றி கொண்டாடிய சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு விடயமாக எந்த முயற்சியிலும் ஈடுபடாது என்பது வெளிப்படை.

சிங்களப் படைகள் போர் வெற்றிக் கொண்டாட்டங்களை கொண்டாடும் போது வட மாகாண சபையின் தமிழ் அரச அதிகாரிகள் போர்வெற்றி கொண்டாடியதுதான் எமது மண்ணுக்கு கிடைத்த சாபக்கேடாகும்.

**முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறீ இப்பொழுது வட மாகாண ஆளுநராக இருக்கிறார். அவர் இராணுவ தளபதியாக இருந்த நாள்களில் காகம் சுடுவது போல் யாழ்ப்பாணத்தில் சந்திக்கு சந்தி யாழ். இளைஞர்கள் சுடப்பட்டு வீசப்பட்டு செத்துக் கிடந்தார்கள். இந்த மக்களுக்குத் தான் சேவை செய்ய இராணுவ உடையை கழற்றிவிட்டு வெள்ளை வேட்டி கட்டி வந்திருக்கிறார்.** ஆனால் இவரின் செயற்பாடு வடமாகாண சபை அலுவலர்கள் எல்லோரிடமும் ஒரு பயபீதியை ஏற்படுத்தி இருக்கிறது. அவரின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. அதற்கேற்ப அரச அதிகாரிகளும் வளைந்து கொடுத்து தமது பதவியை தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழினம் முள்ளிவாய்க்காலில் செத்தும், மீண்டவர்கள் வாழ்வுக்கு மூன்றாண்டுகள் கழிந்து இன்றும் மீள முடியாமல் தவிக்கும் போது வடமாகாண சபையின் அம்மணிகள் போர் வெற்றியை பலாலி படைத்தலைமை அலுவலகத்தில் கொண்டாடி இருக்கிறார்கள். தமிழ்த் தாயின் மார்பில் பால் குடித்திருந்தால், தமிழ் தாயின் இரத்தம் அவர்களின் உடலில் ஓடியிருந்தால் இப்படியான காரியத்தில் இறங்கியிருக்க மாட்டார்கள்.

பதவிக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு சுய கௌரவம் இல்லாமல் விலை போக முடியுமா? இலங்கையில் உள்ள ஈழத் தமிழ் மக்களும், புலம்பெயர் வாழ் ஈழத் தமிழ் மக்களும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னர் ஒன்றுமே செய்ய முடியாமல் உள்ளனர். திறந்த வெளிச் சிறைச் சாலையில் அடைக்கப்பட்ட கைதிகள் போல் உலாவமுடியுமே தவிர பேச முடியாது. தோல்வியின் மேல் தோல்வி, ஏமாற்றம் அதிர்ச்சியில் இனிமேலும் நாம் தலைநிமிர முடியுமா என்ற கேள்விக் குறியுடன் ஏனோ தானோ என்று வாழ்க்கையை நடத்துகிறோம். இது சிங்கள அரசுக்கு நன்கு தெரியும். தமிழ் அரச அதிகாரிகளுக்குத் தெரியாதா?

ஈழப் பெண்களை மானபங்கப்படுத்திய **சிங்கள இராணுவத்தின் கல்லறைக்கு பூ எடுத்து வைத்து வணங்கும் பெண் அரச அதிகாரிகளுக்கு கை கூசவில்லையா? உலகிலேயே இலங்கையில்தான் தமிழ் பெண்கள் இறந்த பின்னும் சிங்களப் படைகளால் மானபங்கப்படுத்திய சம்பவங்கள் கூடுதலாக நடைபெற்றுள்ளன.**

தமிழ் நாடு சன் தொலைக்காட்சியில் கவிஞர் காசி ஆனந்தனை பேட்டி எடுத்த போது சன் தொலைக்காட்சியின் முன்னாள் இயக்குனர் ரமேஸ் பிரபா கவிஞர் காசி ஆனந்தனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். ''நீங்கள் ஏன் சினிமாவுக்கு பாடல் எழுதுவதில்லை'' என்று. அதற்கு அவரோ ''ஈழத்து பெண்களின் மார்பகங்கள் சிங்களப் படைகளால் வெட்டப்படும் போது எப்படி என்னால் சினிமாப் பாடல் எழுத முடியும்'' என்றார். ஈழத்து பெண்களுக்கு ஏற்படும் பிச்சினைகளைப் பார்த்து ஆண்கள் கலங்கும் போது இந்த அரச அதிகாரிகளான பெண்களால் முடியவில்லையே!.

ஈழத்து தமிழ்ப் பெண்களை மானபங்கப்படுத்திய சிங்களப் படைகளின் கல்லறைக்கு பூ போட்ட முதல் பெண்கள் உள்ள இடம் யாழ்ப்பாணம்தான். இராணுவ சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு, வாழ வேண்டிய வயதில் கருகிய மொட்டுக்களை எண்ண முடியாது, சோகங்களே மிஞ்சிக் கிடக்கும் ஈழத்தில் விடுதலை கேள்விக் குறியாகியுள்ளது. போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்தும் வலிகளைச் சுமந்து கொண்டிருக்கிறோம். வடக்கின் அபிவிருத்தி அறிக்கையோடு நிற்கிறது. மீளக்குடியமர்ந்த மக்கள் மேலும் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

போர் வெற்றிக்கு செலவு செய்த பணத்தை மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்தினால் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கும் உரிமை இருக்கிறது என நம்பியிருப்போம். **கடைசிப் போரில் மட்டும் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் செத்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் உடல் உறுப்புக்களை இழந்து தவிக்கிறார்களே, என்று சிறு துளியளவுகூட சிந்திக்காமல் போர்வெற்றியை கொண்டாடியிருப்பது இந்த நாட்டில் பிரிவினையை அரசு விரும்புவதாக தெரிகிறது.**

**விடுதலைப் புலிகளின் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள்** தடுப்பு முகாம்களில் இருந்து வெளியே வந்திருக்கிறார்கள். இவர்களின் வாழ்வு விடயத்தில் அரசு முழுப் பொறுப்பினை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் விரக்தி நிலையற்ற தமது வாழ்வின் இயக்கத்தில் அவர்கள் நிம்மதியாக வாழ முடியும். இல்லாது போயின் நிலமை கவலைக்கிடமாக இருக்கும். போரினால் சகலதையும் இழந்தும் நொந்து போய் இருக்கும் தமிழ் மக்களின் உரிமைகளை புறக்கணிக்க முடியும் என்று கனவிலும் அரசு நினைக்கக் கூடாது. தமிழர்கள் ஒவ்வொருவரது மனதிலும் தமிழீழக் கனவு இருந்தது. அதனால்தான் அந்தப் பேராட்டம் மூன்று தசாப்த காலம் தொடர உதவியாக இருந்தது.

பட்ட அறிவினை வைத்து வடமாகாண சபையின் தமிழ் அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாது போயின் சிங்கள அரசுக்கு சேவை செய்யும் மாடத்துப் பெண்கள் போலத்தான் இயங்க நேரிடும். பதவிகளுக்காகவும் பணத்துக்காகவும் எதையும் செய்யலாம் என்று நடைமுறையில் இருந்துவிடாதீர்கள். தமது பதவிக்கேற்ப மக்கள் சம்பந்தமான கருத்துப் பரிமாற்றங்களை துணிவுடன் செயற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பதவிக்கு மரியாதை இருக்கும்.

வடமாகாணத்தில் உள்ள அரச அலுவலகங்களின் தலைமைப் பதவிகளில் பெண்கள் அங்கம் வகிப்பது பெருமைக்குரியதுதான். அதேவேளை ஈழத்துப் பெண்களை கேவலப்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கி விடுவது பெண்களின் கலாசார பண்பாடுகளை இல்லாமல் செய்யும் நிலைக்கே சென்றுவிடும் என்பதே உண்மை. **ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் ஏந்தி போராடி வீழ்ந்த மண் இது. இந்த மண் புனிதமானது. பதவிக்காகவும் பணத்துக்காகவும் அது அசிங்கப்பட்டுப் போகக் கூடாது. எந்த உலக வரலாற்றிலும் இல்லாத கேவலமான செயற்பாடுகள் அரசால் வட மாகாணத்தில் மேற்கொள் எப்படுகின்றன. இது பெண்களால் இடம்பெறுவதுதான் கவலைக்குரிய விடயமாக இருக்கிறது. பதவியை எடுத்துக்கொண்ட பெண் அதிகாரிகள் அடுத்தபடியாக இன்னு மொன்றை எடுக்க வேண்டும். அதாவது துணிவினை. துணிவில்லாது போயின் பணியில் பல விளைவுகளை நாம் சந்திக்க நேரிடும். ஆகவே இனி வரும் காலங்களில் நாம் சிந்தித்து செயல்படுவோம். தமிழுக்கும், தமிழர்களுக்கும் தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளில் இறங்காமல் இருப்போம்.**

**■ பித்தன்**

# வருவதும் போவதும் தெரியாது

## ஒடுகாலி

நாளைக்கு வீட்டில் விஷேசம் என்பதால், ஆயத்தங்கள் தடல்புடலாக நடந்து கொண்டிருந்தன. பெரியதொரு பிளாஸ்ரிக் சட்டிக்குள் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக முக்குளித்துக் கொண்டிருந்த உழுந்து, மிக்சியில் அரைபடுவதற்கான தருணத்தை நினைத்து அழத்தொடங்கியிருந்தது.

வீடுமுழுக்க ஒரே அழுக்காக இருந்ததால் முழு வீட்டையும் கழுவ வேண்டும். பாத்திரங்களில் ஒட்டி உறவாடும் தூசுகளை அகற்ற அவற்றையும் குளிப்பாட்ட வேண்டும். வீட்டுக்கு முன்னால் நிற்கும் பூங்கன்றுகள் சூரிய வெப்பத்தோடு மல்லுக்கட்டி சோர்ந்து போயிருந்தன. அவற்றுக்கு தண்ணீர் பாய்ச்சி உற்சாகமூட்டவேண்டும். இவற்றுக்கெல்லாம் மோட்டர் மூலம் தண்ணீர் இறைக்க கறண்ட் 'கட்' ஆகாமல் இருக்க வேண்டும்.

வீட்டில் இருந்த பெரியவர் பேப்பரைப் பார்த்தார். அயற்கிராமங்களில் அன்றைக்கு மின்வெட்டு இருந்த போதும் அவர்களது கிராமம் அந்தப் பட்டியலில் இருந்து தப்பிப்பிழைத்திருந்தது. எனவே மின்சாரத்தை பற்றிக் கவலைப்படாமல் வேலையைத் தொடங்கி விட்டார்கள். வீடு கழுவும் படலம் விரைவாய் நடந்து கொண்டிருக்கையில், மிக்சிக்குள் உழுந்து அரைபட்டு அவலத்தோடு கத்தத் தொடங்கியிருந்தது. ஆனாலும் அன்றைக்கு அந்த உழுந்துக்கு நல்லகாலம் போலும். சட்டென எட்டரைக்கு நின்றுபோனது மின்சாரம். எந்த முன்னறிவித்தலும் இல்லாமல் நிகழ்ந்த இந்த தாக்குதலில் வீடே நிலைகுலைந்து போனது.

மிக்சிக்குள் போட்ட உழுந்தை எப்படி வெளியே எடுப்பது என்று யோசித்ததிலேயே அரைநாள் கழிந்து போனது. வீடு கழுவியது பாதி கழுவாதது பாதியாக பார்ப்பதற்கு என்னவோ போல் இருந்தது. தொட்டிக்குள்ளும் தண்ணீர் இல்லை. நாளைக்கு என்ன செய்வது? என்று யோசித்தவர்கள் மின்சாரசபைக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார்கள்.

''ஹலோ!'' அலுப்போடு ஒரு குரல்.

''அண்ணை! நாங்கள் தாவடியில் இருந்து கதைக்கிறம். இண்டைக்கு இங்கால கரண்ட் வெட்டு இல்லை எண்டு அறிவிச்சுப் போட்டு இப்பநிப்பாட்டிப் போட்டீங்கள். வருமோ? வராதோ?'' அங்கலாய்ப்போடு வீட்டுக்காரர்கள் தொலைபேசி வழியே தங்கள் நிலையை எடுத்துரைத்தார்கள்.

''இல்லையே! உங்கட பக்கமும் இண்டைக்கு கரண்ட் கட்தான். 'கொக்குவிலின் ஒரு பகுதி' எண்டு போட்டனாங்கள்தானே. தாவடியும் கொக்குவிலின் ஒரு பகுதி தான்'' என்று விரிவான விளக்கம் ஒன்றைக் கொடுத்தார் அந்த ஊழியர். கேட்டவர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பேசாமல் போனை வைத்து விட்டு 'தாவடி கொக்குவிலுக்கு அண்மையில் இருப்பது தெரியுமே தவிர அதன் ஒரு பகுதியாக எப்போது மாறிப்போனது?' என்று ஒரு பட்டிமன்றமே நிகழ்த்தத் தொடங்கினார்கள். ஏனெனில் இதற்கு முன்னர் மின் தடை பற்றிய அறிவித்தல் வந்தபோது 'கொக்குவில், தாவடி போன்ற பகுதிகளில்' என்று இரண்டு இடங்களையும் பிரித்துக் காட்டியிருந்தார்கள். இப்போது எதற்கிந்த பிரிவினை என்று நினைத்து கொக்குவிலுக்கும், தாவடிக்கும் 'லிங்க்' கொடுத்து விட்டார்கள் போலும் என்று எண்ணி தம்மைத் தாமே சமாதானப் படுத்திக் கொண்டார்கள்.

இயந்திரக் கோளாறு, பாதையகலிப்பு, திருத்த வேலைகள், புதிய மின்மார்க்க அமைப்பு, லக்ஷபான மின்மார்க்கத்துக்கான பெரிய தூண்களை நிறுவுதல் என்று ஏராளமான காரணங்களுக்காக குடாநாட்டில் ஒன்று விட்ட ஒரு நாள் மின் தடை நடைமுறையில் இருக்கிறது. யாழ்ப்பாணம் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து பதினாறு வருடங்கள் கழிந்து விட்டபோதும் மின்சாரம் மட்டும் யாருடைய கட்டுப்பாட்டுக்குள்ளும் நில்லாமல் தன் பாட்டுக்கு வருகிறது; போகிறது. பள்ளிக்கூடம் போவதற்கு மனமில்லாத பிள்ளைகள் ஒவ்வொரு சாட்டைச் சொல்லி 'கட்' அடிப்பதைப் போல, சீரான மின்சாரத்தை மேற்கொள்ளாததற்கு பதினாறு வருடங்களாக ஏதேனும் ஒரு நொண்டிச் சாட்டைக் கண்டுபிடித்து வருகிறது மின்சார சபை.

தற்போது மக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம், அவர்கள் முன் ஆயத்தத்தோடு இருக்கும் வகையில் மின் தடைபற்றிய அறிவித்தல்களை மின்சார சபை வெளியிட்டாலும்கூட அதிலும் ஏகப்பட்ட குளறுபடிகள். சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட, அந்தப் பகுதிகளில் வழமையை விடவும் அன்றைக்குத்தான் சீரான மின்விநியோகம் இடம்பெற்றிருக்கும். அதேபோல மின் தடை பட்டியலுக்குள் வராத பகுதிகள் சொல்லிக் கொள்ளாமல் பகலிலேயே இருண்டு போகும் வண்ணம் மின்சாரம் அந்தப் பகுதிக்கு 'நுழையாப்போராட்டம்' நடத்தும். ஏறக்குறைய வளிமண்டலவியல் திணைக்களம் மழை வராது என்று எதிர்வு கூறினால் அன்றைக்கு மழை அடித்துக் கொட்டுவது போல மின்சார சபையின் மின்தடை அறிவித்தல்கள் மாறிவிட்டன. இத்தகைய மாறுபட்ட அறிவித்தல்களால் பல அசம்பாவிதங்களும் நிகழ்ந்துள்ளன. மின் தடை நடைமுறையில் இருப்பதாக நம்பிக் கொண்டு வீதியோரங்களில் மின் கம்பிகளுக்கு இடையூறாக வளர்ந்துள்ள வேலியில் உள்ள மரக்கொப்புகளை வெட்டி அப்புறப்படுத்த நினைத்த சிலர், திடீரென கனவு கண்டு விட்டு வந்த மின்சாரத்தால் தாக்குண்ட சம்பவங்களும் உண்டு. அதேபோல மின் தடை இருக்கும் போது பணியாற்றிக் கொண்டிருந்த மின்சார சபை ஊழியர்கள் கூட இவ்வாறு திடீரென வந்த மின்சாரத்தால் தாக்குண்டு உயிரிழந்து போயும் உள்ளார்கள்.

மின்சாரக் கட்டணத்தை பல மடங்கு உயர்த்தி, அதை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால் அதற்கு வட்டியும் விதித்து, சிவப்பு அறிவித்தலை அனுப்பி 'பேதியைக்' கொடுத்து காசில் மட்டும் கண்ணாயிருக்கும் மின்சார சபை, மின்சாரத்தை சீராக வழங்கா விட்டாலும், 'கரண்ட்'எப்போது வரும், எப்போது போகும் என்றாவது சீராகச் சொல்லலாம்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகத்துவம் மிக்கது காளான்



காளான் மழைக் காலங்களில் மட்கிப்போன பொருள்களின் மீது வளரும் ஒருவகை பூஞ்சையினமாகும். இயற்கையாக வளரும் இவற்றை சிலர் பிடுங்கி எறிந்திடுவர். ஆனால், இந்தியா முதற் கொண்டு பல நாட்டவரால் விரும்பி உண்ணப்படும் உணவாக உள்ளது. இயற்கையாய் வளரும் காளான்களில் சில விஷமுள்ளதாகவும், சில விஷமற்றதாகவும் வளரும். விஷக் காளான்கள் துர்நாற்றம் வீசக் கூடியதாகவும், அதிக வண்ண முடையதாகவும் இருக்கும். காளான் வளர்ப்பு சிறந்த வருவாய் ஈட்டித்தரும் எளிய தொழிலாக உள்ளது. இதனை தமிழ் நாட்டில் பல இடங்களில் குடிசைத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். காளான் மிகுந்த சுவையுள்ளதாகவும், மிகுந்த சத்துக்கள் கொண்டதாகவும் இருப்பதோடு மிகுந்த மருத்துவப் பயன் கொண்டதாக உள்ளது. காளான் இதயத்தைக் காக்கும் அற்புத உணவாகும். இந்தியாவில் 8 வகையான காளான்கள் உள்ளன. இவற்றுள் மொக்குக் காளான், சிப்பிக் காளான், வைக்கோல் காளான் என்ற மூன்று வகை மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

காளான் இரத்தத்தில் கலந்துள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. இதனால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் கொழுப்பு அடைப்பைத் தடுக்கிறது. காளானில் உள்ள லென்ட்டைசின் எரிட்டிடைனின் என்ற வேதிப் பொருள்கள் இரத்தத்தில் கலந்துள்ள ட்ரை கிளிசரைடு பாஸ்போலிட் போன்றவற்றை வெகுவாகக் குறைக்கிறது. இதில் எரிட்டினைன் கொழுப்புப் பொருள்களை எந்த வித பாதிப்பும் இல்லாமல் இரத்தத்திலிருந்து வெளியேற்றி பிற திசுக்களுக்கு அனுப்பி உடலை சமன் செய்கிறது. இவ்வாறு உடலில் அதிகம் தேவையில்லாமல் சேரும் கொழுப்பு கட்டுப்படுகிறது. இதனால் இரத்தம் சுத்தமடைவதுடன் இதயம் பலப்பட்டு நன்கு சீராக செயல்படுகிறது. இதயத்தை பாதுகாப்பதில் காளானின் பங்கு அதிகம். பொதுவாக உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்போது உட்புறச் செல்களில் பொட்டாசியத்தின் அளவு குறையும். வெளிப்புறச் செல்களில் உள்ள சோடியம், உட்புறமுள்ள பொட்டாசியத்திற்கு சமமாக இருக்கும். இரத்த அழுத்தத்தின் போது வெளிப் புறத்தில் சோடியம் அதிகரிப்பதால் சமநிலை மாறி உட்புறத்தில் பொட்டாசியத்தின் அளவு குறைகிறது. இதனால் இதயத்தின் செயல்பாடு மாறிவிடுகிறது. இத்தகைய நிலையைச் சரி செய்ய பொட்டாசிய சத்து தேவை. அவை உணவுப் பொருள்களின் மூலம் கிடைப்பது சாலச் சிறந்தது. அந்த வகையில் பொட்டாசியம் சத்து அதிகம் உள்ள உணவு காளான்தான். 100 கிராம் காளானில் பொட்டாசியம் சத்து 447 மி.கி. உள்ளது. சோடியம் 9 மி.கி உள்ளது. எனவே இதயத்தைக் காக்க சிறந்த உணவாக காளான் உள்ளது. மேலும் காளானில் தாமிரச்சத்து உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. தாமிரச்சத்து இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பை சீர்செய்யும். காளான் மூட்டு வாதம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணியாகும். மலட்டுத்தன்மை, பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்கள் போன்றவற்றைக் குணப்படுத்துகிறது. தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்று நோய் தடுக்கப்படுவதாக காளான் பற்றிய சமீபத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். 100 கிராம் காளானில் 35 சதவீதம் புரதச்சத்து உள்ளது. மேலும் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உள்ளதால், குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு சிறந்த ஊட்டசத்தாக அமைகிறது. எளிதில் சீரணமாகும் தன்மைகொண்டது. மலச் சிக்கலைத் தீர்க்கும் தன்மை கொண்டது. கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உடல் இளைத்தவர்கள் தினமும் காளான் சூப் அருந்தி வந்தால் விரைவில் உடல் தேறும். காளானை முட்டைகோஸ், பச்சைப் பட்டாணியுடன் சேர்த்து சமைத்து அருந்தி வந்தால் வயிற்றுப்புண், ஆசனப்புண் குணமாகும். காளான் தாய்ப் பாலை வற்றவைக்கும் தன்மை கொண்டதால் பாலூட்டும் பெண்கள் காளான் உண்பதைத் தவிர்ப்பது நல்லது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொய்யாவின் சுவையே தனி



கொய்யா வீட்டுத் தோட்டங்களிலும் வயல் வரப்புகளிலும் வளர்க்கப் படும் மரவகையாகும். இது இந்தியா, இலங்கை, மியான்மர் நாடுகளில் அதிகம் வளர்க்கப்படுகிறது. இதற்கு ஜாம்பலா, கோவா, பலாம்பர் என்ற பெயர்களும் உண்டு.

இதன் கிளைகள் வழுவழுவென்று காணப்படும். இலைகள் தடித்து காணப்படும். கொய்யாக்கனி அதிக மருத்துவக் குணம் கொண்டது.

கொய்யா, முக்கனியான மா, பலா, வாழை இவற்றிற்கு இணையாக வர்ணிக்கப்படும் பழமாகும். மிகக் குறைந்த விலையில் அதிக சத்துக்களைத் தன்னகத்தே கொண்ட பழம் இது.

கொய்யாப்பழம் கோடை காலங்களில்தான் அபரிமிதமாக விளையும். தற்போது உயிரி தொழில் நுட்ப முறையில் வருடம் முழுவதும் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வருகிறது.

கொய்யாவில் பலவகைகள் உள்ளன. இதன் பழங்கள் சிலவகை தடித்த தோலுடனும், சிலவகை மெல்லிய தோலுடனும் காணப்படும்.

தற்போது விற்பனைக்கு வரும் பழங்களில் உள் சதைப் பகுதி வெள்ளை மற்றும் சிவப்பு நிறங்களில் உள்ளன. ஒருசில வகை கொய்யாவின் சதைப்பகுதி ரோஸ் நிறத்தில் காணப்படும். இவை அனைத்தின் மருத்துவப் பயனும் ஒன்றுதான்.

கொய்யாக்கனியின் சுவையைப் போல் அதன் மணமும் ரம்மியமாக இருக்கும். இதில் அதிகளவு விற்றமின் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன. குறிப்பாக நெல்லிக் கனிக்கு அடுத்த நிலையில் விற்றமின் சி சத்து கொண்ட பழம் கொய்யா தான்.

**மலச்சிக்கல் தீர**

மலச்சிக்கல்தான் நோயின் ஆரம்பம். அனைத்து நோய்களின் தாக்கமும் மலச்சிக்கலில் இருந்துதான் ஆரம்பிக்கும். மலச்சிக்கலைப் போக்கினாலே நோயில்லா நல்வாழ்வு வாழலாம் என்பது சித்தர்களின் கூற்று. நன்கு கனிந்த கொய்யாப் பழத்தை இரவு உணவுக்குப் பின் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் நீங்கும். குடலின் செரிமான சக்தி அதிகரிக்கும்.

**வயிற்றுப் புண் ஆற**

இன்றைய உணவுகளில் அதிகம் வேதிப் பொருள்கள் கலந்திருப்பதால் அவை அஜீரணத்தை உண்டாக்கி வயிற்றுப் புண்ணை ஏற்படுத்துகிறது. இதனைப் போக்க உணவுக்குப் பின் கொய்யாப்பழம் சாப்பிடுவது நல்லது. மூல நோயின் பாதிப்பு உள்ளவர்கள் இப்பழத்தை தொடர்ந்து உண்டு வந்தால் மூலநோயிலிருந்து விடுபடலாம்.

**கல்லீரல் பலப்பட**

உடலின் சேமிப்புக் கிடங்கான கல்லீரல் பாதிக்கப்பட்டால், உடலின் பித்தத்தின் தன்மை மாறுபடும். இதனால் உடல் பல பாதிப்புகளுக்கு உள்ளாக நேரிடும். இதைத் தவிர்த்து கல்லீரலைப் பலப்படுத்த கொய்யாப்பழத்தை அடிக்கடி சேர்த்துக் கொள்வது நல்லது.

**நீரிழிவு நோயாளிகளுக்கு**

நீரிழிவு நோயின் தாக்கம் கண்டாலே அதைச் சாப்பிடக் கூடாது இதைச் சாப்பிடக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் பாடாய் படுத்தும். ஆனால் நீரிழிவு நோயாளிகளுக்கு உண்டாகும் பாதிப்புகளைக் குறைக்க கொய்யாப்பழம் உகந்தது. மேலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும் தன்மையும் இதற்குண்டு.

**இரத்தச்சோகை மாற**

இரத்தத்தில் இரும்புச் சத்துக் குறைவதால் இரத்தச்சோகை உண்டாகிறது. இன்று இந்தியக் குழந்தைகளில் அதுவும் பெண் குழந்தைகளில் 63.8 சதவீதமான குழந்தைகள் இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. இக்குறையை பழங்களும் கீரைகளும் நிவர்த்தி செய்யும். இதில் குறிப்பாக கொய்யாப்பழம் இரத்தச் சோகையை மாற்றும் தன்மை கொண்டது.

**இதயப் படபடப்பு நீங்க**

ஒரு சிலருக்கு சிறிது வேலை செய்தால் கூட இதயப் படபடப்பு உண்டாகிவிடும். உடலில் வியர்வை அதிகம் தோன்றும். இது இதய நோயின் அறிகுறியாகக்கூட அமையலாம். இந்த படபடப்பைக் குறைக்க கொய்யாப்பழம் மிகவும் உகந்தது. இதய படபடப்பு உள்ளவர்கள் தினம் ஒரு கொய்யாப்பழம் உண்பது நல்லது.

**குழந்தைகளின் வளர்ச்சிக்கு**

குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தேவையான விட்டமின் சி சத்து கொய்யாப் பழத்தில் அதிகம் உள்ளது. குழந்தைகளுக்கு அளவோடு கொய்யாப் பழத்தைக் கொடுத்து வந்தால் குழந்தைகளின் எலும்புகள் பலப்படும். பற்கள் பலமடையும். நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும். குழந்தைகளுக்கு அறிவுத்திறன் அதிகரிக்கும். சொறி, சிரங்கு போன்ற சரும நோய்களைக் குணப்படுத்தும் தன்மை கொய்யாவுக்கு உண்டு. நரம்புகளைப் பலப்படுத்தும். உடலின் உஷ்ணத்தைக் குறைக்கும்.

**கொழுப்பைக் குறைக்க**

அதிக இரத்த அழுத்தம், அதிக கொழுப்பைக் குறைக்கும் தன்மை கொய்யாவுக்கு உண்டு. தினமும் இரண்டு கொய்யாப்பழம் உண்டு வந்தால் கொலஸ்ரோல் குறையும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.


றைனோ சுப்பர்மெற்
உங்களுக்கான சிங்க் அலுமினியத் தேவைகள் அனைத்திற்கும்

கூரைத்தகடுகள்


வளைவுத் தகடுகள்



கேற்றுக்கள்

வடிகால்,உபபாகங்கள்


இணையற்ற விசேட நன்மைகள்

- மிக உயர்ந்த தரம்
- பல்வேறு நிறங்களில், தடிப்பத்தில், வடிவங்களில், அமைப்புக்களில் கிடைக்கும்
- விரயத்தைத் தவிர்க்க பொருத்தமான அளவுகளில்
- முழுத் தேவைக்குமான உபபாகங்கள்
- நாடுமுழுவதிலுமுள்ள பதிவு செய்துள்ள விநியோகஸ்தர்கள் மூலமாக சுலபமாகக் கிடைக்கும்
- இலவச தொழில்நுட்ப ஆலோசனை
- விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
- முன் பூச்சிடப்பட்ட உலோக அமைப்பு
- வெடிப்பு, நிறமாற்றம், அரிப்பு ஆகியவற்றை தவிர்க்கும் உத்தரவாதம்

55% அலுமினியம் சிங்க் அலோய் முலாமிடப்பட்டது
AZ 150, Hi-tensile (Grade 550) Steel


RHINO
SUPERMET
கூரையிலிருந்து பீலிக்கும்... பீலியிலிருந்து கேற்றுக்கும்

ISO: 9001-2008
0.20மி.மீற்றர் தடிப்புடைய 1 அடி நீளம் ரூ.111 இலிருந்து

றைனோ றூஃபிங் ப்ரொடக்ஸ் லிமிட்.
732, பேஸ் லைன் வீதி, கொழும்பு 9.
இணையத்தளம்: www.rhinosupermet.com
மின்னஞ்சல்: corporatesales@rhino.lk

உங்கள் தொடர்புகளுக்கு
5748728/5748738

HOLMES POLLARD & STOTT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org